


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1251.
கா. பரணீதரன்
2007-09-08

K. Bhavanetharan
EDITOR
'JEEVANATHY'
KALAI AHAM
ALVAI (N.P.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. Bharaneetharan
EDITOR
"JEEVANATHY"
KALAI AHAM
ALVAI (N.P.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடைக்காற்று

செங்கை ஆழியான்

வெளியீடு:
பூபாலசிங்கம் பதிப்பகம்,
340 செட்டியார் தெரு,
கொழும்பு 11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'Vaadai Kaattu'**

by

Dr. K. Kunarasa

(Sengai - Aaliyan)

**First Edition:**

November, 1973

(Published by: Virakesari,
P.O. Box 160,
Colombo)

**Second Edition:**

January, 2001

(Published by: Poobalasingam Book Depot,
Colombo/Jaffna

Price : } **125/-**
விலை : }

**<u>Sole Distributors:</u>**

**Poobalasingam Book Depot**

340, Sea Street, Colombo 11.

Branches: Wellawatte / Jaffna

**Printed by:**

**Unie Arts (Pvt) Ltd.,**

48B, Bloemendhal Road,

Colombo 13. Tel.: 330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

ஈழத்தின் புகழ் பூத்த எழுத்தாளர் செங்கை ஆழியானின் 'வாடைக்காற்று' என்ற நவீனத்தை எமது வெளியீடாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இதனைத் தொடர்ந்து செங்கை ஆழியானின் நூல்கள் அனைத்தையும் வெளியிடுவதற்கான திட்டம் உள்ளது. ஈழத்தில் இதுவரை வெளிவந்த எண்ணிக்கையில் ஐநூறுக்கு சற்று மேல் கீழான நாவல்களில் முப்பத்தைந்து வரை செங்கை ஆழியானுடையவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'வாடைக்காற்று' நவீனம் செங்கை ஆழியானுக்குப் பரந்த வாசகர் கூட்டத்தைச் சேர்த்து தந்த நூலாகும். நெடுந்தீவின் புவியியற் பின்னணியில், ஆக்கவிலக்கிய கர்த்தாவின் மனதில் நடமிட்ட வெவ்வேறு பிரதேசக் கதாபாத்திரங்கள் முழுவடிவம் பெற்று இந்த நாவலை நகர்த்திச் செல்கின்றன. யதார்த்தத்திற்கும் கலாரூபமான கற்பனைக்கும் இடைப்பட்ட சிருஷ்டி இந்த நாவல் என்பது எனது கருத்து. சமூகம் சார்ந்த, தொழில் சார்ந்த அவதானிப்புகளும் விபரங்களும் இந்த நாவலுக்கு அணி சேர்க்கின்றன. இலங்கை இலக்கியவுலகில், 1974களில் அதிக தூரம் விமர்சனப் பிரச்சினைக்குள்ளான நாவல் இது. இதனை இன்றைய வாசகர்களுக்கு பதிப்பித்து வழங்குவதில் மகிழ்கின்றோம்.

பூ. ஸ்ரீதர்சிங்
பதிப்பாளர்

பூபாலசிங்கம் பதிப்பகம்
கொழும்பு, யாழ்ப்பாணம்
01.12.96

செட்டிக்குளம் கிராமசபைத் தலைவர்,
சமூகத்தொண்டர், என்னினிய நண்பர்
**அமரர் பொ. செல்வநாயகம்**
அவர்களுக்கு இந்நூல் 'சமர்ப்பணம்'

- செங்கை ஆழியான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

1974, மாசி 22 ஆந் திகதி செட்டிக்குளம் விழாக்கோலம் பூண்டது. பிரதான வீதியின் இருமருங்கும் பூரண கும்பங்கள் வைத்து மங்கல விளக்குகள் ஏற்றி மக்கள் நிறைந்து நின்றனர். இரசிகமணி கனக செந்திநாதன், டொமினிக் ஜீவா, கே. டானியல், வன்னியூர்க் கவிராயர், செம்பியன் செல்வன், மாதகல் செல்வா முதலான எழுத்தாளர்கள் என்னுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். ஆம். என்னால் எழுதப்பட்டு வீரகேசரியால் பதிப்பிக்கப்பட்ட 'வாடைக்காற்று' நவீனத்திற்க்குச் செட்டிக்குள மக்கள் விழா எடுத்து வெளியிட்டு வைத்தனர். செட்டிக்குளத்தில் நடந்தேறிய வெளியீட்டு விழா போன்று ஒரு வெளியீட்டு விழா இலங்கையில் நடந்தேறியிருக்காது என நம்புகின்றேன். இந்த வெளியீட்டு விழாவினை அமரர் பொ. செல்வநாயகம் (செட்டிக்குளம் கிராம சபைத்தலைவர்) அமைப்பாளராகவிருந்து ஒழுங்கு செய்திருந்தார். 'இந்த விழா ஈழத்து இலக்கியத்தையும் ஈழத்து எழுத்தாளர்களையும் கௌரவிப்பதற்காக எடுக்கப்பட்ட பெரு விழா' எனக் குறிப்பிட்டார்.

'வாடைக்காற்று' வெளியீட்டு விழாவில் செட்டிக்குள மக்கள் காட்டிய ஆர்வமும் எழுத்தாளர்களைக் கௌரவித்த முறையும் அமரர் இரசிகமணி கனக செந்திநாதனைப் பிரமிக்க வைத்ததுடன் நெகிழ்ந்தும் போனார். ஈழத்து இலக்கிய உலகில் ஈழத்தில் பூதந்தேவனார் தொடக்கம் செங்கை ஆழியான் வரை ஒரு இலக்கிய வரலாறு உண்டு. 'வாடைக்காற்று' என்ற இந்த நவீனம் நாவல் முறையில் ஒரு மைல்கல் என்று குறிப்பிட்டார்.

'வாடைக்காற்றினை' நெடுந்தீவின் புவியியற் பின்னணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எழுதினேன். நெடுந்தீவின் அழகும் தனித்துவமும் என்னை மிகவும் கவர்ந்தன. அப்பின்னணியில் ஒரு நாவலை உருவாக்க விளைந்ததன் அறுவடையே வாடைக்காற்று ஆகும். வெவ்வேறு பிரதேசங்களில் நான் சந்தித்த கதாபாத்திரங்களை நெடுந்தீவுப் பகைப்புலத்தில் வைத்து 'வாடைக்காற்றை' ஆக்கினேன். ஆரம்பத்தில் நான் எனது முதுமலை மாணிப்பட்டத்திற்காக மன்னாரில் இருந்து முல்லைத் தீவு வரையிலான மீன் பிடித் தொழில்பற்றி ஆய்வினை மேற்கொண்டிருந்தேன். அதனால் மீன்பிடித் தொழிலின் நுட்பங்கள் கதையோடு இணைந்து இந்த நாவலின் அவதானிப்பு விபரணமாகியுள்ளது.

ஈழத்து நாவல்களில் பெரும் சர்ச்சைகளுக்கும் சிக்கல்களுக்கும் 'வாடைக்காற்று' நாவல் ஆட்பட்டது போன்று வேறு எந்த நாவலும் ஆட்பட்டதில்லை. வாடை பெயர்ந்ததும் பேசாவலை, கரையூர் முதலான பகுதிகளிலிருந்து மீனவர்கள் நெடுந்தீவுக் கடற்கரைக்கு மீன் பிடிக்க இடம் பெயர்ந்து வருகிறார்கள். அக்காலத்தில் ஆயிரக்கணக்கான கிலோ மீற்றர்களுக்கு அப்பாலிலிருந்து பெலிகன் எனப்படும் கூழைக்கடாக்களும் இடம்பெயர்ந்து இத்தீவிற்கு வருகின்றன. வாடைக்காற்றோடு இத்தீவிற்கு வரும் கூழைக்கடாக்கள் கதையோடு உருவகப்படுத்தப்படுகின்றன.

'வாடைக்காற்று' நாவலுக்கு 17-3-1974 ஆம் திகதி வீரகேசரியில் 'அலசையன்' என்ற ஒரு விமர்சகர் மதிப்புரையொன்று எழுதியிருந்தார். வாடைக்காற்றினை புயற்காற்றாக மாற்றியது இந்த மதிப்புரையே. 'கதைக்கு இத்தீவு களமாக அமைந்ததிற்கிணங்க அங்குள்ள பகிறு வேலிகளையும், போர்த்துக்கேயர் என்றோ விட்டுப் போன குதிரைகளின் வாரிசுகளையும், வாடை பெயர்ந்ததும் வந்து குவியும் கூழைக்கடாக்களையும் பற்றிக் குறிப்பிடும் கதாசிரியர் இத்தீவில் காணப்படும் போர்த்துக்கேயப் பண்புகள் உள்ள சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தால் களத்தின் பெருமை இன்னும் சிறப்புற்றிருக்கும்' எனத் தனது வீரகேசரி பதிப்புரையில் குறித்திருந்தார். கதாசிரியன் எழுதாத ஒன்றினை எழுதியிருக்க வேண்டுமென அலசையன் குறிப்பிட்டமை, நெடுந்தீவு மக்களின் கண்டனமாக வெளிப்பட்டது. ஆதனால் வீரகேசரி, 1.9.74இல், அலசையனின் மதிப்புரை வாக்கியங்களுக்காக முதற்பக்கத்தில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டது. இப்பிரச்சினையை வளர்க்க விரும்பாத நான், 'எவ்வகையிலாவது வாடைக்காற்று நெடுந்தீவு மக்களது மனதைப் புண்படுத்தியிருந்தால் வருத்தத்துடன் மன்னிப்புக் கோருகிறேன்' என எழுதி இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கநேர்ந்தது. இத்தகைய ஆக்ரோஷமான ஒரு கண்டனத்தினை ஈழத்தில் எந்த ஒரு நாவலும் பெறவில்லை.

வாடைக்காற்று நாவல் திரைப்படமாக வெளிவந்தமை இந்த நவீனத்தைப் பொறுத்த வரையில் குறிப்பிடத்தக்க ஓர் அம்சம். வாடைக்காற்று நூற்பதிப்பொன்றினை அமரர் பேராசிரியர் கைலாசபதிக்கு அனுப்பிவைத்தேன். 'நீர் அனுப்பி வைத்த நூற்பிரதி கிடைத்தது. எமது இலக்கியத் தொகுதிக்கு இன்னுமொரு பங்களிப்பாக அமையும் என எண்ணுகிறேன். உமது நாவல் பற்றிய விமர்சனம் 26ஆம் திகதி வியாழக்கிழமை 9.30 மணிக்கு வானொலியில் ஒலிபரப்பாகவுள்ளது. விசதியிருப்பின் கேட்டுப் பார்க்கவும்' எனக் குறித்து ஒரு கடிதம் எழுதியிருந்தார். கேட்டுப்பார்த்தேன். அதில் அவர் இறுதியில், 'விமர்சனத்திறகு மேல் விமர்சனம் தேவையில்லை. ஆனால் எனக்கு ஒன்றுமட்டும் சொல்லத் தோன்றுகிறது. ஈழத்தில் தமிழ்த்திரைப்படம் எடுப்பதற்கு யாராகிலும் நல்ல கதையொன்று தேடிக் கொண்டிருந்தால் இந்த நவீனத்தை ஒரு முறை படித்துப் பாருங்கள் என்று சொல்வேன்' என முடித்திருந்தார். நாடகக் கலைஞர் ஏ. ரகுநாதன் என்னைத் தேடிவந்தார். கமலாயம் மூவிஸ் உரிமையாளர் ஏ. சிவதாசன், பா. சிவசுப்பிரமணியம் ஆகியோர் வாடைக்காற்றைத் திரைப்படமாக்கினர். சிறந்த திரைப்படத்திற்கான ஜனாதிபதி விருதையும் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் திரைப்பட வரலாற்றில் குறிப்பாகத் தமிழ்த் திரைப்பட வரலாற்றில் வாடைக்காற்று பெரிதும் வித்தியாசமான படந்தான். இலங்கையில் பலதடவைகள் திரைப்பட விழாக்களில் கலைஞர்களுக்காக காட்டப்பட்டது. அவ்வேளை இந்தியாவிலிருந்து இலங்கைக்குத் தனது நாடகக் கம்பனியுடன் வந்திருந்த தென்னிந்தியத் திரைப்பட நடிகர் மேஜர் சுந்தரராஜன், இத்திரைப்படத்தினைக் கொழும்பில் பார்க்க நேர்ந்தது. அவர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது என்னைச் சந்திக்க வேண்டுமென விருப்பம் தெரிவித்திருந்தார். அவரைச் சென்று சந்தித்தேன். வாடைக்காற்றினைத் தான் இந்தியாவில் தயாரிக்க முயல்வதாகக்கூறி, அப்புத்தகத்தின் ஒருபிரதியை கேட்டு வாங்கிச் சென்றார்.

மேஜர் சுந்தரராஜன் எடுத்துச் சென்ற நாவலை என்ன செய்தார் என்பதோ, அவர் பார்த்து ரசித்த ரசனையை என்ன செய்தார் என்பதோ எனக்குத் தெரியாது. ஆனால் தென்னிந்தியப் படவுலகின் முன்னணி இயக்குநர் கே. பாரதிராஜாவின் 'கல்லுக்குள் ஈரம்' என்ற படத்தைப் பார்க்க நேர்ந்தது. எவ்வளவு அற்புதமாக எனது வாடைக்காற்று திருடப் பட்டிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. வாடைக்காற்றில் இரண்டு மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக ஒரு கிராமத்திற்கு வருகிறார்கள். கல்லுக்குள் ஈரத்தில் இருவாலிபர்கள் ஒரு கிராமத்திற்கு படம் பிடிப்பதற்காக வருகிறார்கள். வாடைக்காற்றில் வருவது போல அப்படத்திலும் இருபெண்கள். வாடைக்காற்றில் வித்தியாசமான பாத்திரமான கையில் கூர்ஈட்டி ஏந்திய விருத்தாசலம், கல்லுக்குள் ஈரத்திலும் கூர்ஈட்டியுடன் வருகிறான். பாலியல் பிறழ்ந்த சண்முகம் இங்கும் வருகிறான். அதே கதை, அதே சம்பவங்கள். யாரிடம் முறையிடுவது இந்த மோசடியை?

வாடைக்காற்று நாவல் அப்படியொன்றும் அற்புதமான படைப்பு அன்று. ஆனால் அது விபரித்த சம்பவங்கள், விபரணங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைமாதிரி கதாபாத்திரங்கள், பகைப்புலம், மனித நடத்தைகள் என்பன அந்த நாவலுக்கு விதந்துரைக்கப்படும் புகழ்ச்சியினை ஏற்படுத்தின. அதனால்தான் உடுகம்பொல விகாராதிபதி வணக்கத்திற்குரிய எம். ரத்னவம்சதேரோ, வாடைக்காற்றைச் சிங்களத்தில் மொழிபெயர்த்துள்ளார். சிங்களத்தில் வெளிவருமோ இல்லையோ அதுவல்ல முக்கியம். ஒரு விகாராதிபதியின் மனதை வாடைக்காற்று கவர்ந்திருக்கிறது என்பது தான் முக்கியம். அதுமட்டுமல்ல என்னால் வாடைக்காற்றினையும் எழுத முடியும், காட்டாற்றினையும் எழுத முடியும். அவை பல்லாயிரக்கணக்கான வாசகர்களால் வாசிக்கப்படுகின்றன என்பது தான் இங்கு முக்கியமாக நோக்கப்பட வேண்டியது.

வாடைக்காற்றிற்கு நீண்டதொரு முன்னுரை தேவையெனவே படுகின்றது. பதிவு செய்யப்பட வேண்டிய தகவல்கள் பதிவாக வேண்டும். டொமினிக் ஜீவா கூறுவது போல 'அது வரலாறு'. எனது நாவல்களைத் தொடர்ந்து வெளியிடப் பூபாலசிங்கம் புத்தகசாலை உரிமையாளர் திரு. பூ. ஸ்ரீதரசிங் முன்வந்துள்ளார். என்மீதும் என் எழுத்தின் மீதும் அவருக்குள்ள விருப்பை இது குறிக்கிறது. ஏற்கனவே எனது ஆய்வு நூல்கள் இரண்டினை அவர் வெளியிட்டுள்ளார். அவருக்கு என் நன்றிகள் என்றுமுரியன. இந்நூலைத் தகுந்தவாறு அச்சேற்றும் தம்பி விமலேந்திரனுக்கும் என் நன்றிகள்.

செங்கை ஆழியான்

'கமலம்'
82, பிறவுன் வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

25.11.1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடைக் காற்று

## 1

குடிசைக்குள் இருந்து வெளியே வந்த நாகம்மாவின் கண்கள் கடற்கரையில் நிலைத்தன. கடந்த ஆறு மாதங்களாக வெறிச்சோடிக் கிடந்த கடற்கரையில் பெரியதொரு மரவள்ளம் இழுத்துவிடப் பட்டிருந்தது. வள்ளத்திற்குப் பக்கத்தில் நான்கு, ஐந்து பேர் நிற்பது மங்கலாகத் தெரிந்தது. அவர்களுக்கு அப்பால் கரையும் கடலும் முத்தமிடும் அலைபரப்பில் வெளியிணைப்பு யந்திரப்படகொன்று நங்கூரப் பிணைப்பைக் கழற்றி விடுபட முயல்வது போலத் திமிறிக் கொண்டிருந்தது.

நேற்று வரை அந்தக் கடற்கரையில் காட்டுக் குதிரைகள் தான் தன்னிச்சையாகத் திரிந்தன. சில கட்டாக்காலி மாடுகளும் அங்கொன்றும், இங்கொன்றுமாகத் தென்பட்டன.

வாடைக் காற்று வீசத்தொடங்கிவிட்டது. வெறிச்சோடிக் கிடந்த கடற்கரையில் இனி மனித நடமாட்டம் அதிகரிக்கும். எனவே காட்டுக் குதிரைகள் இனி கடற்கரைப்பக்கம் வரா. மனித நடமாட்டம் அவற்றிற்குப் பிடிப்பதில்லை.

காலை வெயிலின் மஞ்சள் கிரணங்கள் நெடுந்தீவுக் கடற்கரை மணலில் படிந்து கிடந்தன. சற்றுப் பழுப்பேறிய மணல், சாம்பல் பூத்தது போலிருந்தது. குடிசையின் முற்றத்தில் நின்று நாகம்மா பார்க்கும் போது, அவளது வளவின் பகிறு வேலிக்கு அப்பால், எல்லையில்லாது விரிந்து கிடக்கும் கடற்கரையும், ஈச்சம் பற்றைகளும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகதாளிச்செடிகளும் தெரிந்தன. அதற்கும் அப்பால் ஆங்காங்கே காற்றின் அசைப்பிற்கு இணங்கத் தலையசைத்து நிற்கும் பனை மரங்களும் நாட்பட்டு முறுக்கேறிய பூவரச மரங்களும் தென்பட்டன.

நாகம்மா அடிக்கடி கடற்கரைக்குப் போய், நீண்ட நேரமாக அலை வீசும் கடலின் அழகைக் கண்கொட்டாமல் பார்த்தபடி நிற்பாள். கடற்கரையில் தனித்து நிற்கும் வளைந்த ஒற்றைப் பனையின் கூன் வளைவில் ஏறி அமர்ந்தபடி சுதந்திரமாகப் பொழுதைக் கழிப்பாள். அவள் அங்கே இருப்பதை அறியாத காட்டுக் குதிரைகள் அந்தப் பனையின் பக்கம் வரும்போது, அவள் சிறுபிள்ளை போல் 'சூய்' எனக் கூக்குரலிட்டபடி கீழே குதிப்பாள், குதிரைகள் வெருண்டடித்து தெறிகெட்டுப் பாய்ந்தோடும். அந்தக் காட்சியை அடங்கா இனிமையுடன் பார்த்து ரசித்துச் சிரிப்பாள்.

அவள் அமரும் கூனல் பனைக்கு அருகில்தான் இன்று அப்பெரிய வள்ளம் இழுத்துவிடப்பட்டிருந்தது.

திண்ணையில் சுருட்டைப் புகைத்தபடி உட்கார்ந்திருந்த பொன்னுக் கிழவரின் பார்வையிலும் கடற்கரையில் இழுத்துவிடப்பட்டிருந்த வள்ளம் படாமலில்லை.

"வாடை பெயர்ந்திட்டுது..." என்றார் கிழவர்.

அவரின் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் நாகம்மா.

"ஓம் அப்பு... ஆட்கள் வரத்தொடங்கிவிட்டினம். இனி நாலைந்து மாதத்துக்கு இந்தக் கடற்கரை அல்லோலகல்லோலப்படும். அது ஆருடைய வள்ளம் அப்பு? செமியோன் அண்ணற்றையோ?"

"செமியோனிட்டை உப்பிடி வள்ளம் இல்லை."

"யூசுப்பு அம்மான்ரையோ...? அவருடையது கட்டுமரமெல்லோ...? உது ஒருக்காலும் இங்கே வராத வள்ளமாகத் தெரியுது..." என்றாள் நாகம்மா.

அவள் கண்கள் மீண்டும் கடற்கரையில் பதிந்தன. தாழை மரங்களுக்கிடையே வெண் மணலில் இழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடப்பட்டிருந்த வள்ளம், வெகு கம்பீரமாக நிற்பது தெரிந்தது. வள்ளத்திலிருந்து சிலர் எதைஎதையோ இறக்கிக் கொண்டிருந்தார்கள். வாடி அமைப்பதற்குரிய கம்பு, கயிறு ஓலைகளாக அவை இருக்க வேண்டும்.

"உது புதிசாத்தான் வந்திருக்குது. ஆனால், தோணி நிற்கிறபாடு செமியோன்ரை... அது தெரியாமல் வாடி அமைக்கப் போகினம் போலிருக்குது. வீண் சண்டை சச்சரவு வரப்போகுது!" என்றபொன்னுக் கிழவர் திண்ணையை விட்டிறங்கிக் கடற்கரையை நோக்கி நடக்கத்தொடங்கினார்.

"அப்பு, தேத்தண்ணி வைக்கிறன். குடிச்சிட்டுப் போங்கோ..."

"ஒருக்காப் போய் பார்த்திட்டு வாறன் மோனை..." என்று கூறியபடி செல்லும் பொன்னுக் கிழவர் முற்றத்து வேப்ப மரத்தின் கிளை ஒன்றிலிருந்து குச்சி ஒன்றையும் இடுங்கிக் கொண்டார். படலையைத் திறந்தவர் மேற்குப் பக்கமாக எதையோ கூர்ந்து பார்ப்பதை நாகம்மா கண்டாள்.

அவளது விழிகளும் அதே திசையில் திரும்பின.

வளவைச் சுற்றியிருந்த சுவர்ப் பகிறின் ஒரு பகுதி சரிந்து கிடந்தது. முருகைக் கற்பார்களை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்பட்ட வேலியைப் பகிறு என்பர். முருகைக் கற்களின் கரகரப்பான முனைகள் ஒன்றினை ஒன்று பற்றிக் கல் மதிலாக நின்றது. அந்தத் தீவின் வளவுகளெல்லாம் பகிறுகளினாலேயே பிரிக்கப்பட்டிருந்தன.

"ராத்திரி குதிரை வந்து முட்டியிருக்க வேணும்....." என்றார் பொன்னுக் கிழவர்.

"ஓமணை அப்பு, ராத்திரி நாய் குலைச்சது... குதிரையாய்த்தான் இருக்க வேணும்..." என்றாள் நாகம்மா: "நான் பகிறை அடுக்கிவிடுகிறன், நீங்கள் போங்கோ..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ ஒண்டும் செய்யாதை... நான் வந்து செய்கிறன்" என்றவாறு குச்சியால் பற்களைத் துலக்கியபடி கிழவர் நடந்தார்.

பொன்னுக் கிழவர் போவதைப் பார்த்தபடி நின்ற நாகம்மாவின் தலைக்கு மேலே, வானத்தில் "...க்...குவக்......க்..." என்ற ஓசையும், படபடவென்று சிறகடிக்கும் ஒலியும் எழுந்தது.

அவள் திடுக்கிட்டுத் தலையை நிமிர்த்திப் பார்த்தாள். முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. சிறு குழந்தை போல் கைகளை வீசித் துள்ளினாள்: "கூழக்கடா... கூழக்கடா...." என ஆரவாரித்தாள்.

பேத்தியின் ஆரவாரக் குரல் கேட்டு, கிழவர் திரும்பிப் பார்த்ததோடு, காரணத்தைப் புரிந்து கொண்டு அவரும் வானத்தை அண்ணார்ந்து பார்த்தார்.

நான்கு பெரிய கொக்குகள் வெண் பஞ்சுப் பொதிகளாக ஆகாயத்தில் மிதந்தன.

"வாடைக் காற்று பெயர்ந்துவிட்டால் கூழக்கடாக்களும் தவறாமல் வந்துவிடுங்கள். இனி சோளகக் காற்று வீசுகிறவரை இதுகளும் இந்தத் தீவில்தான் இருக்கும்."

நாகம்மா தன்க்கு விபரம் புரிந்த நாளிலிருந்து அவதானித்தே வருகின்றாள். வாடைக்காற்று வீசத் தொடங்கியதும் மீன் பிடிப்பதற்காகப் பிறபகுதி மீனவர்கள் நெடுந்தீவின் தெற்குக் கரையோரத்திற்கு வந்து தங்குவார்கள். அதேவேளையில்தான், 'கூழைக்கடாக்கள்' என அழைக்கப்படும் 'பெலிகன்' பறவைகளும் நெடுந்தீவின் குட்டைக் காடுகளில் வந்து குடியேறத் தொடங்குகின்றன. இந்தக் கூழைக்கடாக்கள் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் வடக்கே இருந்து வருகின்றன என்கிறார்கள்.

தொலைவில் தெரிந்த பனை மரங்களின் ஓலைகள் மீது இறகுகளை ஒடுக்கியவாறு கூழைக்கடாக்கள் அமர்வதை நாகம்மா கண்டாள். பனை மரங்களுக்கு அப்பால் அடிவானத்தில் கருமேகத் திரள் ஒன்று மெல்லென மிதந்து வந்தது. அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைப்புலத்தில் வெண் பஞ்சுப் பொதிகளாக அமர்ந்திருந்த கூழைக்கடாக்கள் பளபளத்தன.

பொன்னுக் கிழவர் திரும்பி வந்துகொண்டிருந்தார். அவரைக்கண்டதும் தேநீர் வைக்கவேண்டுமேயென்ற நினைவு அவளுக்குத் திடீரென வந்தது. குடிசைக்குள்ளே வேகமாக நுழைந்து, முட்டியை எடுத்து அடுப்பில் வைத்துவிட்டுத் தண்ணீர் வார்க்கப் பானையை எடுத்தாள்.

ஒரு துளி நீர்கூடப் பானைக்குள் இல்லை. நல்ல தண்ணீர் எடுத்துவைக்க மறந்தே போனாள். கடற்கரையில் வாழ்கின்ற ஒன்பது குடும்பங்களும் தங்களுக்குத் தேவையான குடி தண்ணீரைப் பெறுவதற்குக் கால் மைல் தூரம் வடக்கே செல்லவேண்டும். அண்மையில் இரு கிணறுகள் இருந்த போதிலும் அவற்றின் நீர் உவர்ப்பாயிருந்ததால் குளிப்பதற்கும், பாத்திரங்கள் கழுவுவதற்குமே அவை உதவின.

"இண்டைக்கு அப்புவிடம் ஏச்சுத்தான் கேட்கவேணும்..." என்று கூறியவாறு பானைக் குடத்தைத் தூக்கிக் கொண்டு நல்ல தண்ணீர்க் கிணற்றை நோக்கி வேகமாக விரைந்து சென்றாள் நாகம்மா.

நாகம்மாவின் உலகம் மிகவும் சிறியதொன்று. நெடுந்தீவின் எல்லையைவிட்டு, அவள் வெளியே சென்றது கிடையாது. பனைமர ஓலைகளிலிருந்து சுதந்திரமாக ஊஞ்சல் ஆடுகின்ற கூழைக்கடாக்களைப் பார்க்கும் போது அவளுக்குப் பொறாமையாக இருக்கும். ஆயிரமாயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து பருவம் தப்பாது இவை இங்கு வந்துவிடுகின்றன. ஆனால் அவள்...?

கடற்கரையும், குட்டைக் காடுகளும், உவர்க்கழிகளும், பனை மரங்களும், காட்டுக் குதிரைகளும்தாம் அவள் கண்ட உலகம்.

நாகம்மா சட்டியிருந்த பாவாடை, அவளின் கால்களில் இடறியது. இடுப்பிலிருந்த குடத்தோடு கீழே விழவிருந்தவள், நல்லவேளை தன்னைச் சமாளித்துக் கொண்டாள். அவளுக்குத் தன் எண்ணங்களையிட்டுச் சிரிப்பாகவிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல தண்ணீர்க் கிணறும், அதன் அருகே ஓங்கி வளர்ந்திருந்த ஆலமரமும் தெரிந்தன.

கிணற்றடியில் நாகம்மா தன் தோழி பிலோமினா நிற்பதைக் கண்டாள். பிலோமினா வள்ளக்காரச் சவிரிமுத்துவின் மகள். நாகம்மாவின் குடிசைக்கு மூன்றாவது வீடு பிலோமினாவுடையது.

"ஏன்டி தண்ணிக்கு வாரப்போ என்னைக் கூப்பிடவில்லை..?" என்று கோபத்துடன் வினவியபடி குடத்தை இறக்கி வைத்தாள் நாகம்மா.

"மறந்து போனன் நாகம்.. கோவிக்காதை... தண்ணி ஊத்தட்டா...?" என்ற குழைந்தாள் பிலோமினா.

நாகம்மாவின் கோபம் ஆறிவிட்டது. தோழிகள் இருவரும் தண்ணீர் அள்ள வந்ததையும் மறந்து ஊர்வம்பு பேசிக் கொண்டிருந்தார்கள்.

வாடைக் காற்று, பனம் ஓலைகளிடையே சலசலத்து வீசியது. கிணற்றைச் சுற்றி முருகைக் கற்பார் வெளியரும்புகளே பரந்துகிடந்தன. ஈச்சம்பற்றைகளும் நாகதாளிகளும் பரவலாக மண்டிக்கிடந்தன. குடியிருப்பதற்கு ஏற்ற ஒரு பொட்டு மண் நிலத்தைக்கூட கண்ணுக்கெட்டிய தூரம் வரைக் காண முடியவில்லை. ஆங்காங்கு தேங்கி நின்ற நீர்க் குட்டைகளில் இத்தீவிற்கே உரிய கட்டைக் குதிரைகள் நீரை உறிஞ்சிக்கொண்டிருப்பது தெரிந்தது.

கிணற்றுக்கு வடக்கே இருநூறு யார் தூரத்தில் பெரியதொரு ஆலமரம் கிளை பரப்பிச் செழித்து வளர்ந்திருந்தது. அதனோடு இணைந்து சில பனைமரங்களும் காணப்பட்டன. அவ்வூருக்கான பொது மயானம் அங்கேயிருந்தது.

பெண்கள் இருவரும் தண்ணீர் மொண்ட குடங்களைத் தூக்கி இடுப்பில் வைக்கும் போது மயானத்தின் பக்கமிருந்து ஒரு குரல் வந்தது.

"ஏய் புள்ளைகளா.... கொஞ்சம் நில்லுங்கோ... ! குடிக்கிறதுக்குக் கொஞ்சம் தண்ணீர் ஊத்திட்டுப் போங்கோ..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுடலைச் சண்முகம் வாறான்..." என்றாள் பதற்றத்துடன் நாகம்மா.

"உவருக்கு நாங்கள் நின்று தண்ணி ஊத்துறதோ...? இந்த ஆள் ஒருமாதிரி..., அன்டைக்கு நான் தண்ணி அள்ளிக்கொண்டிருக்கும் போது ஒரு மாதிரியான கதைகள் கதைத்தவர். வா நாகம்மா.... நாங்கள் போவம்" என்று பிலோமினா படபடத்தாள்.

ஆஜானுபாகுவான தோற்றமும், நடுத்தர வயதும் மதிக்கத்தக்க ஓர் ஆடவன் அங்கே ஓடிவந்தான். முறுக்கேறிய உடல். எண்ணெய் காணாத பரட்டைத் தலை. அழுக்கேறிய சாரம். அவனைக் கண்டதும் பிலோமினா முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

நாகம்மா நீர் வார்க்கும் போது அவன் கூறினான்: "செமியோன் சம்மாட்டியார் இந்த முறை வாடி போடல்லையாம்..." இதைக் கூறிவிட்டுப் பிலோமினாவை அவன் குறும்பாகப் பார்த்தான். பிலோமினாவுக்கு சுருக்கென்று இதயத்தில் ஏதோ தைத்தது.

வீடு நோக்கி வரும்போது இரு பெண்களும் மௌனமாகவே வந்தனர். மௌனத்தை நாகம்மா கலைத்தாள்.

"பிலோ, அவன் கிடக்கிறான் விசரன்.. நீ ஒன்றையும் மனதிலே வைத்துக் கவலைப்படாதை..."

தோழியைக் கவலையோடு பார்த்தாள் பிலோமினா. அவளின் கண்கள் கலங்கியிருந்தன.

"நான் துரதிர்ஷ்டம் பிடித்தவள், நாகம், சண்முகத்தான் சொன்னதில என்ன பிழை? அவர் ஏன் இனி இங்க வரப்போகிறார்...? அவர் வரமாட்டார்... நாகம். என் அண்ணன் சூசை இருக்குமட்டும் செமியோன் வரவேமாட்டார்..."

பிலோமினாவின் கரு விழிகளிலிருந்து கண்ணீர் வழிவதைக் கண்டு நாகம்மா துடித்துப்போனாள்.

"பிலோ... பிலோ... அழுதையடி..." என்று அவளைத் தேற்ற முயன்றாள் நாகம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தேடிவந்த அதிர்ஷ்டத்தைக் கைதவறவிட்டன். மீண்டும் வரவாடி போகுது நாகம்? அவர் ஒரு மானஸ்தர்... நான் கோழை... தாய், தேப்பனுக்கும், அண்ணனிற்கும் பயந்த ஒரு கோழை... கோழைகளுக்கு ஆசைகள் இருக்கக் கூடாதடி...'' என்று பிலோமினா விம்மினாள். நாகம்மா வார்த்தைகளற்று மௌனம் சாதித்தாள்.

''அவர் வருவாரா? அவர் வருவாரா நாகம்....?'' என்று பிலோமினா திரும்பவும் ஏக்கத்தோடு கேட்டாள்.

நாகம்மாவால் எதுவுமே பேசமுடியவில்லை. அவள் கடற்கரையை நோக்கினாள். வள்ளத்திற்கு முன்னால், ஒரு வாடி அமைப்பதற்கு ஆயத்தமாகக் காட்டுக் கம்புகள் நாட்டப்பட்டிருந்தன.

''செமியோன் அண்ணர் நிச்சயம் வருவார், பிலோ... நீ கவலைப்படாதை....'' என்று தோழிக்கு ஆறுதல் கூறிய போதிலும் அவளின் உள் மனம் சந்தேகப்பட்டது.

## 2.

கங்கு மட்டைகளைப் பிளந்து அடுப்பினுள் செருகினாள் நாகம்மா. வெயிலில் காய்ந்து முறுகிய பனை மட்டைகள், நெருப்புப் பிடித்ததும் சீறி எரிந்தன. அவளால் கிணற்றடிச் சம்பவத்தை இலேசாக மறக்கமுடியவில்லை. பிலோமினாவின் இதயத்தில் தெரிந்தோ தெரியாமலோ சுடலைச் சண்முகம் பெரியதொரு புயலைக் கிளப்பிவிட்டான்.

''பாவம் பிலோமினா'' என்று பச்சாதாபப் பட்டாள் நாகம்மா.

சென்ற வாடைக்காலத்தில்தான் செமியோனுக்கும், பிலோமினாவுக்கும் காதல் உறவு இறுகியது. தகப்பனோடு சேர்ந்து மூன்றாண்டுகளாகத் தொழிலாளியாக செமியோன் அந்தக் கடற்கரைக்கு வந்தான். நான்காம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பன் வரவில்லை. செமியோனே சம்மாட்டியாராகத் தகப்பனின் இடத்தில் வந்தான்.

செமியோன் கரையூர்ப் பகுதியிலிருந்து வரும் மீனவன்.

சம்மாட்டியாராக அவன் வந்தாலும் வாடியில் படுத்திருக்கவில்லை. தொழிலாளிகளோடு தொழிலாளியாகக் கடலில் சென்றான். அவர்களோடு சேர்ந்து வலைகளைக் காய வைத்தான்.

அவர்கள் இரவில் பிடித்துவரும் மீன்களைக் கருவாடு போடும் வேலையைப் பிலோமினாவும், அவளது தகப்பன் சவரிமுத்துவும் செய்தனர். செமியோனும், அவர்களின் மனம் கோணாதவகையில் கூலி கொடுத்தான்.

பிலோமினா கவர்ச்சியான பெண். நாகம்மாபோல அவள் சிவப்பியாக இல்லாவிட்டாலும், அவளது உடலில் ஓர் அபூர்வமான பளபளப்பு இருந்தது. ஒரு தடவை பார்த்தவனை மறுதடவையும் பார்க்க வைக்கத் தூண்டும் கவர்ச்சி அவளிடம் நிறைய இருந்தது. வறுமையில் வாடினாலும் இயற்கை அவளின் உடல் வளர்ச்சிக்கு வஞ்சகம் செய்துவிடவில்லை.

வயதுக்கு மீறிய வளர்ச்சி, விம்மிப் பூரித்த மார்பகங்கள், ஒடுங்கிய இடை, அகன்று விரிந்த கீழ்ப்பாகம் என்பன அவளுக்குக் கூழைக்கடாவின் கவர்ச்சியைக் கொடுத்திருந்தன.

செமியோன் அவளிடம் தனது மனதைப் பறிகொடுத்ததில் வியப்பில்லை.

பிலோமினா ஒருநாள் நாகம்மாவிடம் அந்தச் சம்பவத்தை வெட்கத்தோடு விபரித்தாள்:

"நாகம்மா; நான் தனியாக மீனைப் பிளந்து, உப்பை அப்பிக்கொண்டிருக்கும்போது, மரப்பெட்டி ஒன்றில் இருந்த படி என்னையே கண்ணிமைக்காமல் அவர் பார்த்துக் கொண்டிருந்தார். எனக்கு ஒரே வெட்கமாகப் போச்சுது. தலையைக் குனிந்துகொண்டன். ஆனால், அவர் என்னையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதை என்னால் உணர முடிந்தது. என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை. கொஞ்ச நேரம் சென்றிருக்கும்... ஆரோ எனக்குப் பக்கத்தில் நிற்பது போன்ற உணர்வு... நிமிர்ந்து பார்த்தன்.. அவர்... என் அருகில் இருந்துகொண்டு, "பொன்னு, இங்கை பார்! மீனை இப்படிப் பிளக்கக்கூடாது.... இப்படித்தான் செய்ய வேணும்" என்று என் கையிலிருந்த கத்தியையும், மீனையும் வாங்கினார்... வாங்கும்போது வேணுமென்றே என் கையைத் தடவினார்.... வெட்கம் கெட்ட மனிசன்...!"

இதை விபரிப்பதற்குள் அவள் பட்டபாடு. 'காதலுக்கு இவ்வளவு இனிமையும், சக்தியும் இருக்கின்றதா' என் நாகம்மா தனக்குள் எண்ணிச் சிரித்துக்கொண்டாள்.

செமியோன்–பிலோமினா இடையே இப்படி உருவான காதல், இரவில் தாழை மரங்களிடையேயும், பனை வடலிகளின் மறைவிலும் மலர்ந்தது. அவர்கள் இருவரும் தங்கள் இதயங்களில் அன்பையும், ஆசையையும் கனவுகளையும் வளர்த்துக்கொண்டார்கள்.

"அவர் என் மடியில் படுத்திருந்திராடி... நாங்கள் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. அவரது நெற்றியில் விழுந்து கிடந்த மயிரை நான் விரலால் நீவி விட்டன். அவர் என் கரத்தை எடுத்து விரல்களை தொட்டு எண்ணினார்."

இதைக் கேட்கும்போது நாகம்மாவுக்குச் சிரிப்புத்தான் வந்தது. 'யாரும் விரல்களை எண்ணுவார்களா?'

"விசர்கள்!" என்று நாகம்மா கேலி செய்தாள்.

"விசர்தானடி.... அவரிலே எனக்கு விசர். நான் விசரிதானடி!" என்றபடி பிலோமினா மறைந்தாள்.

அவள் போனபின் நீண்டநேரமாக நாகம்மாவைத் திகைப்பும், இனமறியாத ஓர் இனிமையான உணர்ச்சியும் சூழ்ந்துகொண்டன.

'பெண்ணின் வாழ்விலே ஆடவன் ஒருவன் பிரவேசிக்கும்போதுதான், பெண்ணின் கதையே ஆரம்பமாகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலும்' என அவள் எண்ணினாள். குதிரைக் குட்டிபோல கவலையற்றுத் திரிந்த பிலோமினாவின் வாழ்விலும் செமியோன் எங்கிருந்தோ வந்து புகுந்தபின்னர்தான் மந்தமாருதம் வீசியது; கடும் புயலும் வீசியது!

மீன் பிடிக்காலம் முடிந்து செமியோன் திரும்பிச் செல்லும்போது, பிலோமினாவையும் கல்யாணம் செய்து அழைத்துப் போவான் என்றுதான் நாகம்மா நம்பியிருந்தாள். அவள் மட்டுமென்ன? அந்த வாடியே நம்பியிருந்தது. ஆனால், பிலோமினாவின் தமையன் சூசைமுத்துக்கும் செமியோனுக்குமிடையில் எப்படியோ தோன்றிய பகைமை அவளின் கலியாணத்திற்குத் தடைவிதித்து விட்டது.

செமியோன் திரும்பிப் போகும்போது தனியனாகவே போனான். பிலோமினாவின் இதயத்தில் மாறாத கவலையையும் ஏக்கத்தையும் ஏற்படுத்திவிட்டுப் போனான்.

"நாகம்! இந்தப் பிறவியிலே மணந்தால் அவர் ஒருவரைத்தான் மணப்பன். இன்னொருவரை என் மனத்தாலும் நினையன்" என்றாள் பிலோமினா விம்மியபடி.

சோளகக் காற்று வீசி முடிந்து, பழையபடி வாடைக் காற்று வந்துவிட்டது. கடற்கரை மீண்டும் திருவிழாக் கோலம் கொள்ளப் போகின்றது.

செமியோன் வருவானா?

"என்ன பிள்ளை, இன்னும் தண்ணி ஊத்துறாய்?" என்று பொன்னுக்கிழவர் கேட்பது, சிந்தனையில் மூழ்கிக் கிடந்து நாகம்மாவை இவ்வுலகிற்கு இழுத்து வந்தது.

"இந்தா கொண்டுவாறன் அப்பு...." என்று கூறியவாறு தேநீரைப் பேணி ஒன்றில் வார்த்துக்கொண்டு வெளியே வந்தாள் நாகம்மா. பனங்கட்டிக் குட்டான் ஒன்றையும் கொடுத்தாள். பேணியிலிருந்து தேநீரைச் சிரட்டை ஒன்றில் ஊற்றி, உறிஞ்சிக் குடித்தபடி பனங்கட்டியையும் மென்றுகொண்டு கிழவர் கூறினார்: "பகிறு வேலியைச் சீர்படுத்தும்போது பார்த்தன். கோறைப் பனைக்குள்ளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன்கூடு இருக்குது., நல்ல தேன் அடை இருக்கு... இரவைக்கு புகை ஊதிவிட்டு எடுக்கவேணும்!"

"ஐயையோ, வேண்டாமணை. போனமுறை தேன் குளவிகள் குத்தின கடுப்பு இன்னும் மாறவில்லை....''

"பயப்படுகிற ஆட்களுக்கு ஆசை கூடாது....!" என்றார் கிழவர்.

நாகம்மாவிற்கு ஏனோ பிலோமினாவின் நினைவுதான் வந்தது.

## 3.

மரியதாஸ் உரத்த குரலில் கட்டளையிட்டுக் கொண்டிருந்தான். இருபத்தாறு வயது மதிக்கத்தக்க அவனுக்கு மெலிந்த, வலுவான தேகம். ஏறுண்ட நெற்றியும், அரும்பு மீசையும், கருமையான அவன் உடலுக்கு ஒரு கம்பீரத்தையும், பொலிவையும் கொடுத்தன. ஒருசம்மாட்டியாருக்கு இருக்கவேண்டிய ஆணவத்துடன் அவன் ஏனைய தொழிலாளிகளுக்குக் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தான்.

கடற்கரையில் மீன்வாடி அமைக்கின்ற வேலை மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. கரையில் இழுத்து விடப்பட்டிருந்த கரவலை வள்ளத்தின் நிழலில் மரியதாஸ் ஒதுங்கியிருந்தான். அவன் கண்கள், கிழக்கும், மேற்குமாய் நீண்டு விரிந்திருந்த கடற்கரையை நோட்டமிட்டன. அலைகள் அமைதியாகக் கரையைத் தழுவி விட்டுத் திரும்பிச் சென்றன. கடலில் இருந்து சுமார் இருபது யாருக்கு அப்பால் தாழை மரங்களும், தனிப் பனைகளும், ஈச்சம் பற்றைகளும் வளர்ந்திருந்தன.

தாழை மரம் ஒன்றின் நிழலில் அடுப்பு மூட்டித் தேநீர் வைத்துக் கொண்டிருந்தான் ஒருவன். சற்றுத் தள்ளி மீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடி அமைக்கும் முயற்சியில் மற்றவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

கம்புகளைப் பொருத்திக் கட்டிவிட்டுத் தேநீர் குடிப்பதற்காக எல்லோரும் வள்ளத்தின் அருகே வந்து அமர்ந்தபோது இராமசாமி கேட்டான்:

"முதலாளி, இங்கே வாடி அமைப்பதால் ஏதாவது பிரச்சினை வருமோ...? நாங்கள் இந்தமுறை மட்டுந்தான் நெடுந்தீவுக்கு வந்திருக்கிறம்... வழமையாக வாறவங்களின்ரை மீன் பாட்டை நாங்க பிடித்தால்அவங்கள் சும்மா பார்த்துக்கொண்டிருப்பாங்களோ...?"

மரியதாஸ் வேகமாகக் குறுக்கிட்டு அவன் பேசுவதை நிறுத்தினான்.

"என்னதான் பிரச்சினை வரும்?... வந்தால் பார்ப்பமே! இதுக்கேன் இப்போ நீ பயப்படுகிறாய்? உண்மையான ஒரு கரையான் கடலுக்குத்தானடா பயப்படுவான். குடிசையிலே இருக்கிற அந்தக் கிழவன் ஏதோ சொல்லிவிட்டானென்றால் நீங்கள் ஏனடா பயப்பட வேணும்? இந்தப் பகுதி விதானையாரோடு பாடு விஷயமாகக் கதைத்துவிட்டுத் தான் நான் வாடி அமைச்சிருக்கிறன்.. அதோ பார் கிழக்கே தெரியுதே ஆலமரம்... அதுக்கு முன்னால் நிற்கிற பனையிலிருந்து, உங்கே தெரிகிற பூவரசமரம் மட்டும் இருக்கிற கரை உள்ளுர்க்காரங்களுக்குச் சொந்தம்... அதிலேதான் உள்ளூர் சம்மாட்டி யூசுப்பினுடைய கட்டுமரங்கள் வந்து கரையேறும்... அதிலேயிருந்து மேற்கால அந்தப் புளியமரம் இருக்குமிடத்தில் வெளியூர்க்காரங்க யாரும் தங்கி மீன் பிடிக்கலாம்.... நானும் பிடிக்கலாம், நீயும் பிடிக்கலாம். உந்தக் கிழவனுக்குக் கனக்கத் தெரியுமோ?.... நான் போட்டிருக்கிற வாடி ஆருக்குச் சொந்தம் என்றவன்.....?"

"கரையூர்ச் செமியோன் சம்மாட்டிக்குச் சொந்தமாம்...." என்றான் இஸ்மாயில்.

"செமியோன்தான் வழமையாக இதில் வாடிபோடுற தாம்..." என்று தயங்கியபடி கூறினான் இராமசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இம்முறை நான்தான் முதலில் வந்து வாடி போட்டன்... ஆதனால இம்முறை இந்தப் பாடு எனக்குத்தான் சொந்தம்" என்றான் மரியதாஸ் உறுதியாக. கோப்பையை எடுத்து தேநீரை ஒரு மிடறு குடித்துவிட்டு ஏதோ கூற முயன்றான். அதற்குள் இராமசாமி குறுக்கிட்டான்.

"நாங்க சற்றுத் தள்ளி வாடி அமைத்தால் என்ன...?"

இதைக் கேட்டுவிட்டு மரியதாஸ் கலகலவெனச் சிரித்தான்.

"உனக்குப் புத்தி இருக்காடா? எங்கட கரைவலைத் தொழிலுக்குத் தோதான வேறு இடம் இருக்கா? நாங்க வாடி அமைச்சிருக்கிற பகுதி மட்டுந்தான் மணலாய் இருக்குது... மற்றப் பகுதியெல்லாம் கற்பார்கள் இடையிடையே தலையை நீட்டிக்கொண்டிருக்கு. நடுக் கடலுக்குப் போய் இஞ்சின் வள்ளத்தில் மீன் பிடிக்கிறவங்களுக்கு அந்தப் பகுதிகள் பரவாயில்லை" என்றான்.

மரியதாஸுக்கு சரிவரப் பதில் சொல்ல முடியாதுபோனது. இராமசாமி, தேநீரை மடக்கென்று உறிஞ்சிக் குடித்துவிட்டு, வாடி அமைக்கும் வேலையில் ஈடுபடச் சென்றான்.

மரியதாஸ் ஏதோ நினைத்தவனாக எழுந்து நின்றான். கடலை நோக்கிச் சென்று, தண்ணீரில் காலை நனைத்துக் கொண்டான். பின் பொன்னுக் கிழவரின் குடிசை இருந்த பக்கமாக நடக்கத் தொடங்கினான்.

உவர் மணலில் அவனுடைய கால்கள் புதைந்தன. நான்கு பக்கமும் விழிகளைச் சுழலவிட்டபடி அவன் நடந்தான். அவன் இத் தீவின் மண்ணிற்குப் புதியவன். தொழில் நாடி வந்தவன்.

சற்றுத் தொலைவில் பனை மரங்களிடையே முன்பின்னாகக் குடிமனைகள் தெரிந்தன. பாசி படர்ந்த பகிறுகளும், அவற்றில் முதுகைத் தேய்த்துக்கொள்ளும் கட்டாக்காலி மாடுகளும் தெரிந்தன.

பனையோலையால் வேயப்பட்ட அச் சிறு குடிசைகள் எதுவித பரபரப்புமின்றி அமைதியாக உறங்குவன்போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சியளித்தன. அங்கு நிலவும் அமைதியைக் குலைப்பதுபோல் இரு கூழைக்கடாக்கள் குரல் எழுப்பியவாறு வானில் விரைந்து பறந்து சென்றன.

மரியதாஸ் வானத்தை அண்ணார்ந்து பார்த்தான். அவன் விழிகள் வியப்பால் விரிந்தன. "எவ்வளவு பெரிய உருப்படிகள்.... நல்ல இறைச்சியிருக்கும்.... சுட்டு வேட்டையாடலாம்" என எண்ணிக் கொண்டான்.

குடிமனைகளை நெருங்கினான். ஒரு குடிசையின் வாசலில் பெண் ஒருத்தி நின்றுகொண்டிருந்தாள். அவள் கடற்கரையை வெறித்துப் பார்த்தபடி நிற்பது தெரிந்தது. உடுக்கின் வடிவில் அகன்று, ஒடுங்கிய அவளின் உடலழகு, அவனின் கண்களைச் சுண்டியிழுத்தன. விம்மிப் பூரித்த அவளின் மார்பகங்கள் ஏனோ கூழைக்கடாவின் வளைந்த தசைப்பிடிப்பான கழுத்தை அவனுக்கு நினைவுபடுத்தின.

## 4.

பொன்னுக்கிழவர் ஏதோ நினைத்துக்கொண்டு நீண்ட பெருமூச்சொன்றை விட்டார்.

நெடுந்தீவின் மேற்குக் கரையில் பெரியதுறைக்கும், வெடியரசன் கோட்டைக்குமிடையில் முப்பது பரப்புக் காணி ஒரு காலத்தில் அவரது முதுசமாயிருந்தது. பத்துப் பரப்புப் பனங்காணியும், இருபது பரப்பு வானம் பார்த்த வயற் காணியும் அவரது பரம்பரைச் சொத்துக்கள்.

இன்று அவை அவருக்குச் சொந்தமில்லை. மகளுக்கு அவற்றைச் சீதனமாகக் கொடுத்தார். வந்தவனோ நிலத்தை விற்றுத் தொலைத்துவிட்டு, வாயும் வயிறுமாக இருந்த மனைவியையும் கைவிட்டு, ஊரைவிட்டே ஓடிவிட்டான்.

மனம் உடைந்துபோன பொன்னுக்கிழவர், மனைவியையும், மகளையும் அழைத்துக்கொண்டு தீவின் தென்கரைக்கு வந்து குடியேறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினேழு ஆண்டுகள் கழிந்துவிட்டன.

முற்றத்தில் வடலிக் கன்றாக நின்றது, இன்று பெரும் பனையாக வளர்ந்துவிட்டது. கிழவருக்கு நாகம்மாதான் துணை. அவளுக்கும் அவர்தான் துணை. தாயின் முகத்தை அறியுமுன்பே தாயை இழந்துவிட்டாள் நாகம்மா. வயது வந்த வேளையில் தனது ஆச்சியையும் இழந்தாள்.

கிழவருக்கு மனைவி இருக்கும் மட்டும் நாகம்மா ஒரு பாரமாகத் தெரியவில்லை. ஊருக்குள் போய் ஏதாவது உழைத்து வந்தாரென்றால், கூப்பன் அரிசியோடு ஒருவிதமாகக் காலத்தைக் கடத்த முடிந்தது. வாடைக் காலத்தில் வருமானம் சற்று கூடுதலாகவே கிடைத்தது.

ஆனால், இந்த முறை வாடை எப்படியோ? வருஷத்துக்கு ஒரு முறை வரும் வாடையைத்தான் அவரும் நம்பியிருக்கின்றார்: "இம் முறை கொஞ்சம் காசு மிஞ்சினால், எப்படியாவது பேத்தியின்ரை கலியாணத்தை முடித்து விடலாம். ஒரு சேலைக்கும் ஒரு தாலிப் பவுணுக்கும் காசு கிடைத்தால் போதும்."

நாகம்மாவிற்கு தாலியைக் கட்டி அழைத்துப் போக விருத்தாசலம் தயாராக இருக்கின்றான். விருத்தாசலம் கிழவருக்குத் தூரத்துப்பேரன் முறை உறவு. நாகம்மாவிற்கு மச்சான் முறையாக வேண்டும்.

"ஏன் அப்பு கூப்பிட்டியளா?" என்று கேட்டபடி நாகம்மா வந்தாள்.

பேத்தியை நிமிர்ந்து பார்த்தார் கிழவர். பேரனின் மனதிற்குள் உள்ள நினைவை நாகம்மா உணர்வாள்.

"பிள்ளை நீ மட்டும் இல்லாட்டில் இந்தக் கிழவனை யார் கவனிப்பினம்? நீ இல்லாவிடில் நான் எப்பவோ தேசாந்திரம் புறப்பட்டிருப்பன். உன்னை ஒருவன்ரை கையில் என்டைக்குப் பிடித்துக் கொடுக்கிறனோ அண்டைக்குத்தான் நான் நிம்மதியாகக் கண்ணை மூடுவன்" என்பார். இதைக்கேட்டு நாகம்மாவின் கண்கள் கலங்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைத் தன் உயிராக வளர்த்தார். அவருக்குத் தேவைகள் இருக்கவில்லை. நாகரிகத்தின் அடிச்சுவடுகள் ஆழப் பதியாத தீவு. உணவு, உடை, இல்லம் என்பன தாம் மனிதனின் அத்தியாவசியத் தேவைப் பொருட்கள். ஆனால், இன்று இம் மூன்றுடன் போகப்பொருட்கள் என்பனவும் நான்காவதாகச் சேர்ந்துள்ளன. நாகம்மாவைப் பொறுத்தளவில் முதல் மூன்றுடன் அவள் திருப்திப்பட்டு விட்டாள். ஆகவே அவளுக்கு தேவைகள் இருக்கவில்லை.

"என்ன அப்பு.....?" என்று மீண்டும் கேட்டாள்.

"இம்முறை கடற்கரை அமைதியாக இருக்காது போலத் தெரியுது...." என்றார் கவலையோடு கிழவர்: "செமியோன் வழமையாக வாடி போடுகிற இடத்திலே புதுசா ஒருத்தன் வந்து வாடிபோட்ருக்கிறான். முரடன்போலக் கிடக்குது. இரண்டு மூன்று நாட்களில் செமியோனும் வரப்போறான். என்னதான் நடக்கப்போகிறதோ....?"

"நீங்க ஏன் கவலைப்படுகிறீங்க.....? அது அவங்க பாடு....." என்றாள் நாகம்மா. என்றாலும் அவளின் மனத்திலும் நிம்மதியில்லை.

"அவங்க ஒற்றுமையாக மீன் பிடிச்சால்தானே அவங்களை நம்பியிருக்கிற எங்கடை பிழைப்பும் நல்லா நடக்கும். செமியோன் இந்தமுறை பிந்தித்தான் போனான்!" என்றார் பொன்னுக்கிழவர்.

நாகம்மா ஏதோ நினைவு வந்தவளாக "அப்பு" என்றாள் ஏக்கத்தோடு.

"என்ன பிள்ளை?"

"செமியோன் அண்ணர் இந்தமுறை வருவாரோ?"

இதைக் கேட்கும்போது பிலோமினா அவள் கண்களில் நின்றாள். பிலோமினாவின் எதிர்காலமே அவனின் வருகையில்தான் தங்கியிருக்கிறது. இப்போதுகூட அவள் குடிசை வாசலில் நின்றுகொண்டு, கடலை ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்பது தெரிகிறது. அலையெறியும் கடலின் மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பில் எங்காவது செமியோனின் வள்ளம் தெரியாதா என்று ஆவலுடன் பார்த்துக்கொண்டிருக்கிறாள் போலிக்கிறது!

"வருவான் செமியோன். கட்டாயம் வருவான்" என்றார் கிழவர். பின் ஏதோ நினைத்துக்கொண்டவராக, "உவன் விருத்தாசலத்தைக் கண்டனியோ....? கனநாளாய் இந்தப் பக்கமே அவனைக் காணவில்லை?" என்று கேட்டார்.

"மச்சானா? அது எங்கேயாவது காட்டிலே முயலைத் தேடித் திரியும்... அவருடைய குதிரையும், அவரும்..." என்று சிரித்தாள் நாகம்மா. சிரித்தவள் உடனடியாகச் சிரிப்பை அடக்கிக் கொண்டாள். தங்கள் குடிசையை நோக்கி ஒரு ஆடவன் வருவதைக் கண்டாள். வருபவன் தன்னையே பார்த்துக்கொண்டு வருவதையும் அவதானித்தாள். 'ஓ... இவன்தான் புதிதாக வந்துள்ள சம்மாட்டியாரோ?'

"அப்பு! ஆரோ வருகினம்..." என்ற கூறிவிட்டுக் குடிசைக்குள் புகுந்து மறைந்தாள்

மரியதாஸ் வந்து திண்ணையில் அமர்ந்துகொண்டான். முற்றத்திலே கிளை பரப்பி வளர்ந்திருந்த வேப்பமரம் கொடுத்த குளிர்மை அவனுக்கு அந்த நேரத்தில் இதமாக இருந்தது. திண்ணையில் இருந்துகொண்டு பார்க்கிறபோது கடற்கரையில் இழுத்துவிட்டிருக்கிற அவனுடைய வள்ளமும் உருவாகிக்கொண்டிருக்கிற வாடியும் நன்கு தெரிந்தன.

"தம்பி எவடமிருந்து...?" என்று கேட்டார் கிழவர்.

"என்னுடைய ஊர் பேசாலை. இந்தமுறை தான் நெடுந்தீவுக்கு மீன் பிடிக்க வந்திருக்கிறன். நான் போட்டிருக்கிற வாடி உள்ளூராக்களுக்குரிய பாட்டில் இல்லை. வெளியூராக்களுக்குரிய பாட்டில்தான் இருக்கு" என்றான் மரியதாஸ்.

"நான் அதுக்குச் சொல்லவில்லை தம்பி. வழக்கமா அதில் செமியோன்தான் வாடிபோடுறது... அதனால்...." கிழவர்கூறி முடிக்கமுன் மரியதாஸ் குறுக்கிட்டான்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரியவரே! நான் கரைவலைத் தொழில் செய்யிறவன். எனக்கு வலை வளைக்கிறதுக்குக் கற்பார் இல்லாத கரைதான் தேவை."

கரைவலைத் தொழிலைப்பற்றிக் கிழவருக்கு ஓரளவு தெரியும். ஒன்று, ஒன்றரை மைல் நீளமான வலையின் ஒரு முனையைக் கரையில் நின்றபடி பலர் பிடித்திருக்க, மறு முனையைக் கடலுக்குள் குதிரை லாட வடிவில் வளைத்து, பின் இரு பக்கமும் ஒத்திழுத்து மீன் பிடிக்கின்ற தொழிலது.

"இந்தப் பகுதியில் கரைவலை யாரும் போடுறதில்லைத் தம்பி. ஐஞ்சு வரியத்துக்கு முந்தி மன்னாரிலேயிருந்து வந்த யோசேப்பு சம்மாட்டியார் ஒருதரம் இங்கை கரைவலை போட்டுப் பார்த்தார். வாய்க்கவில்லை. மீன் பட்டால்தானே? பதினைந்து நாளையோடை திரும்பிவிட்டார்."

இதைக் கேட்ட மரியதாஸ் மெதுவாகச் சிரித்துக் கொண்டான். "நானும் ஒருக்கா முயன்று பார்க்கிறன்...!" என்றவன் தற்செயலாக குடிசைக்குள் பார்க்க நேர்ந்தது. கதவுக்கு நேரே இருந்த மூலையில் அடுப்பிற்கு முன்னால் நாகம்மா குந்தியிருந்தாள்.

முழங்கால்களில் நாடியைப் பதித்தபடி அவள் அமர்ந்திருந்தாள். அவள் உடலின் மேடு பள்ளங்கள், அழகையும், கவர்ச்சியையும் அவளுக்குக் கொடுத்தன. குனிந்து அமர்ந்திருந்ததால் மேற்சட்டை மறைக்கத் தவறிய மென் பரப்பு செவ்வழகைக் காட்டியது. அவள் முகத்தில் காந்தம் போல இரு கரு விழிகள் சுழன்றன. அடுப்பில் எரிந்த தீயின் சுவாலை அவளின் முகத்தில் படிந்ததால் அக்கினிப் பூவாகக் காணப்பட்டாள். அளவுக்கு மீறிப் பூரித்திருந்த மார்பகங்கள், தொடைகளின் நசிப்பினால் மேற்பக்கம் வீங்கியிருந்தன. அவள் இருந்த அந்தக் கவர்ச்சியான நிலை, அவனின் வாலிப இதயத்தைச் சுண்டி இழுத்தது. ஒருகணம் தடுமாறிப் போனான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே வானத்தில் 'க்... குவாக்....க்வாக்....' என்ற ஒலியோடு கூழைக்கடா ஒன்று சிறகடித்துப் பறந்து செல்வது குடிசைக்குள் கேட்டது.

"கூழக்கடா தம்பி..." என்றார் புன்சிரிப்போடு கிழவர்: "எங்கிருந்தோ இவை இந்தப் பருவத்திலே தவறாமல் வந்திடுங்கள். இணை சேர்ந்துவிட்டுக் குஞ்சு பொரிச்சதும் பழையபடி போயிடுங்கள்....."

மரியதாஸ் இருந்த நிலையில் கூழைக்கடா பற்றிய பேச்சு அவனுக்கு எவ்வித சுவையுமளிக்கவில்லை. அவன் குடிசைக்குள் பார்த்த படியிருந்தான். அன்னியன் ஒருவன் வைத்தகண் வாங்காது தன்னையே பார்ப்பதைக் கண்டதும், நாகம்மா எழுந்து மறு மூலைக்குப் போய்விட்டாள். அவனுக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது.

கிழவர் கேட்டார்: "கரைவலைக்கு ஞாயமான ஆட்கள் தேவையே தம்பி?"

"ஓமோம்... எங்களில் பத்துப்பேர் இருக்கிறம்... இங்கேயும் ஆட்கள் பிடிக்கவேணும்....!"

"இந்தப் பருவத்திலே ஆட்கள் பிடிப்பது கஷ்டம் தம்பி, யூசுப்புச் சம்மாட்டியார் உள்ளூர்காரர் என்றதாலே அவருக்குப் பிரச்சைனை இல்லை... மற்றது செமியோன் தம்பி.... அவர் நெடுங்காலம் இங்கை பழகினதாலே இங்கை இருக்கிறவங்கள் அவரோடை வேலைக்குப் போகத்தான் விரும்புவினம்..." என்றார் பொன்னுக் கிழவர்.

அவன் வந்ததிலிருந்து செமியோன் பெயரையும், அவனுடைய திறமையையும்தான் அடிக்கடி கூறுகிறார்கள். மரியதாஸுக்கு அறிமுகமில்லாத அந்தச் செமியோன்மீது கோபம் கோபமாக வந்தது.

"செமியோன் கொடுப்பதிலும் பார்க்க இரு மடங்கு கூலி தருவன். நீங்கள் எல்லோரும் கரைவலையில் வேலை செய்யவேணும்... வேலை இருந்தாலும். இல்லாவிட்டாலும் ஒவ்வொருவருக்கும் நாள் கூலியாக ஐந்து ரூபா தருவன். இப்ப வேணுமென்றாலும் அட்வான்ஸ் தருகிறேன்" என்று வீம்போடு மரியதாஸ் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியதாஸ் எழுந்து படலையை நோக்கி நடந்தான்.

பனை மட்டைகளினால் பிணைக்கப்பட்டிருந்த படலையைத் தூக்கித் திறந்தபடி தன்னை அறியாமல் திரும்பி ஒரு தரம் குடிசையைப் பார்த்தான்.

மரியதாஸ் தன்னைப் பார்ப்பதை நாகம்மா கண்டாள். அவன் பார்வை தன்மீது ஊர்வதையும் உணர்ந்தாள். குடிசைக்குள் விருட்டெனப் புகுந்தாள்.

நாகம்மாவின் உயர்ந்து வளர்ந்த தோற்றத்தைப் புகைப்படமென தன் உள்ளத்தில் பதித்துக்கொண்டு, இதயம் பறிகொடுத்த நிலையில் நடந்தான் மரியதாஸ்.

## 5.

நல்ல தண்ணீர்க் கிணற்றுக்கு வடக்குப்புறமாகச் சிறிது தொலைவில் அமைந்திருந்தது ஊர் மயானம். ஓங்கி செழித்து வளர்ந்ததொரு ஆலமரமும் சிறியதொரு தங்குமடமும்தான் அந்த மயானத்தில் காணக்கூடியவை.

தங்குமடத்தின் குளிர்ச்சியான சீமெந்துத் தரையில் விருத்தாசலம் மல்லார்ந்து படுத்திருந்தான். இரண்டு கைகளையும் தலைக்குக் கீழே வைத்தபடி நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தான்.

கறுத்துத் திரண்டிருந்தது அவன் உடல். எண்ணெய் காணாததால் பரட்டை பற்றிப்போன தலைமயிரைப் பழுப்பேறிய ஒரு துவாயினால் மடக்கிக் கட்டியிருந்தான். பழுப்பேறிய ஒரு சாரம் இடுப்பை அலங்கரித்தது. முகத்தில் குழந்தைத்தனமான பேதைமை நிலவியது. ஆலமரத்தின்கீழ் பழுப்பு நிறமான கட்டைக் குதிரை ஒன்று மேய்ந்துகொண்டிருந்தது.

அதுதான் விருத்தாசலத்தின் குதிரை, குதிரையும், அவனும் எப்போதும் ஒன்றாகவே காணப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவின் சிறப்புகளில் ஒன்று இந்தப் போனிக் குதிரைகளாகும். மோட்டார் கார்களும், சைக்கிள்களும் இலங்கையில் அறிமுகமாவதற்குமுன் நெடுந்தீவுக் குதிரைகளுக்கு இலங்கை எங்கினும் மிகுந்த செல்வாக்கு இருந்தது. குதிரை வண்டில்களுக்கும், தனிச் சவாரிகளுக்கும் இக்குதிரைகளே தேவைப்பட்டன. ஆனால், இன்று இவை அதிகம் பயன்படாத மிருகங்களாகப் போய்விட்டன.

தீவின் கரடு முரடான வண்டில் பாதைகளில் சிறுவர் முதல் வயோதிபர் வரை 'டக் டக்' என்ற ஒலி எழுப்பியவாறு குதிரைகளில் செல்வது இனிய காட்சிதான். ஒரு பழைய சாக்கினை மடித்துக் குதிரையின் முகுகில் போட்டிருப்பார்கள். ஒரு பலமான கம்பையோ, இரும்புக் கம்பியையோ குதிரையின் வாயில் கொடுத்து சேணமாக்கியிருப்பார்கள்.

மேய்ந்துகொண்டிருந்த விருத்தாசலத்தின் குதிரை கனைத்தது. விருத்தாசலம் நித்திரை குழம்பி எழுந்து பார்த்தான். "என்னடா இராமா" என்று கேட்கவும் செய்தான்.

குதிரை தலையைச் சிலிப்பிவிட்டுத் தன்பாட்டுக்கு மேயத் தொடங்கியது.

ஒருக்களித்துப் படுத்திருந்தபடியே விருத்தாசலம் ஒரு புறமாகத் தலையைத் திருப்பிப் பார்த்தான், சற்றுத் தூரத்தில் சண்முகம் வருவது தெரிந்தது.

"சுடலை வயிரவருக்கு உருவம் இருந்தால் அவர் இவனைப் போலத்தான் இருப்பார்" என விருத்தாசலம் எண்ணிக்கொண்டான்.

சண்முகத்தான் என்ற சண்முகம் தங்கு மடத்தின் தூணோடு சாய்ந்து அமர்ந்தான்.

"எப்படிச் சண்முகம், ஊர்ப் புதினங்கள்?...." என்று விருத்தாசலம் கேட்டுவிட்டுச் சிரித்தான்.

"என்ன தம்பி, ஏதோ கொழும்பாலே வந்ததுபோல ஊர்ப் புதினம் கேட்கிறீர்..." என்றான் கேலியாகச் சண்முகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உந்தக் கொழும்புக்கு ஒருக்கால் நான் போகாமல் விடவா போறன்..."

சண்முகம் கேட்டான்: "நீர் எனக்கு முயல் ஒன்று பிடித்துக் கறிக்குத் தாறன் என்று சொல்லி எத்தனை நாளாகுது. ஏன் தம்பி, இப்ப முயலுகள் அம்பிடுகிறதில்லையோ? அல்லது தம்பியினுடைய குறி தவறிப் போகுதோ....?"

விருத்தாசலம் விருட்டென்று எழுந்து அமர்ந்துகொண்டான்.

"சண்முகம், இதோ பார்... நான் ஒரு முயலுக்குக் குறி வைச்சு அது தப்பிறதெண்டால், நான் பிறகு முயல் வேட்டையையே விட்டிடுவன். துவக்காலை வைக்கமுடியாத லெக்கை நான் என்ரை கூர்த் தடியாலை வைப்பன். தெரியுமா?" என்று கூறிவிட்டு, விருத்தாசலம் பக்கத்தில் சாய்த்து வைத்திருந்த நீளமான பொல்லொன்றை எடுத்து கைகளில் உருட்டினான். வளவளப்பான அத் தடியின் ஒரு முனையில் பிடி கழன்ற வில்லுக்கத்தியொன்று இறுக்கமாகச் செருகப்பட்டிருந்தது.

கத்தி விருத்தாசலத்தின் கை உருட்டலுக்கேற்பப் பளபளத்தது. அதன் பளபளப்பு சண்முகத்தின் கண்களைக் கூச வைத்தது.

"அதை சும்மா அங்கை வை தம்பி..." என்றான் சண்முகம் சிறிது பயத்தோடு.

"ஏன் பயமா இருக்கோ?..." என்று கேட்டுவிட்டு விருத்தாசலம் சிரித்தான்: "இது எத்தனை முயல்களை ருசி பார்த்திருக்கு தெரியுமோ?"

அவன் கூறுவதை சண்முகம் அவதானித்ததாகத் தெரியவில்லை. அவன் கூறினான்:

"கடற்கரையில் வாடி ஒன்று அமைக்கப்படுகிறதாம்.... மரியதாசாம். மன்னாரிலிருந்து வந்தவனாம்..... ஏதோ புது மாதிரி மீன் பிடிக்கப் போறானாம். செமியோன் சம்மாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருடைய இடத்தில் வாடி போடுறானாம். செமியோன் சம்மாட்டி வந்தவுடன் வில்லங்கம் வரப்போகுது என்று கதைக்கினம்...."

"நானும் கேள்விப்பட்டன், செமியோனிலும் பார்க்கக் கூலியும் கூடத்தாறனென்டு சொல்கிறானாம்... விசரன் போலக் கிடக்குது. ஏதோ கனக்கவா மீன் பிடிபடப் போகுது?...."

சண்முகம் பீடி ஒன்றை எடுத்து பற்றவைத்துக் கொண்டான்.

"தம்பி ஒன்று கேட்கிறன். கோவியாதையும்."

"நீ என்ன கேட்கப் போகிறாய் என்ற எனக்குத் தெரியும்... எப்ப கலியாணம் என்றுதானே கேட்கப் போகிறாய்...? இப்ப என்ன அவசரம்...! பொம்பிளை தயாரா இருக்கு, எப்ப வேணுமென்டாலும் தாலியைக் கட்ட வேண்டியதுதானே?...." என்று விருத்தாசலம் சிரித்தான்.

அவன் மனக் கண்களில் நாகம்மாவின் உருவம் தெரிந்தது. அள்ளி முடிந்த கொண்டையும், முல்லைச் சிரிப்புமாய் அவள் நின்றாள். விருத்தாசலம் மெதுவாகத் தன் கண்களை மூடிக் கொண்டான். அவனின் சிந்தையில் நாகம்மா சிரித்தாள்.

"அப்பு...." என்று அழைத்தவாறு, விருத்தாசலம் பொன்னுக் கிழவரின் குடிசைக்கு வருகின்றான். ஒருவரையும் காணோம். தூரத்திலே சில பெண்கள் தண்ணீர் அள்ளப் போவது தெரிந்தது. தண்ணீர் குடிப்போமென்று, குடிசையின் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான். மறுகணம் வீல் என்ற அலறல் குடிசைக்குள் எழுந்தது.

திடுக்கிட்டுப்போன விருத்தாசலம், குரல் வந்த மூலையைப் பார்த்தான்.

அங்கே நாகம்மா நின்ற கோலம்? அரையில் பாவாடை மட்டும் அணிந்து செவ்விள நீர்க் காய்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னை மட்டைகள் மறைக்க முயல்வதுபோல், தனது இரு கைகளாலும் நிர்வாணமான மார்பை அவள் மறைக்க முயன்றாள். ஒரு கையில் அவள் அணியும் மேற்சட்டை காட்சி தந்தது.

இக்காட்சியைக் கண்டு ஒரு கணம் நிலைகுலைந்துபோன விருத்தாசலம் வெளியே ஓடினான். அவன் தேகம் படபடத்தது. தொண்டை அடைத்துக் கொண்டது.

"தண்ணி குடிக்க வந்தன் நாகம்மா..." என்றான் அழாக்குறையாக.

"கூப்பிட்டுக் கொண்டு வரப்படாதோ? நான் சட்டை கிழிஞ்சு போச்சென்று தைச்சுப் போட..." என்ற குடிசைக்குள் இருந்து நாகம்மா முணுமுணுத்தாள்.

அவள் முணுமுணுத்தது அவனுக்குத் தெளிவாகக் கேட்டது.

"தெரியாமல வந்திட்டன் நாகம்மா.... கோவிச்சிடாதை.... நான் போட்டு வாறன்..." என்றான் அவன்.

"தண்ணியைக் குடிச்சிட்டுப் போ மச்சான்...." என்றபடி செம்பைக் கொண்டு வந்து அவனிடம் நீட்டினாள். அவளை நிமிர்ந்து பார்க்கக்கூசிய அந்த ஆடவன், தலையைக் குனிந்தபடி செம்பை வாங்கிக் கொண்டான்.

நினைவுச் சங்கிலித் தொடர் அறுந்தது.

"என்ன தம்பி, யோசிக்கிறீர்?..." என்று அவனைச் சண்முகம் உலுப்பினான்.

"ஒன்றுமில்லை...." என்று மென்று விழுங்கினான் விருத்தாசலம்.

"அது சரிதான் தம்பி, நீர் இப்பிடி ஆற அமரப் போட்டால், பொன்னுக் கிழவற்றை பேத்தியை ஆராவது நேற்று வந்தவன் அடிச்சுக் கொண்டு போயிடுவான்.

விருத்தாசலத்தின் முகம் திடீரென மாறியது.

"நாகம்மாவை அடிச்சுச் செல்ல இனி ஒருவன் பிறக்க வேணும், என்கிறன்....!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சும்மா கதைக்குக் கேட்கிறன், தற்செயலாக எதாவது நடந்து விட்டால்....?"

"அப்படி நடந்தால் நான் மனிதனாக இருக்க மாட்டன். முயல்களின்ரை வயிற்றில் பாய்ந்து பாய்ந்து இரத்தச் சுவை கண்ட இந்தக் கூர்த்தடி முதலில் அவனுடைய மார்பில் பாயும். பிறகு....!"

விருத்தாசலத்தின் ஆத்திரத்தைக் கண்டு சண்முகம் உண்மையில் பயந்தே போனான்.

"பயமுறுத்தாதே தம்பி...!"

விருத்தாசலத்தின் கண்கள் திடீரென வேறு இடத்தில் நிலைத்தன. இருபது யார் தூரத்தில் காணப்பட்ட ஈச்சம்பற்றை ஒன்று மெதுவாகச் சலசலப்பதை அவனது காதுகளும், கண்களும் உணர்ந்தன.

"சண்முகம் நீ வெகு நாளாக முயல் கேட்டாய்... பொறு, இப்ப உனக்குத் தாறன்..." என்ற விருத்தாசலம், மெதுவாகக் கூர்த்தடியைத் தூக்கிக் கொண்டு நகர்ந்தான். மறுகணம், அவனது வலது கை விசுக்கென்று ஈச்சம்பற்றையை நோக்கித் தடியை வீசியது. பற்றைக்குள் "கீச்... கீச்....ச்" என்ற மரண ஒலி எழுந்தது. ஈச்சம்பற்றையை நோக்கிச் சண்முகம் பாய்ந்து ஓடினான்.

கத்தி பாய்ந்த முயல் வேதனையால் துடித்து உயிர் துறந்தது.

சண்முகத்திற்கு இன்று நல்ல வேட்டைதான்! விருத்தாசலம் குதிரையில் தாவி ஏறினான்.

## 6.

திரேசம்மா அடுக்களைக் குடிசைக்குள்ளிருந்து கத்தினாள்:

"ஏய் பிலோமினா, என்னடி செய்கிறாய். அங்கே, நானும் விடிஞ்சதில இருந்து பார்க்கிறன். நீ சோடிச்சுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வாசலில் நிக்கிறாய்? என்னடி மாப்பிள்ளை பார்க்கிறாயோ?..... போன முறை பரிசு கெட்டது போதாதோ....?" வாசலில் நின்றபடி கடற்கரையை வெறித்து ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்த பிலோமினா தாயின் குரலைக் கேட்டு உள்ளே ஓடினாள்.

"ஏன் கத்துகிறாயெணை....?"

"ஓமடி, நான் கத்துகிறன். என்ரை தலைவிதி உங்களுக்கெல்லாம் அவித்துக் கொடுக்க வேணுமென்று! வீட்டில் ஒரு கோதாரியும் இல்லை. அவங்கள் ரெண்டு பேரும் உழைக்கிறதெல்லாவத்தையும் சாராயம் குடித்து அழிக்கிறாங்கள்... தேப்பன் சரியா இருந்தாத்தானே புள்ளைகள் சரியா இருக்கும்...." என்று ஒப்பாரி வைத்தாள் திரேசம்மா.

திரேசம்மா சத்தம் போடுவதில் தவறில்லை. சவரி முத்துவும், சூசைமுத்துவும் உழைக்கிற காசெல்லாவற்றையும் சாராயக் கடைக்குக் கொட்டி விட்டுச் சாப்பாட்டுக்கு மட்டும் வீட்டுக்கு வருவார்கள். வீட்டைப் பற்றி அவர்களுக்கு எதுவித அக்கறையும் இல்லை.

பாவம் திரேசம்மா.....!

வறுமையும், ஆற்றாமையும் அவளை ஓயாமல் கத்த வைக்கின்றது. பனாட்டு, ஓடியல் செய்து விற்றும், ஏதாவது கூலி வேலைக்குப் போய் உழைத்தும் இரண்டு ஆண்பிள்ளைகளுக்குச் சாப்பாடு போட அவளால் எத்தனை நாட்களுக்குத்தான் முடியும்?

இவற்றைப் பிலோமினா உணர்வாள். வாடை வீசத் தொடங்கினால் கடற்கரையில் வாடிகள் அமைந்த பின் ஐந்து மாதங்களுக்காயினும் சாப்பாட்டுக் கஷ்டம் குறைவு. சோளகம் வீசத் தொடங்கியதும், பழையபடி வீட்டின் அடுப்பில் பூனை படுத்துறங்கத் தொடங்கி விடும்.

"ஏனம்மா அழுகிறாய்?... இப்ப நீ அழுதாப்போல இல்லாதது வந்து விடப் போகுதோ? இன்னும் இரண்டு மூன்று நாளைக்குத்தானே இந்தக் கஷ்டம்.... வாடி அமைக்கத் தொடங்கி விட்டினம்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரேசம்மா விருட்டென்று எழுந்தாள். சுட்டு விரலால் மகளைச் சுட்டியபடி கத்தினாள்: "இந்த முறை நீ வேலைக்குப் போகலாம் என்று மட்டும் நினையாதே... போன முறை பட்டதே போதும்?.... இனி நீ வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது... அந்தச் செமியோன் கரையான் உனக்கு, எனக்கு எல்லாம் ஆசைகாட்டி, ஏமாத்திப் போட்டான்... தூ...அவன் ஒரு மனிசனா?.... பொறுக்கி...."

பிலோமினா திகைத்து விட்டாள். செமியோனைக் காணலாம். அவன் கால்களைக் கட்டிக் கொண்டு, "நான் தான் பிழை செய்தன்... நீங்கள் உங்களுடன் ஓடிவந்திடும்படி கேட்ட போதும், நான் இவர்களுக்காக மறுத்தனே, அதன் பலாபலன்களை உணர்ந்திட்டன்... எனக்கு ஒருவரும் வேண்டாம்.... நீங்கதான் வேணும்... என்னை அழைச்சுப் போங்கோ...." என்று கதற வேண்டுமென நினைத்திருந்தாள். எல்லாம் கடற்கரை மணல் வீடாகி விட்டதா...?

"அம்மா....?" என்றாள் ஈனக்குரலில் பிலோமினா.

"எல்லாம் சொல்லி விட்டன்... வேறு பேச்சு வேண்டாம்...." என்று இரைந்து விட்டு, சுருட்டு ஒன்றை வாயில் பற்ற வைத்தபடி வெளியேறினாள் திரேசம்மா.

பிலோமினா விக்கித்துப் போய் நின்றாள். அவளின் இதயத்தில் ஆயிரமாயிரம் முட்கள் தைத்தன. விழிகள் கலங்கி நீரைச் சொரிந்தன. "என் உயிரே... என் உயிரே... நான் பாவி. நான் பாவி... வாவென்று அழைத்தும் வர மறுத்தேனே?" என்று அவள் உள்ளம் அழுதது. இடிந்து போய் ஒரு மூலையில் அமர்ந்து விட்டாள்.

"பிலோமினா" நாகம்மா அழைப்பது கேட்டது. கண்ணீரைத் துடைத்து விட்டு எழுந்து வெளியே வந்தாள்.

"பிலோ! செமியோன் அண்ணனுடைய வள்ளங்கள் வந்திட்டுதாம்... அவர் நாளைக்கு வாறாராம்..." என்றாள் நாகம்மா மூச்சு விடாமல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மெய்யாகவா?" நெஞ்சில் கொந்தளிக்கும் ஆவலை பிலோமினாவால் அடக்க முடியவில்லை.

"அதோ.... அங்கே பார்....!" என்று கடலைக் காட்டினாள் நாகம்மா.

பிலோமினா கடற்கரையை ஆவலோடு பார்த்தாள். மூன்று யந்திரப் படகுகள் கரையில் நின்றிருந்தன. அவற்றின் புதுவர்ணம் வெயிலில் பளபளத்துக் கொண்டிருந்தது. மரியதாஸின் கரைவலை வள்ளத்துக்குப் பக்கத்திலேயே இந்தப் படகுகளும் நின்றிருந்தன.

பிலோமினாவின் முகத்தில் என்றுமில்லாத மலர்ச்சி சிரிப்பதை நாகம்மா கண்டாள்.

## 7.

குடிசையைச் சுற்றி வளவெல்லாம் கங்கு மட்டைகள் இறைந்து கிடந்தன. வாடைக்காற்றின் சிலிர்ப்பிற்குத் தாக்குக் கொடுக்க முடியாது பிடி கழன்ற அவை பனைகளிலிருந்து வீழ்ந்து, நிலத்தில் சிதறிக் கிடந்தன. பன்னாடைகள் காற்றில் அள்ளுப்பட்டு பகிற்று மதிலெல்லாம் செருகிக் கிடந்தன. அவற்றை எல்லாம் பொறுக்கி, குடிசைத் தாழ்வாரத்தில் அசைவு கட்டி அடுக்கி வைத்தாள் நாகம்மா.

நல்ல தண்ணீர் அள்ளி வர வேண்டும் என்ற நினைவு அவளுக்கு எழுந்தது.

நாகம்மா குடத்தைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டாள். சூரியன் அடிவானில் விழுந்து கொண்டிருக்கும் நேரம்.

"ஏன் பிள்ளை, கொஞ்சம் நேரகாலத்தோடு தண்ணி அள்ளிவரக்கூடாதா?" என்று பொன்னுக் கிழவர் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் பிலோமினாவையும் கூட்டிக் கொண்டு போறன் அப்பு... அப்படி என்ன பயம்....?'' என்றாள் பேத்தி துணிவோடு,

குடிசை வாசலில் கடற்கரையை நோக்கியவாறு பிலோமினா நின்றிருந்தாள். அதே பாவாடை, அதே சட்டைதான். ஆனால், முகத்தைக் கழுவித் தலையை வாரிவிட்டு, தன் விழிகளிலே ஆவலை நிறைத்தபடி அவள் நின்று கொண்டிருந்தாள்.

"செமியோன் அண்ணை நாளைக்குத்தான் வருவாராம்'' என்றாள் நாகம்மா கேலியாக.

பிலோமினா, நாகம்மாவைப் பார்த்து புன்சிரிப்பை உதிர்த்தாள்.

"நாகம், ஒரு வருஷமாகக் காத்திருக்கிற என்னால் ஒரு நாள் பொறுக்க முடியவில்லையடி...'' அவளின் விழிகளில் கண்ணீர் பனித்திருப்பதை நாகம்மா அவதானித்தாள்.

"ஒன்றுக்கும் கவலைப்படாதை பிலோ.... தண்ணி அள்ள வாறியா?''

"நீ மட்டும் போட்டு வா நாகம்?'' என்றாள் பிலோமினா.

தோழியின் மனநிலையைப் புரிந்து கொண்ட நாகம்மா, சிரித்தபடி நடந்தாள். கிணற்றடியை அடையும்வரை அவளுக்குப் பிலோமினாவின் துயரமே நினைவில் நின்றது. பாவம் பிலோமினா, இந்தச் சிறு வயதிலேயே மிக்க துயரை அனுபவித்து விட்டாள். எல்லாம் சரியாக நடந்திருந்தால் இன்று அவள் செமியோனின் மனைவியாக இங்கு வந்திருப்பாள். சில வேளை கையில் ஒரு குழந்தையுடனும் வந்திருப்பாள்.

குழந்தையின் நினைவு எழுந்ததும், வேறு சில நினைவுகளும் அவள் மனதில் கிளர்ந்து எழுந்தன. பெண்ணின் பூரணத்துவம் தாய்மைதானே. பேசாலைச் சம்மாட்டி, அவளை விழுங்கி விடுவதைப் போல் பார்த்த பார்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கொஞ்சங்கூட வெட்கமில்லாத மனிசன். உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை அப்படியா பார்ப்பார்கள்?'

நாகம்மா தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

கிணற்றை நெருங்கியபோது, 'டுமில்' என்ற வெடிச் சத்தம் கேட்டது. நாகம்மா திடுக்கிட்டுப் போனாள். பிறகு தெளிவடைந்தாள். யாரோ முயலுக்கு வெடி வைத்திருக்க வேண்டும்.

தூரத்தில் குதிரை ஒன்று பாய்ந்து வந்து கொண்டிருந்தது. விருத்தாசலம் கிணற்றுக்கு அருகில் வந்து குதிரையிலிருந்து குதித்து இறங்கினான். இறங்கியவன் சில கணங்கள் அவளையே வைத்த கண் எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்ன மச்சான், அப்படிப் பார்க்கிறாய்... தெரியாத பெண்ணைப் பார்க்குமாப்போல...." என்று நாகம்மா கேலி செய்தாள்.

விருத்தாசலம் தன்னைச் சமாளித்துக் கொண்டான்.

"தனியாகவா வந்தாய் நாகம்மா?......"

"ஏன் வரக்கூடாதா?...."

"பிறத்தி ஆட்களெல்லாம் வரத் தொடங்கியாச்சு.... யார், யார் எப்படியோ? நாங்கதான் கவனமாக இருக்க வேணும் நாகம்மா......" என்றவன் நாகம்மாவின் கையில் இருந்த தண்ணீர் அள்ளும் நார்ப் பட்டையை வாங்க முயன்றான்.

"தண்ணி வேணுமா...?" என்ற அவள், நீரை அள்ளி விருத்தாசலத்திடம் கொடுத்தாள்.

"மச்சானுக்கு எப்பவும் தண்ணிவிடாய்தான்...." என்று கூறிவிட்டு, அவள் கல கலவெனச் சிரித்தாள். அவள் எந்த நிகழ்ச்சியைச் சொல்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்தது. அவளை ஏறிட்டுப் பார்த்தான். பொன் நிறக் கலசங்கள் அவனின் நினைவுக்கு வந்தன.

"என்ன மச்சான் யோசனை....?"

"ஒன்டுமில்லை...." என்றபடி அசட்டுச் சிரிப்புச் சிரித்தான் விருத்தாசலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டையிலேயே வாய் பதித்துக் குடித்து விட்டு, "நீ இனிமே தனியே வராதை, நாகம்மா." என்றான்: "இம் முறை ஆரோ புதிசா ஒருவன் வந்திருக்கிறானாம்... அவனை இப்பதான் பூவரசங் காட்டுப் பக்கம் கண்டன். கையிலே துவக்கொன்றை வைத்திருந்தான். முயல் ஒன்றுக்குக் குறி வைத்தான்.... இலக்கு தப்பி விட்டுதுபோல... பிறகு பனை ஒன்றில் இருந்த கூழக்கடா ஒன்றைச் சுட்டிட்டான்... நல்ல பெரிய கடா..." என்றான் விருத்தாசலம்.

"நீங்க ஏன் மச்சான், கன நாளா வீட்டுப் பக்கமே வரவில்லை... அப்பு தேடினவர்....."

"நேரமில்லை நாகம்மா..... நாளைக்கு வாறன் என்று சொல்லு...."

"நீங்க இந்த முறை வாடியிலே வேலைக்கு வாறியளா?....."

விருத்தாசலம், மீண்டும் ஒரு தடவை அவளை உற்றுப் பார்த்து விட்டு, "இந்த முறை நான் நல்லா வேலை செய்யப் போறன்..... ஆர், கூடச் சம்பளம் தருகினமோ அவர்களிடம் வேலைக்குப் போவன்...." என்றான்.

"ஏன் காசிலே திடீரென்று ஆசை வந்திட்டுது மச்சானுக்கு...?" என்று கேட்டு விட்டு நாகம்மா கலகலவென்று சிரித்தாள்.

அவளுடைய அந்தச் "? சிரிப்பிலே விருத்தாசலம் என்றும் அனுபவிக்காத ஒரு இன்பத்தை அன்று அனுபவித்தான். சண்முகம் அனுடைய மனதிலே கிளறி விட்ட ஆசைக் கனலின் விளைவோ?

"ஓம் நாகம்மா! எனக்குக் காசு தேவைதான்! நான் கலியாணம் செய்யப் போறன், அதுக்குப் பணம் தேவைத்தானே!" என்று கூறிவிட்டு அவளை வெறித்துப் பார்த்தான் விருத்தாசலம். அவனுடைய பார்வையின் காங்கையை தாங்க முடியாமல் நாகம்மா வேறு திசையில் பார்த்தாள்.

"நான் வாறன்...." என்று புறப்பட்டாள், நாகம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாகம்மா, ஆர் எனக்கு பொம்பிளை என்று கேட்காமல் போறியே?...." என்று பின்னால் குரல் கொடுத்தான் விருத்தாசலம்.

"எல்லாம் சரி வந்ததும் எங்களுக்குச் சொல்லாமலா கலியாணம் செய்யப் போறாய்? அப்போ தெரியும் தானே...!"

நாகம்மா நடந்து போகின்ற அழகைப் பார்த்து ரசித்தபடி விருத்தாசலம் நின்றான். இடுப்பில் ஏறிய குடத்திற்கு இசைய அவளது இடை அசைவது அற்புதமான காட்சியாக இருந்தது.

"நான் ஒரு விசரன்....! காட்டுக்குள் இவ்வளவு காலமும் வீணாக அலைஞ்சு திரிந்திட்டன்" என்று தனக்குத்தானே அவன் கூறிக் கொண்டான்.

"யாரப்பா நீ...தனிய வாற பெட்டையோடு சேட்டை விடுகிறாய்...?" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். ஒரு கையில் துப்பாக்கியுடனும் மறு கையில் உயிர் துறந்த கூழைக்கடாவோடும் மரியதாஸ் சம்மாட்டி நின்று கொண்டிருந்தான்.

"அந்தப் பழக்கம் எல்லாம் எங்களிட்டை இல்லைங்க... அவ நான் கலியாணம் செய்து கொள்ளப்போற பெண்ணுங்க..." என்றான் விருத்தாசலம் மரியாதையோடு.

மரியதாஸின் முகத்தில் இதைக் கேட்டதும் கருமை படர்ந்தது. அதைக் கவனியாது விருத்தாசலம் தனது குதிரையை நோக்கி நடந்தான்.

## 8.

மத்தியானத்திற்குப் பிறகு கிழக்கு அடி வானில் கரு மேகப் போர்வை படரத் தொடங்கியது.

"இராவைக்குச் சரியான மழை பெய்யும்போல் இருக்குது..." என்று திண்ணையில் குந்தியிருந்த பொன்னுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவர் முணுமுணுத்துக் கொண்டார். கடற்கரையை நோக்கிக் கொண்டிருந்த அவரின் பார்வையில் செமியோனின் மூன்று யந்திரப் படகுகள் கரையை நோக்கி வருவது தெரிந்தது.

கிழவர் ஏதாவது கலவரங்கள் மூளலாம் என எதிர் பார்த்தார். செமியோனின் தொழிலாளர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்வது காற்றோடு கலந்து வந்தது. செமியோன் வரும்வரை பொறுத்திருக்கின்றார்கள் போலும் என்ற கிழவர் நினைத்தார்.

அன்று பின்னேரம் யூசுப்புச் சம்மாட்டியாரும் தனது கட்டு மரங்களோடு வந்து வழமையான இடத்தில் வாடி அமைத்துக் கொண்டார்.

இன்னும் இரண்டு நாட்களில் அந்தக் கடற்கரை விழாக்கோலம் பூண்டு விடும். மணல் தரை எங்கும் உப்பில் ஊறவைத்த மீன்கள் காயவிடப்பட்டிருக்கும். பாடல்களும், கூக்குரல்களும் ஒலிக்கும். இந்த அமர்க்களத்தில் வாடைக் காலம் கழிந்து விடும்.

திடீரென, "ஐயோ... ஐயோ... என்னைக் கொல்லுறான்..." என்ற அழுகுரல் பிலோமினா வீட்டிலிருந்து எழுந்தது. இதைக் கேட்டு நாகம்மா குடிசைக்குள்ளிருந்து வெளியே ஓடி வந்தாள்.

"இது வழக்கமாக நடப்பதுதான் பிள்ளை...." என்றார் கிழவர்.

"என்றாலும் அப்பு, திரேசம்மாவும், பிலோமினாவும் பாவங்கள்.... ஒருக்காப் போட்டு வாங்கோ... போங்கோ அப்பு... நீங்க போனாத்தான் சரி வரும்..." என்று நாகம்மா கெஞ்சினாள்.

கிழவர் எழுந்து நடந்தார்: "குடிகாரன்! அந்த ரெண்டு பொம்பிளைகளையும் போட்டு ஏன்தான் வதைக்கிறானோ....?!!

பிலோமினாவின் குடிசையில் சவரிமுத்து முழு வெறியில் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தான். எதிர்த்து வாய் காட்டிய திரேசம்மாவிற்கு இடையிடையே கையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியும், காலால் உதையும் கொடுத்தான். திரேசம்மா உச்சஸ்தாயியில் கத்தினாள்.

"என்னைக் கொல்லடா... ஒரேயடியாக் கொண்டு விடடா கோதாரியிலே போவான்..." அவள் தூஷணைகளாலும் அர்ச்சனை செய்தாள்.

பொன்னுக் கிழவரைக் கண்டதும் ரகளை சிறிது அடங்கியது.

"டேய் சவரிமுத்து. இதென்னடா... வேலை? உழைப்பதைக் கொடுக்காமல் திரேசம்மா என்னத்தை வைத்துச் சமைத்துப் போடுகிறது? இதுகள் பசியிலே தவிக்க, நீ உழைச்சதை எல்லாம் குடித்திட்டு வாறாய்?.... இது உனக்கே நல்லா இருக்கா?... வீட்டில் ஒரு குமர் இருக்கென்ற கவலையாவது இருக்க வேண்டாமோ...?"

பொன்னுக் கிழவர் கூறியது சவரிமுத்துவின் கோபத்திற்குத் தூபமிட்டது. அவன் குறுக்கிட்டான்: "அந்தக் குமரியின்ரை கதையை விடு, அம்மான். அவளின்ரை மாப்பிளைதான் வரப்போறானே....!"

"உன்னுடைய மேன் சூசையால்தானே அந்தக் கலியாணமும் நிண்டது... குடிச்சப் போட்டு செமியோனை நீதியீனமாகப் பேசினால் அவன் அடி போடாமல் விடுவானோ? இல்லைக் கேட்கிறன், நீதான் விடுவியோ?... இதோ பார் சவரிமுத்து, கடற்கரைக்கு ஆக்கள் வரத்தொடங்கி விட்டினம்... நாங்கள் கொஞ்சம் மரியாதையாக இருக்க வேணும்... தெரிந்ததோ....!"

"நீங்கள் சொன்னால் சரி அம்மான்... ஆனால், யாழ்ப்பாணத்திலிருந்து சூசையனும் வாறானாம்...!"

இதைக்கேட்டு பிலோமினா விம்மி விம்மி அழுதாள்.

"நீ ஏன் பிள்ளை அழுகிறாய்?...." என்று பொன்னுக் கிழவர் கேட்டார்.

ஆண்கள் நீதியீனமாக என்று அதிகாரத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக் கொண்டார்களோ அன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் அழத் தொடங்கி விட்டார்கள். பிலோமினா மட்டும் இதற்கு விதிவிலக்கா?

காதலிப்பதில் இருந்த துணிச்சல் அவளிடம் அதை நிறைவேற்றிக் கொள்ளப் போராடுவதில் இருக்கவில்லை.

குதிரை ஒன்று வரும் சத்தம் கேட்டது. பொன்னுக் கிழவர் வெளியே பார்த்தார்.

"விருத்தாசலம்... போறான்..."

அதே நேரத்தில் கடற்கரையில் திடீரெனப் பலர் வாக்குவாதப்படுகின்ற கூச்சல் எழுந்தது.

## 9.

செமியோன் மட்டும் பொறுமையோடும், பொறுப்புணர்ச்சியோடும் நடந்து கொண்டிருக்காவிடில் அன்று அக்கடற்கரையில் இரத்தத் துளிகள் சிந்தியிருக்கும்.

யூசுப்புச் சம்மாட்டியார் கூறிக்கொண்டிருந்தார்:

"உண்மையில் இது செமியோனின் வழமையானபாடு.... எனக்குத் தெரிந்த காலத்திலிருந்து அவனுடைய தேப்பனும், பிறகு செமியோனும் இதிலதான் ஒவ்வொரு முறையும் வாடி அமைச்சு வருகினம். மரியதாஸ்! நீ இன்றைக்கு வந்திட்டு உரிமை கொண்டாடுவது முறையல்ல. சட்டப்படி முதல் வருகிறவர்களுக்குத் தான் பாடு என்று கூறுவதும் சரியல்ல... தம்பி நாம் ஒற்றுமையா மீன் பிடிக்கிற கடற்கரை இது... இதுவரை வீண் சண்டை சச்சரவு எதுவும் இங்கை வந்தது கிடையாது...."

மரியதாஸ் விட்டுக்கொடுப்பதாக இல்லை.

"நீங்கள் என்ன தான் சொன்னாலும் நான் அமைச்ச வாடியைப் பிடுங்க மாட்டன், என்ரை உசிர் இருக்கிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் வாடியிலே ஒருத்தன் கை வைத்தாலும் நான் பார்த்துக்கொண்டிருக்க மாட்டன்." என்று அவன் வீம்புடன் பதிலளித்தான்.

செமியோன் மிகவும் அமைதியாக இருந்தான்.

"அவன் எப்பவும் இப்படித் தான். நல்ல பொறுமையானவன்" என் பொன்னுக் கிழவர் எண்ணிக்கொண்டார்.

செமியோனின் பொறுமை அவனுடைய தொழிலாளர்களிடம் இருக்கவில்லை.

பேதுரு மிகுந்த ஆத்திரத்தோடு குறுக்கிட்டான்:

"அதையும் தான் பார்ப்போம்... டேய், கனக்க ஞாயம் பேசினியெண்டால் நீங்க ஒருத்தரும் இங்கே இருந்து போக மாட்டியள்... உன்ரை வாடிக்கு நெருப்பு வைப்பேனடா வடுவா..."

கீழ் வானில் கரு மேகத்திரள்கள் கூடின. அவை மேல்வானைத் தழுவிப் படரத் தொடங்கின. வாடைக் காற்று பனை ஓலைகளிடையே சரசரத்தவாறு சற்று வேகமாக வீசத் தொடங்கியது. அமைதியாக விளங்கிய அந்தக் கடற்கரையில் அமைதி அழிவதற்கான அறிகுறிகள் தென்படலாயின.

பேதுரு ஆத்திரத்துடன் பேசுவதைக் கண்டு செமியோன் அவனைத் திரும்பிப் பார்த்தான்.

செமியோனின் அகன்ற நெற்றி மேலேறி இறங்குவதையும், கண்களில் அசாத்திய கண்டிப்பு நிறைந்த பார்வையையும் கண்டு பேதுரு, தன் சம்மாட்டியாரின் மனோ நிலையை உணர்ந்து கொண்டான். அவனின் பேச்சு அடங்கியது.

"செமியோன் மட்டும் ஒருக்கால் வாய் அசைத்தால் மரியதாஸின் கூட்டம் இருந்த இடம் தெரியாமல் போய் விடும். ஆனால், அவன் தனது தகப்பனிடமிருந்து மீன் பிடிக்கும் நுணுக்கங்களை மட்டும் கற்கவில்லை; பொறுமையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றிருக்கிறான்!" என்று பொன்னுக் கிழவர் எண்ணிக் கொண்டார்.

"தம்பி, மரியதாஸ், வீணாக நாங்கள் வாக்குவாதப் படுவதில் எதுவுமே ஆகாது.... இது வழக்கமாக நான் வாடி அமைக்கிற இடம் என நீ நம்பாவிட்டால் இங்கையிருக்கிற வேறை ஆக்களைக் கேட்டுப்பாரேன். இதோ நிற்கிற இந்த வாடிக் கிழவரைக் கேட்டுப் பார்...." என்று பொன்னுக் கிழவரைச் சுட்டிக் காண்பித்தான்.

மரியதாஸ் ஒரு கணம் சிந்தித்தான். செமியோன், எந்த நிலையிலும் பொறுமை இழக்காது, ஒரு தலைவனுக்குரிய ஆண்மையோடு வீற்றிருப்பதைக் கண்டான். தான் அவசரப் பட்டு விட்டதையும் உணர்ந்துகொண்டான்.

ஆனால், அமைத்த வாடியைப் பிரிப்பதா?

"கரைவலைத் தொழிலுக்கு, வேறுபாடு ஏற்றதாக இல்லை...." என்றான் மரியதாஸ்.

"அதே போல என்ரை இஞ்சின் போட்டு கரையேற இதைவிட வசதியான இடம் வேறு இல்லை." என்றான் பதிலுக்கு செமியோன்.

யூசுப்புச் சம்மாட்டியார், அங்கு எழுந்த சிக்கலான நிலைமையைப் புரிந்துகொண்டார். செமியோன் படிப்படியாகப் பொறுமையை இழப்பதையும் கண்டுகொண்டார்.

"நான் ஒன்று சொல்கிறன். நீங்கள் ரெண்டு பேரும் கேட்கிறியளா? மரியதாஸ் இதிலே கரைவலை போடட்டும்.... செமியோனும் இதிலேயே தன் போட்டுகளை இழுத்து விடட்டும்... செமியோன் இம்முறை மட்டும் கொஞ்சம் தள்ளி உன்ரை வாடியைப் போட்டுக்கொள்.... பிழைக்க வந்த இடத்தில் வீண் சண்டை வேண்டாம்... மரியதாஸ் தெரியாமல் வாடியைக் கட்டிப் போட்டான். இனி அதைப் போய் பிடுங்குவது அபசகுனம் போல.... இருக்கும்..." என்று சமாதானம் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது தான் சரி தம்பி...." என்று பொன்னுக் கிழவரும் ஆமோதித்தார்.

ஒரு தீர்மானத்திற்க வந்தவன்போல் செமியோன் எழுந்தான். தன் ஆட்களை அழைத்து வாடியை அங்கிருந்து தள்ளி வேறு இடத்தில் அமைக்குமாறு கூறி, அங்கு நிகழவிருந்த இரத்தக்களரியைத் தடுத்தான்.

## 10.

இந்த முறை வழமையிலும் அதிகமான தொகையில் கூழைக்கடாக்கள் நெடுந்தீவுக்கு வந்துள்ளன என நாகம்மா எண்ணினாள். ஒவ்வொரு நாள் அதிகாலையும் அவளது குடிசைக்கு மேலாகச் சோடி சோடியாக வெண் கொக்குகள் குரலெழுப்பிய படி பறந்து சென்றன. பனங் கூடல்களிலும், குட்டைக் காடுகளிலும் திக்குத் திக்காகக் கூழைக்கடாக்களே காணப்பட்டன.

மாலை வேளைகளில் இருந்தாற் போல, துப்பாக்கிச் சத்தங்களும் எழுந்தன.

"வாழவந்த இடத்தில் உயிரைப் பறிகொடுக்கின்றனவே" என்று நாகம்மா எண்ணிக் கவலைப்பட்டாள்

"நாகம்மா, தண்ணி அள்ளப் போறன் வாறியா?...." என்று பிலோமினா அழைத்தாள்.

பிலோமினாவும், நாகம்மாவும் இருந்து ஆற அமரபேசி நான்கு நாட்களாகின்றன. அவ்வளவு வேலை நாகம்மாவுக்கு, மீன்பிடிகாலம் தொடங்கிவிட்டதல்லவா?

பிலோமினாவையும், வேறுசில பிள்ளைகளையும் தவிர, ஏனைய யாவருக்கும் அதிகாலை முதல் வாடிகளில் மீன்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளந்து உப்புப் போடும் வேலையிருந்தது. கடந்த மூன்று நாட்களாக மீன்பிடி நன்றாக நடக்கின்றது.

செமியோனுக்குத்தான் நல்ல அதிர்ஷ்டம்!

மாலை வேளைகளில் அவனுடைய இயந்திர படகுகள், நைலோன் வலைகளையும், தொழிலாளர்களையும் சுமந்து கொண்டு, ஆழ் கடலுக்கு விரைந்து செல்லும். அதிகாலைகளில் நிறைந்த மீன் சுமையுடன் படகுகள் தண்ணீரைக் கிழித்துக்கொண்டு திரும்பிவரும்.

யூசுப்புச் சம்மாட்டியாருக்கு ஆறு கட்டுமரங்கள் இருந்தன. அவற்றில் மூன்றிற்கு மட்டுமே இயந்திரம் பூட்டியிருந்தார். அதனால் அவரின் மூன்று கட்டுமரங்கள் சற்று ஆழ்கடலிலும், ஏனையவை கரையோரத்திலும் தொழில் செய்தன. செமியோனைப் போல அவருக்குத் தொழில் நடக்கவில்லை.

மரியதாஸ் பாடு பெரும்பாடாயிருந்தது.

அவன் கடந்த மூன்று நாட்களாக நாளொன்றுக்கு மூன்று முறை கரைவலை இட்டு இழுத்தான். அவன் எதிர் பார்த்தபலன் கிட்டவேயில்லை. கூலி கொடுப்பதற்கும் போதுமான மீன் பிடிபடவில்லை. எனினும், மரியதாஸ் தனது தோல்வியைப் பெரிதாகக்காட்டிக் கொள்ளவில்லை. அவனுடன் வேலை செய்த தொழிலாளர்கள் கரைவலைத் தொழிலுக்கு ஏற்ற கடற்கரை இதுவல்ல என்ற முடிவுக்கே வந்து விட்ட போதிலும் மரியதாஸ் அவ்வாறெந்த ஒரு முடிவுக்கும் வரவில்லை. அவன் திடத்துடனும் நம்பிக்கையுடனும் காணப்பட்டான்.

நாகம்மாவிற்கு அவன்மீது பச்சாதாபம் ஏற்பட்டது

"என்னடி யோசித்துக்கொண்டு நிற்கிறாய், வாறியா...? இல்லையா?" என்ற பிலோமினா திரும்பவும் நாகம்மாவிடம் கேட்டாள்.

நாகம்மா குடிசைக்குள் நுழைந்து குடத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியில் இரு பெண்களும் எதுவுமே பேசவில்லை. கிணற்றுக் கட்டில் மண்குடத்தையும் பட்டையையும் வைத்து விட்டு, கிணற்றுக் கட்டிலேயே அமர்ந்து கொண்டனர்.

மேற்கு வானில் சூரியன் வீழ்ந்து கொண்டிருந்தான். பிலோமினா அதனைக் கண்கொட்டாமல் பார்த்தபடியே கேட்டாள்:

"நாகம், அவர் என்னைப் பற்றி எதுவுமே உன்னிடம் கேட்கவில்லையா?...." பிலோமினா இருந்த நிலையில் ஒரு பாட்டம் அழுதுவிடுவாள் போல் காணப்பட்டாள். நாகம்மா என்ன பதில் கூறுவதென்று தெரியாமல் விழித்தாள்.

பொன்னுக்கிழவர், நாகம்மா, விருத்தாசலம் ஆகியோர் செமியோனின் வாடியிலே மீனைக், கருவாடாக்கி வருகின்றனர். சவரிமுத்து, திரேசம்மா ஆகியோர் மரியதாஸிடம் வேலை செய்தனர்.

செமியோன் ஒரே ஒரு தடவை மட்டும் நாகம்மாவுடன் பேசியிருக்கிறான்.

"தங்கச்சி, சுகமா?....." என்று முதல் நாள் சந்தித்த போது அவன் கேட்டான். அவ்வளவு தான். பிலோமினாவைப் பற்றி ஏதாவது விசாரிப்பான் என்று நாகம்மா எதிர்பார்த்தாள். அவன் எதுவுமே கேட்கவில்லை. "அவனுக்கு என்ன அவ்வளவு கல்மனமா?" என்று கூட நாகம்மா எண்ணினாள்.

பிலோமினா விம்மி விம்மி அழுதாள்.

"பிலோ...?"

"எப்படி லேசாக எல்லாத்தையும் மறந்து போனார்?.... நான் உசிரோடு இருக்கிறேனா இல்லையா என்பதைக் கூட அறிவதில் விருப்பமில்லை....."

தூரத்தில் கரிக்குருவி ஒன்று வீரிட்டு அலறியது.

பிலோமினா விம்மியவாறு தொடர்ந்தாள்: "அவரிலே நான் உசிரையே வைச்சிக்கிறேனடி. எல்லாத்தையும் அவர் மறந்திட்டார்! இரவிரவா என்னிடம் ஆசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தை பேசியதையெல்லாம் கூட மறந்திட்டார். எத்தனை சத்தியங்கள் செய்தார்!.... எத்தனை வாக்குறுதிகள் தந்தார்!.... ஆயிரம் கனவுகள் கட்டினேனடி! அவரோடு எப்படி எப்படியெல்லாம் வாழலாம் என்று கனவு கண்டன். எல்லாத்தையும் மறந்திட்டாரே!.... நான் அப்படி என்ன தவறு செய்தேன்? எதற்காக என்னை வெறுத்துத் தள்ளிவிட்டார்....?" மடைதிறந்த வெள்ளம்போல் கண்ணீர் பெருகி அவளின் கன்னங்களூடாக வழிந்தது.

"பிலோ, அழொதையடி... அவர் உன்னை ஒருக்காலும் மறந்திருக்க மாட்டார்...."

நாகம்மாவைப் பிலோமினா நிமிர்ந்து பார்த்தாள். அவளின் உதடுகள் படபடவெனத் துடித்தன: "நான் அவருக்கு அப்படி என்ன துரோகமடி செய்தன்....?"

"எல்லாம் உன் அண்ணனாலே வந்த வினைதானே...?"

பிலோமினாவின் அழுகை நிற்கவில்லை.

"பிலோ, நீ கவலைப்படாதே. இண்டைக்கு நிச்சயமாக நான் செமியோன் அண்ணரிடம் உன்னைப் பற்றிக் கதைப்பன்....?" என்றாள் நாகம்மா, ஆறுதல் கூறுவது போல.

"நிச்சயமாகவா?...."

"சத்தியமாக...."

"எனக்கு ஒரு உதவி செய்வியாடி?...."

"எனக்குத் தெரியும்–பிலோ... நீ அவரை ஒருக்கால் சந்திக்க வேணும்.... உன் கவலைகளைக் கூறி ஒரு பாட்டம் அழவேணும்... அவ்வளவு தானே...?" என்றாள் நாகம்மா.

பிலோமினா பரிதாபமாகப் பார்த்தபடி கூறினாள்:

"வாற சனிக்கிழமை என்னுடைய அண்ணன் சூசை வாறானாம்... அதுக்கு முந்தி அவரைச் சந்திக்க வேணும்... அவர் எப்படி இருக்கிறார் என்று ஒரு தடவை பார்க்கக் கூட என்னால் முடியலையே? வெளியில் செல்லக் கூடாதாம்..." பிலோமினாவின் கண்கள் மீண்டும் கலங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட் காட்டிக் குருவி ஒன்று அபத்தமாக அலறியது.

"ஆரோ வருகினம் போல் இருக்கு.....!"

தூரத்தில் சண்முகம் கிணற்றடியை நோக்கி வருவது தெரிந்தது. பெண்கள் இருவரும் குடங்களுக்குள் நீரை நிரப்பிக் கொண்டு விரைந்து புறப்பட்டார்கள், குடிசைகளை நோக்கி.

"ஏய் புள்ளைகளா! கொஞ்சம் நில்லுங்கோ" என்று சண்முகம் குரல் கொடுத்தான்.

அவர்கள் நிற்காது விரைந்து சென்றனர். வழியில் பிலோமினா சொன்னாள்:

"முந்த நாள் ஆச்சிமுத்தின்ரை பேத்தி தண்ணி அள்ள தனியாக வந்தாளாம்.... உவன் சண்முகத்தான் அவளிடம் ஏதோ கேட்டவனாம்... அது அழுது கொண்டு வந்தது... சரியான ஒரு எளியவன் இவன்...."

"இவனுக்குத் தனியா வரும் பொம்பிளைகளைக் கண்டால் ஒரு சேட்டை...." என்று நாகம்மா ஆமோதித்தாள்.

## 11.

விருத்தாசலம் இப்போது அடிக்கடி நாகம்மாவின் குடிசைக்கு வந்தான். வேலை முடிந்ததும் நேராக இங்கேயே வந்தான். பொன்னுக் கிழவரும் அவனைப் பரிவோடு வர வேற்றுப் பேசினார். கிழவருக்குத் தேநீர் கொடுக்கும் போது நாகம்மா அவனுக்கும் கொடுத்தாள்.

விருத்தாசலத்தில் போக்கிலும் பேச்சிலும் ஒரு வகை வேறுபாடு தோன்றுவதை அவள் கவனிக்காமலில்லை. அவனுடைய வருகை அவளுடைய மனதில் எதுவிதமான சலனத்தையும் தோற்றுவிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் அள்ளிக்கொண்டு நாகம்மா திரும்பியபோது முற்றத்து வேப்பமரத்தின் கீழ் அமர்ந்து, கிழவரும் விருத்தா சலமும் சுவையாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களுடைய பேச்சில் மரியதாஸின் பெயர் அடிக்கடி அடிபட்டது. குடத்தை உள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டு, நாகம்மா திண்ணையில் வந்து அமர்ந்தாள்.

"விசயம் தெரியத மீன்பிடிகாரன் இந்த மரியதாஸ்.... தங்கடை ஊரிலே போடுகிற கரைவலையை எங்கடை ஊரிலே போட்டால் முடியுமோ? ஒவ்வொரு கடற்கரைக்கும் ஒவ்வொரு தொழில் சரிப்படும்... இவனுக்கு இன்றைக்கும் பெரிய தோல்விதான். இருபது றாத்தல் மீன் கூடப்பிடிபடவில்லை....!" என்றான் விருத்தாசலம்.

"உவன் பொடியன் கரைவலைபோட வந்திருக்கிறான் என்று கேள்விப்பட்டபோதே நினைச்சேன்... இப்படி நடக்குமெண்டு...." என்று ஆமோதித்தார் பொன்னுக் கிழவர்.

"கரைவலைத் தொழிலுக்குப் படிப்படியாக ஆழம் குறைகிற கரை தேவையாம். நீரோட்டம் இல்லாத கரையாக வேறு இருக்க வேணுமாம் என்று கதைக்கினம். கரைவலையை விட்டிட்டுத் தூண்டிலைப் போட்டாலும் மீன் வாய்க்கும். மரியதாஸ் சம்மாட்டிக்கு இருக்கிற ஆணவத்துக்கும் பிடிவாதத்துக்கும் புத்திதான் இல்லை..." என்றான் விருத்தாசலம்.

மரியதாஸ் சம்மாட்டிக்கு மீன் பிடிபடவில்லை என்பது நாகம்மாவிற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. "இந்தத் தீவை நம்பித் தொழில் செய்ய வந்த ஒருவன் ஏமாற்றத்துக்குள்ளாவது நல்லதல்ல" என்று நினைத்தாள்போலும்!

"மரியதாஸ் படும் பாட்டைப் பார்த்துப் பார்த்துச் செமியோன் சம்மாட்டியாற்றை ஆக்களக்கு ஒரே சிரிப்புத் தான்..." என்றான் விருத்தாசலம்.

"என்றாலும் மரியதாஸ் கூலிக்கு அமர்த்தின ஆக்களுக்கு முறையாகச் சம்மளம் கொடுக்கிறான்... துணிச்சல்கட்டை...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் நினைக்கிறன்... இன்னும் ரெண்டு மூன்று நாளிலே வாடியைப் புடுங்கிக்கொண்டு போய்விடுவினமென்று... அவன்ரை ஆக்கள் அப்படித்தான் கதைக்கினம்...." என்றான் விருத்தாசலம்.

இனந் தெரியாத ஏக்கம் ஒன்று தன்னுள் சூழ்வதை நாகம்மா உணர்ந்தாள்.

அவளுக்கே அந்த ஏக்கத்திற்குரிய காரணம் புரியவில்லை. தன்னிடமிருந்த ஏதோ கிட்டமான ஒன்று திடீரெனத் தன்னை விட்டுச் செல்வது போன்ற ஒரு பிரமை! முரட்டுத் தனம் மிகுந்த அந்த ஆடவனிடம் அவளுக்கு ஒரு வகைப் பரிவு தோன்றிவிட்டதோ...?

"பேசாலைச் சம்மாட்டி வலு கெட்டிக்காரன்... சும்மா சொல்லக்கூடாது.... மீன் பிடிபடேல்லை என்றாலும் அவனிலே ஒரு சிறு சோர்வு இருக்கே...? விடாமுயற்சியா ஒவ்வொரு நாளும் கரைவலை போடுகிறான்...." என்றார் பொன்னுக் கிழவர் சிறிது ஆர்வத்தோடு.

"என்ன புண்ணியம்?...."

"மீன் பிடிபடுகிறதோ இல்லையோ... தொழிலாளிகளுக்குக் கூலி கொடுக்கிறான்..."

"பேசாலையிலே இவன் பெரிய பணக்காரனாம்..."

விருத்தாசலம் தொடர்ந்தான்:

"செமியோனுக்கு இந்த முறை அள்ளு கொள்ளைதான்... நேற்றைக்கு இரவு மட்டுமே நாற்பது அந்தர் பாரை மீன் பிடிபட்டிருக்குது...!"

"அவன்ரை மனசுக்கு இன்னும் பிடிபடும்...!"

வாசலில் குதிரை ஒன்று கனைத்தது.

"மேய்ச்சல்முடிஞ்சு இராமர் வந்துட்டார்... நாகம்மா, ஒருக்கால் படலையைத் திறந்து விடன்...." என்றான் விருத்தாசலம்

"ஐயையோ, நான் மாட்டன் மச்சான்...! உங்கடை குதிரை என்னை முட்டிவிடும்...!" என்றாள் நாகம்மா.

விருத்தாசலம் எழுந்து சென்ற படலையைத் திறந்து விட்டான். குதிரை அவனுக்குப் பின்னால் உள்ளே வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மச்சான் இன்னொரு குதிரையும் பின்னாலே வருகுது...?" என்று ஆச்சரியத்தோடு கத்தினாள் நாகம்மா.

விருத்தாசலம் திரும்பிப் பார்த்தான். அவனுடைய குதிரைக்குப் பின்னால் ஒரு பெண் குதிரை நின்றது.

"என்னடா இராமா?..." என்றான் அவன் தன் குதிரையை நோக்கியவாறு.

அவனுடைய குதிரை தலையை ஆட்டிக் கனைத்தது.

கிழவர் சிரித்தார்.

"டேய்.... விருத்தாசலம்... உன்னுடைய குதிரை உன்னை முந்திவிட்டுதடா....! நீ எப்பத்தான் ஒருத்தியைக் கட்டப் போறியோ?...."

விருத்தாசலம், நாகம்மாவை நிமிர்ந்து தாபத்தோடு பார்த்தான்.

அவள் இராமனையும் அது கூட்டிவந்த பெண் குதிரையையும் மாறி மாறி ஆச்சரியத்தோடு பார்த்தாள்.

## 12.

அடி வானில் சூரியன் மறைந்து கொண்டிருந்தான். செந்நிறத்தின் ஆதிக்கம் மேலோங்கிய வர்ணக்கலவையாக மேற்கு வானம் காட்சியளித்தது. செந்நிறப் பகைப் புலத்தில் கூடு திரும்பும் பறவைகள் அசையும் கரும் துகளாகக் காட்சி தந்தன. நீண்ட நேரம் அடி வானத்தை உற்றுப் பார்த்தபடியே மரியதாஸ் நின்று கொண்டிருந்தான். செமியோனின் வள்ளங்கள் ஏற்கனவே கடலுக்குப் புறப்பட்டுவிட்டன.

எவ்வளவு பெரிய தோல்வி?.... மூன்று நாட்கள் கரைவலை வளைத்தும் ஏதொரு பயனுமில்லை. கரையில் இழுத்து விடப்பட்டிருந்த வள்ளத்தில் சாய்ந்தவாறு கிழக்கு நோக்கிப் பார்வையைச் செலுத்தினான். யூசுப் சம்மாட்டியாரின் இயந்திரம் பூட்டிய கட்டுமரங்களில் ஒன்று இரைந்தபடி அலைகடல் மீது தாவிச் செல்வது தெரிந்தது. ஒரு வகை வெறுப்பும் ஆற்றாமையும் தன்னைச் சூழ்வதை அவன் உணர்ந்தான். எல்லாரும் கூறியதைப்போல் இக் கடற்கரை கரைவலைத் தொழிலுக்கு ஏற்றதல்லத்தானோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குப் பக்கமாகக் கூழைக்கடா ஒன்று குரலெழுப்பியது. குரல் வந்த பக்கம் மரியதாஸ் கண்களைச் செலுத்தினான். வெகு தூரத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த புளிய மரத்தின் உச்சிக் கிளையில் கூழைக்கடா ஒன்று சிறகடித்தபடி வந்து அமர்ந்தது. மறையும் கதிரவனின் சாய்கதிர்கள் கூழைக்கடாவின் வெண் இறகுகளில் படிந்ததால் வெண் தீபமாக அப்பறவை விளங்கியது. இருக்கை நன்கு அமையாததால் அக்கூழைக்கடா தனது பாரிய சிறகுகளை ஒரு தடவை விரித்து உதறி எழும்பி வேறொரு கிளையில் அமர்ந்து, தலையை உயர்த்தி நான்கு புறமும் நோக்கியது. பின் திடீரென வானில் எழுந்து வடபுறமாகப் பறந்து மறைந்தது.

மரியதாஸின் கண்கள் இப்போது வாடி இருந்த பக்கம் நோக்கின. தனது 'வாடி' சோர்ந்து போய்க் கிடப்பதாக அவனுக்குப்பட்டது. இதயத்தில் என்றுமில்லாதபடி கவலை வந்து சூழ்ந்துகொண்டது.

நீண்ட நேரம் மரியதாஸ் அப்படியே நின்றான்.

அவனுடைய தலைக்கு மேலே கூழைக்கடா இரண்டு இரைந்தபடி கடலை நோக்கி விரைந்தன. கடலுக்குமேல் சுமார் நானூறு யார் தூரம் பறந்தபின் திரும்பிக் கரையை நோக்கி வந்தன.

"கரைவலை வளைக்கின்ற தூரம் பறந்திருப்பினம்.... இன்னும் கொஞ்சம் பறந்திருக்கலாம்... இன்னும் கொஞ்சம்...." திடீரென மரியதாஸின் முகம் மலர்ந்தது.

புரியாமல் இருந்த ஒரு புதிருக்கு விடை கிடைத்துவிட்டது. பழைய உற்சாகம் அவனிடம் திரும்பிவிட்டது.

"ஏய் இராமசாமி! சுறுக்கா இங்கே ஓடிவா...." என்று குரல் கொடுத்தான் மரியதாஸ் வாடியை நோக்கி.

சம்மாட்டியாரின் குரல் கேட்ட இராமசாமியும், வேறிருவரும் விரைந்து வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வள்ளத்தைக் கடலிலே தள்ளுங்க..." என்று உத்தரவிட்டான் மரியதாஸ்.

"ஏன் முதலாளி...." என்று கேட்டான் ஒருவன்.

"கேள்வி கேட்காமல் வள்ளத்தைத் தள்ளு...." என்று இரைந்து கத்தினான் மரியதாஸ்.

அவனுடைய கட்டளை நிறைவேற்றப்பட்டது. அலைகளிடையே மரியதாஸின் கரைவலை வள்ளம் மிதந்துசென்றது.

இராமசாமியை அழைத்தான் மரியதாஸ். அவன் வியப்புடனே சம்மாட்டியைப் பார்த்தான்.

"கரைவலை மடி மிதக்கிற தூரத்திற்குத் தோணியை விடு...."

கரையில் மோத விரையும், அலைகளைக் கிழித்துக் கொண்டு அந்தப் பெரிய வள்ளம் சென்றது. மரியதாஸ் ஆழ்கடலையே உற்றுப் பார்த்தபடி இருந்தான். எவரும் எதுவுமே பேசிக்கொள்ளவில்லை.

பதினைந்து நிமிடங்கள் சென்றிருக்கும். துடுப்பு வலிக்கும் இராமசாமியின் கரங்கள் ஓய்ந்து நின்றன.

"இதுவரைதான்.... இந்தளவில்தான் கரைவலை மடி மிதக்கும்.... இங்கே ஐந்து பாதம் ஆழமிருக்கும்" என்றான் இராமசாமி.

மரியதாஸ் கடலையே ஊடுருவிப் பார்த்தபடி இருந்தான். அரை மணித்தியாலம்.... ஒரு மணித்தியாலம்.... இரண்டு மணித்தியாலங்கள் கடந்தன.... மற்றவர்கள் பொறுமையிழந்தவிட்டார்களென்பதை அறிந்து மயியதாஸ் கூறினான்.

"உப்பிடியே நேராக வள்ளத்தை விடு இராமசாமி.... நான் சொல்லும்வரை வள்ளத்தைக் கொண்டுபோ....."

கரைவலை வள்ளம் திரும்பவும் அசைந்து முன்னேறியது. மரியதாஸ் திரும்பவும் ஆழ்கடலை ஊடுருவிப் பார்க்கத் தலைப்பட்டான். முப்பதுயார் சென்றிருப்பார்கள், தெளிவாக இருந்த கடலின் அடித்தளம் சிறிது கலங்கலாக மாறுவதை மரியதாஸ் அவதானித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வள்ளத்தை இந்த இடத்திலேயே நங்கூரம் பாய்ச்சு...." என்று ஆணையிட்டான் மரியதாஸ்.

தோணி அசைவற்று நின்றது. வானில் நட்சத்திரங்கள் கண் சிமிட்டியபடி ஜொலித்தன. குளிர்ந்த கடற்காற்று கடல் அலைகளில் தவழ்ந்து வந்து சில்லென்று வீசியது.

இராமசாமியும், இஸ்மாயிலும், அப்படியே தூங்கிப் போனார்கள்.

அவர்கள் கண் விழித்தபோது விடிந்திருந்தது. மரியதாஸ் இரவு முழுவதும் தூங்கவில்லை என்பதை இராமசாமி புரிந்துகொண்டான். மரியதாஸின் முகத்தில் அசாத்திய குதூகலம் பொங்கி வழிவதை அவன் கண்டான்.

விடிந்து வெகு நேரத்தின் பின்பே மரியதாஸின் கரைவலை வள்ளம் கரையை அடைந்தது.

செமியோனின் வள்ளங்கள் ஏற்கனவே திரும்பியிருந்தன.

## 13.

மரியதாஸின் வாடி அன்று அதிகாலை முதல் மிகவும் சுறுசுறுப்பாக விளங்கியது. தலைவன் முகத்தில் சுடர்விடும் நம்பிக்கையின் ஒளியை எல்லாரும் கண்டனர்.

செமியோனின் வாடியில் இப்படியாகப் பேசிக்கொண்டனர்.

"இன்று மட்டுந்தான் மரியதாஸ் சம்மாட்டி கரைவலை போடுவானாம். இன்றைக்கும் சரிவரவில்லையென்டால், வாடியைப் பிடுங்கிக்கொண்டு போகப்போறானாம்....."

இவ்வாறு பேதுரு பேசியதைக் கேட்டு செபஸ்தியான் ஏளனமாகச் சிரித்தான்.

"அவன் ஒரு முழு விசரன்....! கரைவலைத் தொழில் இந்தக் கடற்கரைக்கு உதவாதென்று இன்னமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவனுக்கு விளங்கவில்லை. இண்டைக்கு முழுவதும் கரைவலை போட்டாலும் ஒரு அரை அந்தர் மீன்கூடப் பிடிபடாது..."

இதைக்கேட்டு செமியோனின் மற்றத் தொழிலாளர்கள் வாய்விட்டுச் சிரித்தனர். அவர்கள் ஏன் சிரிக்கிறார்கள் என்பதன் காரணத்தை பெட்டியொன்றில் அமர்ந்திருந்த செமியோன் உணர்வான். அவனது வேலையாட்களில் பலர் சற்றுத் தூரத்தில் மீன்களைப் பிளந்து, உப்பு அப்பிக் கொண்டிருந்தார்கள். பொன்னுக் கிழவரும், நாகம்மாவும் கூட வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

செமியோனின் கண்கள் மரியதாஸின் வாடியில் நிலைத்தன. இரக்கத்தோடு நோக்கினான்.

மரியதாஸ் சுறுசுறுப்பாகத் தனது வேலையாட்களுக்கு ஏதேதோ கட்டளையிட்டுக் கொண்டிருப்பதை அவனுடைய கண்கள் கவனிக்கத் தவறவில்லை.

"மன்றாடி, கரைவலைக் கம்பான் கயிறுகளை நீளமாக்கு, வழக்கமாக மடிபோடுற இடத்திலிருந்து இருபத்தைந்து முழம் அப்பால் தள்ளிப்போட வேண்டும்..." என்று மரியதாஸ் கூறினான்.

"புரியுது, முதலாளி..... ஆனால், தள்ளிப் போடுறதிலே ஒரு பிரச்சனை இருக்கு.... நீங்க சொல்லுற இடத்தில் மடி போட்டால் நீரோட்டம் இருக்கு.... வலையை வலிக்கும் போது கெளிச்சால் பக்கத்துப் பார்களிலே சிக்கிவிடும்.... மணல் தரை போதாது....." என்றான் இராமசாமி.

மரியதாஸ் அவனைக் கோபத்தோடு பார்த்தான்.

"உன் கணிப்புப்படி தானே இவ்வளவு நாளும் வலை படுத்தாய்.....? நான் சொல்லுறபடி இண்டைக்குப் போடு..... உன்னாலே முடியாட்டில் இங்கே தா.... நானே படுக்கிறன்....."

இராமசாமி மறுபேச்சுப் பேசாமல் வள்ளத்தில் தாவினான்.

மரியதாஸ் கூறியவாறு கரைவலையைப் படுப்பதற்கு ஒன்றரை மணித்தியாலங்கள் கழிந்தன. வலையின் இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைகளின் கம்பான் கயிறுகளை ஒவ்வொரு முனையிலும் பதினைந்து பேர் பிடித்துக்கொண்டனர். வட்டமாகக் கரைவலை கடலுள் வளைந்து கிடந்தது. மடி நீரினுள் அமிழ்ந்து கிடப்பது மிதவைகளிலிருந் தெரிந்தது. சிறகு வலைப் பிணைப்புகள் இடம் வலமாக அசைந்தன. சிறகு வலையிலிருந்து பிணைக்கப்பட்ட அகன்ற கண் வலையிலிருந்து நீண்ட கம்பான் கயிறுகளைப் பற்றிய கரங்கள் உற்சாகத்தில் பரபரத்தன. அந்த நீள் வட்ட வலையுள் அகப்பட்ட மீன்கள் எதுவுமே தப்பிச் செல்ல முடியாது. கரைவலையை வலிப்பதற்கு ஆயத்தமாக மன்றாடியின் உத்தரவை எதிர்நோக்கித் தொழிலாளர் நின்றனர்.

மன்றாடியோ மரியதாஸைப் பார்த்தபடி நின்றான். மரியதாஸ் ஒரு தடவை தன்னைச் சுற்றிப் பார்த்துவிட்டு, கரையை அண்மி மிதந்துகொண்டிருந்த வள்ளத்தில் தாவி ஏறினான். எவருடைய உதவியையும் எதிர்பாராமல், வள்ளத்தின் அணியத்தில் படுத்தபடி வலையின் மிதப்புக் கட்டைப் பிணைத்திருக்கும் கயிற்றைப் பற்றி இழுத்தான். வேகமாக மடியை நோக்கி முன்னேறினான். மடிக் கயிற்றில் வள்ளத்தைப் பிணைத்துவிட்டு கைகளை ஆட்டி வலையை வலிக்குமாறு சைகை காட்டினான்.

மன்றாடி உத்தரவிட்டான். கரைவலை கரையைநோக்கி வலிபடத் தொடங்கியது. ஆரம்ப இழுவை இலேசாகவே இருந்தது.

மன்றாடி இராமசாமிக்கு இப்போது முப்பத்தெட்டு வயதாகின்றது. பதினாறு வயதில் கரைவலைத் தொழிலாளியாகச் சேர்ந்த அவன், இருபத்தேழாவது வயதில் கரை வலையின் மன்றாடி என்ற கௌரவத்தைப் பெற்றான். அவன் வலைபடுத்து இப்படியொரு தோல்வியை என்றுமே கண்டதில்லை. அதிர்ஷ்டக்கார மன்றாடி என்று பெயர் பெற்ற இராமசாமிக்கு நெடுந்தீவுக்கரை ஒரு பெரும் சவாலாகவே அமைந்தது. இன்றும் ஏமாற்றம்தான் மிச்சமா? இக்கரையில் இதுதான் கடைசி வளைப்பு என மரியதாஸ் திடமாகக் கூறிவிட்டான். தன் வெற்றி தோல்விதான் வாடியைப் பிரிப்பதா? இல்லையா என்ற முடிவைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் மெதுவாக ஊர்ந்தது. கரைவலையின் கம்பான் கயிறுகளைப் பற்றியிருந்த ஒவ்வொருவரது இதயமும் படபடவென அடித்துக்கொண்டது.

திடீரென தோணியில் எழுந்து நின்று மரியதாஸ், "......கூ ....கூ...." என்று கூக்குரலிட்டான். அதன் பொருளை மீனவர்கள் அறிவார்கள். அவனின் கூக்குரலைத் தொடர்ந்து அந்தக் கடற்கரையே அதிர்ந்துவிடுமாப் போல பேரொலி எழுந்தது.

மன்றாடி இராமசாமி தனது சாரத்தைக் கழற்றி, ஆகாயத்தில் வீசி எறிந்து ஒரு சிறு குழந்தையைப் போல ஆரவாரம் செய்தான்.

செமியோன் சம்மாட்டியாரின் தொழிலாளர்களும், யூசுப்புச் சம்மாட்டியாரின் வேலையாட்களும் தாங்கள் செய்து கொண்டிருந்த வேலைகளை அப்படியே விட்டு விட்டு மரியதாஸின் வாடிக்கு ஓடிவந்தார்கள்.

செமியோனும் ஓடிவந்தான்.

"அப்பு!....... நான் ஒருக்கா என்னவென்று பார்த்திட்டு ஓடிவாறன்...." என்று கூறிவிட்டு நாகம்மாவும் தன்னை மறந்து பாய்ந்து வந்தாள்.

கரைவலையை வலிப்பது சற்றுச் சிரமமாக இருந்தது. முப்பது தொழிலாளர்களும், ஒன்று சேர்ந்து முழுப் பலத்துடன் வலித்தனர்.

"பேதுரு, செபஸ்தியான்... என்ன சும்மா பார்த்துக் கொண்டு நிக்கிறியள்.... ஒரு கை கொடுங்கடா...." என்று செமியோன் ஆணையிட்டான்.

எல்லாத் தொழிலாளர்களும் ஒன்றுசேர்ந்து மரியதாஸின் கரைவலையை இழுத்துக் கரையில் போட்டார்கள். மடியை மிகுந்த சிரமத்தோடு இழுத்துக் கரையேற்றினர்.

கடலிலுள்ள உயிரினம் அத்தனையும் அந்தவலையின் மடியில் அகப்பட்டுக் கிடக்கின்றனவா?

"நெத்தலி மீன் மட்டும் எழுபது அந்தர் வரை தேறும்..." என்றான் செமியோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தக் கடலிலே நெத்தலியிருப்பது முந்தி தெரியாது" என்று வியந்தார் யூசுப்புச் சம்மாட்டியார்.

மரியதாஸ் தோணியைவிட்டுக் கீழே குதித்தான். அவனை எல்லோரும் மிகுந்த மரியாதையோடு பார்த்தனர்.

மரியதாஸ் ஏளனமாக எல்லோரைம் ஒரு முறை சுற்றிப் பார்த்தான்.

அவனுடைய கண்கள் ஓரிடத்தில் ஒரு கணம் நிலைத்தன. ஒரு கணப்பொழுதுதான்.

நாகம்மா தலையைக் குனிந்துகொண்டாள்.

## 14.

அன்று பின்னேரம் நாகம்மாவைத் தேடிக்கொண்டு பிலோமினா வந்தாள். பொன்னுக் கிழவர் வெளியே சென்றிருந்தது, அவர்கள் மனம் விட்டுப் பேசுவதற்கு மிகவும் வாய்ப்பாக அமைந்தது.

"நாகம், அவருடன் கதைத்தாயா?" என்று ஆவலும் ஏக்கமும் தொனிக்கப் பிலோமினா கேட்டாள்.

"எவருடன்....?" என்ற நாகம்மா பகிடியாக வினவினாள். பிலோமினாவால் தாங்க முடியவில்லை. அவளின் விழிகள் கலங்கித் தவித்தன.

"பகிடிக்கு இதுவா நேரம்? நாகம்மா! அவரை நான் கடைசியாகக் கண்டது ஏழெட்டு மாதங்களுக்கு முன்னர். அன்று அவர் ஏமாற்றத்தோடு வள்ளத்தில் ஏறினார்...." பிலோ! உனக்குத் துணிவு இருந்தால் எல்லாரையும் விட்டிட்டு என்னுடன் வந்திடு என்று கூப்பிட்டார். நான் தான் கோழையாக இருந்திட்டன் இன்றுவரை வீட்டு வாசலில் நின்று கடற்கரையைப் பார்க்கிறன். அவரைக் காணமுடியவில்லை. ஓடிப்போய் அவருடைய கால்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிக்கொண்டு அழுது மன்னிப்புக் கேட்கவேணும் என்று ஒவ்வொரு கணமும் ஆத்திரப்படுகிறன். ஆனால் முடியவில்லை! ஏன் எனக்கு இப்படி ஒரு விதி?" என்று பிலோமினா குமுறிக் குமுறி அழுதாள்.

பிலோமினாவா இவ்வளவும் பேசினாள்? நாகம்மாவால் நம்பவே முடியவில்லை. வியப்போடும், கவலையோடும் பிலோமினாவைப் பார்த்தாள். ஆறுதல் வார்த்தைகளைக் கூறினாள்.

"அழாதையடி.... இதுவரை செமியோன் அண்ணரோடு பேசவே முடியவில்லை. நாளைக்கு நிச்சயமாக அவரோடு எப்படியும் கதைப்பன். எப்படியாவது கட்டாயம் கதைப்பன்...... சத்தியமாகக் கதைப்பன்....."

பிலோமினாவின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது.

"இதிலே அப்படி என்னடி சுவை இருக்கு?...." என்று நாகம்மா கேட்டாள்.

"உனக்கு இப்படியொரு நிலை வந்தால்தான் தெரியும்" என்றாள் பிலோமினா.

"அப்படியொன்றும் வரவேண்டாம்...." என்று நாகம்மா கூறிவிட்டாலும் ஏனோ மரியதாஸின் நினைவு அப்பொழுது தோன்றியது. அவனைப்பற்றி யாருடனும் ஏதாவது பேசவேண்டும் போன்றதோர் உணர்வு அவளின் இதய அடித்தளத்திலிருந்து எழுந்தது.

"இண்டைக்கு கடற்கரையில் ஒரே கலவரமடி. இவ்வளவு நாளா மரியதாஸ் சம்மாட்டியாரின்ரை கரைவலையிலை மீன் ஒன்றுமே பிடிபடவில்லை. இண்டைக்கு அவரே தோணியில் போய் மன்றாடியாக இருந்தாராம். வலையை இழுத்து போட்டபோது, கடவுளே எவ்வளவு நெத்தலி? எல்லாரும் திகைச்சுப் போச்சினம்.... அவரைப் பகிடி பண்ணின எல்லாற்றை வாயும் ஒரேயடியா அடங்கிப் போச்சுது...."

"நானும் கேள்விப்பட்டன்... கரையெல்லாம் நெத்தலிதான் காயப்போட்டிருக்காம். அவ்வளவு தொகையாம். பார்த்துக்கொண்டு நின்றவர்களுக்கெல்லாம் நெத்தலி நெத்தலியாய் அள்ளி அள்ளிக் கொடுத்தினமாம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படி அள்ளிக் கொடுக்க ஆருக்குத்தான் மனம் வரும்....? செமியோன் அண்ணர் மூன்று நாளா பிடிச்சதை எல்லாம் மூன்று மணித்தியாலத்திலே இவர் பிடிச்சிட்டார் என்று எல்லாரும் கதைக்கினம்...."

பிலோமினா, நாகம்மாவை ஒருவிதமாகப் பார்த்துக் கேலியாகக் கேட்டாள்:

"என்னடி, அவர் இவர் என்று உளறுகிறாய்... என்ன விஷயம்...?"

நாகம்மா திடுக்கிட்டுப் போனாள். அப்படியா பேசினேன் என்று தன்னுள் நினைத்தாள்.

அமைதியாக இருந்த தெளிந்த நீரோடையில் கல் எறிந்து சலனத்தை ஏற்படுத்தியது யார்?

இணையை விட்டுப் பிரிந்த கூழைக்கடா ஒன்று குறுக்கே வானில் பறந்து சென்றது.

"பிலோ—நான்" என்று தடுமாறினாள் நாகம்மா.

பிலோமினா சமாளித்துக் கொண்டாள்: "சும்மா பகிடிக்கடி கேட்டன்"

## 15.

விருத்தாசலத்தின் மனதில் அமைதி குலைந்துவிட்டது. மரியதாஸ் சம்மாட்டியார் தோணியிலிருந்து கீழே குதித்தபோது, அவனது விழி எல்லார் மீதும் சுற்றிச் சுழன்று, ஒரு கணம் நாகம்மாவின் முகத்தில் நிலைத்ததை நினைத்துக்கொண்டான்.

நாகம்மா அவனது பார்வையைத் தாங்கிக்கொள்ள முடியாதவளாகத் தலையைக் குனிந்த காட்சியும் அவன் நினைவில் விரிந்தது.

விருத்தாசலத்தின் உள்ளம் கடல்போல் குமுறியது. சூல் கொண்ட கார்முகில்போல் கனத்தது. நாகம்மா எவ்வளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து விட்டாள். அவளது உடலின் வளைவு நெளிவுகள் திரண்டு கிடக்கின்றன. பார்த்தவர்களைக் கவர்ந்திழுக்கும் வடிவுதான்..... – நான் ஒரு விசரன்.... !'

மயானத்து மடத்தின் திண்ணையில் சாய்ந்து கொண்டு மேற்கண்டவாறு அவன் எண்ணமிட்டான். அவனது குதிரை சற்றுத் தள்ளி மேய்ந்து கொண்டிருந்தது. மரியதாஸ் சம்மாட்டி அன்று சந்தோஷமிகுதியால் கூலி ஆட்களுக்கு ஐந்து ரூபாய்க்குப் பதில் ஏழு ரூபா கொடுத்தான். அது விருத்தாசலத்தின் மடியில் இருந்தது.

விருத்தாசலத்துக்கு அந்தளவில் மகிழ்ச்சி இருந்தபோதிலும், கூலி கொடுக்கும் போது மரியதாஸ் கேட்ட ஒரு விசயம் இப்பவும் வேதனையைத் தந்தது.

"பொன்னுக்கிழவரின்ரை பேர்த்தி உன்ரை முறைப் பொண்ணா? எப்ப அப்பா, கலியாணம்?..."

சம்மாட்டி இதை ஏன் கேட்கவேண்டும்? அவனுக்கு ஏதோ அக்கறை இருக்கின்றபடியால் தானே கேட்டிருக்கிறான்.

சற்றுத் தூரத்தில் சண்முகம் ஆடி அசைந்து வருவது தெரிந்தது. ஏழு ரூபாக் கூலியையும் சாராயம் குடித்து முடித்திருப்பான். சண்முகம் அன்றொரு நாள் கூறியது விருத்தாசலத்தின் நினைவில் வந்தது.

"தம்பி, நீர் இப்படி ஆற அமர இருந்தால் பொன்னுக் கிழவரின் பேர்த்தியை நேற்று வந்தவன் ஆராவது அடிச்சுக் கொண்டு போய்விடுவான்."

"உண்மையில் அப்படி ஏதாவது நடந்து விடுமோ? நடந்து விட்டால் நான் சும்மா இருக்கமாட்டன், என்னுடைய கூர்த்தடி சும்மா இராது" என்று விருத்தாசலம் முணுமுணுத்துக் கொண்டான்.

"உதார்.... விருத்தாசலம் தம்பியோ?.... எப்படி இருக்கிறீர்?...." என்ற குழறியவாறு சண்முகம் வந்தான்: "கோபிக்கக் கூடாது..... இண்டைக்கு நான் கொஞ்சம் அதிகம்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்படிக் குடிச்சு ஏன் நாசமாப் போறே?...."

"தம்பி உமக்கு முயல் வேட்டை எப்படி முக்கியமோ அதைப் போல எனக்குச் சாராயம் முக்கியம்...!" என்றான் சண்முகம். அவனால் இருக்கவும் முடியவில்லை. தொடர்ந்து பேசினான்:

"நம்மடை முத்தையா அண்ணற்றை மோன் நேற்றைக்கு ராத்திரி வெட்டுக் குளத்தடி முகத்தாற்றை வளவுக்கை புகுந்திட்டானாம்....."

"ஏனாம்....? களவெடுக்கவோ.....?" என்று கேட்டான் விருத்தாசலம்.

சண்முகம் இடிஇடியெனச் சிரித்தான். அவனுடைய சிரிப்பின் பொருள் விளங்காத விருத்தாசலம் அவனை அருவருப்போடு பார்த்தான்.

"களவெடுக்க முகத்தாரிட்டை என்ன இருக்கு..... அவற்றை பெட்டையைத் தவிர! சோக்கான குமரி கண்டியோ?"

சண்முகம் தொடர்ந்து விருத்தாசலத்தை நோக்கிக் கூறினான்: "இதிலே என்ன பிழையிருக்கு?.... ஒருத்தியிலே ஆசை வந்தால் விடக்கூடாது. அனுபவிக்க வேணும்..... உலகத்திலே என்ன இன்பம் இருக்கு.......... இதை விட?......."

"சும்மா விசர் கதை கதையாதை......" என்றான் விருத்தாசலம்.

"இதிலே ஆருக்குத்தான் விருப்பமில்லை.... எல்லாம் சந்தர்ப்பம் தான்.... சந்தர்ப்பம் கிடைச்சால் எல்லாக் குமரியளும் ஓம் தான்...." இதனைக் கேட்ட விருத்தாசலம் விருட்டென்று எழுந்தான். அவனுடைய சுட்டு விரல் சண்முகத்தின் முகத்தைச் சுட்டியது. "எல்லாரையும் அப்படி நினையாதே......." என்று ஆத்திரத்தோடு கத்தினான்.

சண்முகம் கலகலவெனச் சிரித்தான். தனது வலது கையால் சீமெந்துத் தரையில் ஓங்கி அறைந்தபடி சிரித்தான்.. "தம்பிக்கு உலக ஞானம் போதாது.... போகட்டும்.... கோபியாதை தம்பி.... இப்படி இரு....."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தாசலம் சுடலை மடத்துத் தூணோடு சாய்ந்து அமர்ந்தான். அவனுக்கு பெண்களைத் தாயாக, சகோதரிகளாகத் தான் பார்க்கத் தெரியும்.

"தம்பி...." என்று அழைத்த சண்முகம், சற்று நேர மௌனத்தின் பின் தொடர்ந்தான்: "எங்கடை உள்ளூர்க் கொக்குகளைப் பற்றி என்ன தம்பி நினைக்கிறாய்?....."

"அதுகளுக்கென்ன?" என்று வெறுப்போடு கேட்டான் விருத்தாசலம்.

"இந்த வெட்கம் கெட்ட பெட்டைக் கொக்குகளைப் பற்றிக் கூறுகிறன்.... உள்ளூரிலே ஆண் சோடி இருக்கத் தக்கதாக எங்கிருந்தோ வந்த கூழைக்கடாக்களோடை திரியுதுகள். வெட்கம் கெட்டதுகள்......" என்று கூறிவிட்டு விருத்தாசலத்தையே சில கணங்கள் கண்ணிமைக்காது பார்த்தான்.

விருத்தாசலத்தின் இதயத்தில் சுருக்கென்று முள் ஒன்று தைத்தது. இவன் ஏன் இதைக் கூறுகின்றான்? விருத்தாசலத்தின் முகம் திடீரெனக் கறுத்தது.

வெண்பஞ்சுப் பொதிகளாக வானத்தில் மிதந்து திரிகின்ற கூழைக்கடாக்களை ஆசையோடு அவன் பார்த்திருக்கின்றான். மிகச் சுவையான இறைச்சியென்பதும் அவனுக்குத் தெரியும். அவற்றை வேட்டையாடினால் என்ன? குட்டை மரங்களில் தங்கும்போது இலேசாகக் குறி வைக்கலாம்.

விருத்தாசலத்தின் இயல்பான வேட்டை மனம் யாவற்றையும் மறந்தது. கத்தி செருகிய தடியை எடுத்துக் கொண்டு குதிரையில் தாவினான்.

'கூழைக்கடா ஒன்றுடன்தான் அவன் நாகம்மா வீட்டிற்குப் போவான். உயரப்பறக்கின்ற கூழைக்கடாவை மச்சான் கூர்த்தடியினால் வேட்டையாடினான் என்பதை அறிந்து உண்மையில் நாகம்மா வியந்து போவாள்."

கரைவலை மடி நிறைய நெத்தலியைப் பிடித்துவிட்ட பெருமிதத்தோடு மரியதாஸ் சம்மாட்டி தோணியில் இருந்து இறங்கியது போல, அவன் கையில் கூழைக் கடாவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்மா வீட்டு முற்றத்தில் குதிரையில் இருந்து குதிக்க வேண்டும்.

பெருமிதத்தோடு பார்க்கின்ற அவனது பார்வையின் தாக்கத்தை தாங்காமல் அவள் தலை குனியவேண்டும்!

## 16.

காற்று சற்றுப் பலமாக வீசத் தொடங்கியது. அடிவானத்தில் கருமேகத் திரள் உருண்டு வருவதைச் செமியோன் கண்டான். தொழிலுக்குப் புறப்பட ஆயத்தமாக வள்ளங்களில் இருந்தவர்கள், இக் குறிகளைக் கண்டதும் தயங்கி நின்றனர்.

"காற்றுப் பலமாக அடிக்கும் போலக் கிடக்குது......." என்றான் செமியோன்.

கடல் அலைகள் குறும்பு செய்யாத சிறுவர்களைப் போல அமைதியாக நெளிந்தன.

பேதுரு, செமியோனின் வாடிக்குள்ளிருந்து வந்து வெளி மணலில் குந்தினான். அவனுக்கு அன்று முழுவதும் மகிழ்ச்சியே இல்லை. அவனுக்கு மட்டுமா? மரியதாஸின் கரைவலையில் அந்தர்க் கணக்கில் பட்ட நெத்தலி ஏற்படுத்தியவியப்பும், இயல்பான பொறாமையும் எல்லாருடைய பேச்சிலும் ஒலித்ததைச் செமியோன் அவதானித்தான்.

"ஒருத்தனின் வலையில் பட்டதைப் பார்த்து நாம் பொறாமைப் படக்கூடாது,அதைப் பார்த்து நாம் ஊக்கம் பெற வேணும்........." என்றான் செமியோன்.

"என்றாலும், முதலாளி இப்படி ஒரு தொகையா?...... கரைவலை போட முடியாது என்று நாம் நம்பின இடத்தில் உப்படி மடி பிரிய மீன் பிடிபட்டதைப் பார்த்திட்டு எப்படி இருக்கிறது?........" என்றான் செபதிஸ்யான்.

இதைக் கேட்ட செமியோன் புன்னகைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னும் சரியா எங்களுக்கு மீன் பிடிபடத் தொடங்கவில்லை. அதற்கிடையிலே நீங்கள் சோர்ந்து போனியள்" என்றான் அவன். என்றபோதிலும் செமியோனின் மனதினுள்ளும் அவனை அறியாமலே மெல்லிய பொருமல் இல்லாமலில்லை.

"கட்டுமரச் சம்மாட்டியார் இடிஞ்சுபோய்க் கிடக்குறாராம்...." பேதுரு.

யூசுப்புச் சம்மாட்டியார் இடிந்துதான் போனார். மூன்று நாட்கள் வெறுமனே இழுக்கப்பட்ட கரைவலையைப் பார்த்துச் சிரி சிரியென்று சிரித்த அவரால், அன்று சிரிக்க முடியவில்லை.

காற்றுப் பலமாக வீசத் தொடங்கியது.

"லோய் வள்ளங்களை இழுத்துக் கட்டுங்கடா......." என்று செபதிஸ்யான் கத்தினான். பேதுரு பெட்டி ஒன்றைத் திறந்து சாராயப் போத்தல் ஒன்றை எடுத்தான். இனி அங்கே நடக்கப் போகின்ற களியாட்டத்தை உணர்ந்தவனாக செமியோன் எழுந்தான்.

"நான் ஒருக்கால் வாடிக்கிழவர் வீட்டைப் போட்டு வாறன்" என்று கூறிக்கொண்டு செமியோன் புறப்படலானான்.

பொன்னுக்கிழவரின் குடிசைக்குப் போகும் வழியில் துப்பாக்கியுடன் வந்து கொண்டிருந்தான் மரியதாஸ்.

அவனது முகத்தில் ஏமாற்றம் கவிந்து கிடந்தது.

## 17.

நெடுந்தீவின் தென்மேற்குக் கரை ஓரமாக கடல் நீர் நிலப்பரப்பினுள் ஒரு சிறு ஓடையாக அரை மைல் வரை செல்கின்றது. மழை காலத்தில் இந்த ஓடையில் வெள்ள நீர் ஏறத்தாழ ஒரு மைல் நீளமான சிற்றாறாக ஓடும். இதற்குத்தான் கௌத்தி ஓடை என்று பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌத்தி ஒடையின் இருமருங்கும் குட்டையான மரங்களைக் கொண்ட காடொன்று செழித்து வளர்ந்திருந்தது. கண்டல் மரங்களும், குட்டை வீரைகளும், முட்பற்றைகளும் அடர்த்தியாக வளர்ந்திருந்தன. விஷப் பாம்புகளும், நரிகளும், உடும்புகளும் கௌத்தி ஒடைக் காட்டில் அதிகமாகக் காணப்படும்.

கௌத்தி ஒடையில் தெளிவான நீரைக் கலக்கியபடி விருத்தாசலம் நடந்து சென்றான். உப்புப் படர்ந்த நீர்த்தரை கால்கள் பட்டதும் கலங்கியது. அவனுடைய கண்கள் ஓடையின் இரு மருங்கும் ஆவலோடு எதையோ தேடி தேடிச் சோர்ந்துவிட்டன. ஒரு கூழைக்கடாவைக் கூடக் காணோம்.

சிறு கொக்குகளும், மீன்கொத்திக் குருவிகளும் ஆளரவம் கேட்டுக் குரலெழுப்பியவாறு விர்ரென்று பறந்தன. ஆட்காட்டிக் குருவியொன்று விருத்தாசலத்தின் தலையைச் சுற்றிச் சுற்றிச் சத்தமிட்டவாறு சிறகடித்து வட்டமிட்டது. நீர் குடித்துக் கொண்டிருந்த பழுப்பு நிற முயல்கள் இரண்டு அவனைக் கண்டதும் பற்றைக்குள் தாவி மறைந்தன.

இவற்றையெல்லாம் அவதானிக்கும் நிலையில் விருத்தாசலம் இல்லை. அவனுக்கு இன்று ஒரு கூழைக்கடா வேண்டும். குட்டைக் காட்டின் மேற் பரப்பில் எங்கேயாவது வெண்பஞ்சுப் பொதி தெரிகின்றதா என்று ஆவலுடன் அவதானித்தான். கூழைக்கடாக்கள் மனிதர் கண்களில் படும் இடங்களில் கூடு கட்டி வாழாதென்பதையும் அவன் அறிவான். ஒற்றைப் பனைகளிலும், அடர் மரங்களின் இடையேயும் தான் அவை கூடுகட்டுகின்றன.

விருத்தாசலம் நீண்ட தூரம் நடந்திருப்பான். தேடிப் போனால் எதுவுமே அகப்படாதுபோலும். ஓடையை விட்டு வெளியேறிக் காட்டுக்குள் புகுந்தான். கண்ணுக்கெட்டிய தூரம் வரை வரண்ட முருகைக் கற்பார்த் தரை விரிந்து கிடந்தது. கள்ளிகள் நிறைந்த அந்த வெளியில் எங்காவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுமையாகத் தலை நீட்டிக் கிடந்த கட்டைப் புற்களை காட்டுக் குதிரைகள் மேய்ந்து கொண்டிருந்தன.

அவன் தனது குதிரையில் தாவி ஏறினான். அப்போது படபடவெனச் சிறகடிக்கும் ஓசை அவன் தலைக்குமேல் எழுந்தது. அண்ணார்ந்து பார்த்தான். இரண்டு கூழைக்கடாக்கள் பறந்து சென்றன. அவன் அன்று முழுவதும் தேடித் திரிந்த கூழைக்கடாக்கள்...... ? அவை மேற்குத் திசையில் பறந்து சென்று தொலைவில் தெரிந்த பனை ஒன்றில் அமர்வதை விருத்தாசலம் கண்டான். ஏதோ நினைத்தவனாக குதிரையை அத் திசையில் வேகமாகச் செலுத்தினான். கௌத்தி ஓடையைக் குறுக்கே கடந்து மறு கரையில் ஏறினான்.

மேற்கு வானில் சரிந்து கொண்டிருந்த சூரியனின் ஒளிக் கிரணங்கள் பனை மரத்தில் அமர்ந்திருந்த கூழைக் கடாக்கள் மீது பட்டுத் தெறித்தன. விருதாசலத்தின் குதிரை பனை மரத்தை நெருங்கியதும், அக் கூழைக்டாக்கள் இரண்டும் விர் என்று வானில் கிளம்பிப் பறந்தன.

அவனுக்கு இது ஒரு சவால் ! உயரப் பறந்தாலும் தங்குவதற்காக கீழே வரத்தானே வேண்டும். தன்னுடைய கூர்த்தடி பாயக்கூடிய தூரத்திற்கு வராமலா போகப் போகின்றன என்று விருத்தாசலம் நினைத்து குதிரையை வேகமாகத் தட்டி விட்டான். அந்தப் போணிக் குதிரையும் வாலைக் கிளப்பியபடி விரைவாக ஓடத் தொடங்கியது.

இரவு மெதுவாகப் படர ஆரம்பித்தது.

## 18.

செமியோன் சொன்னான்:

"இல்லை ஐயா, எனக்கு மரியதாஸ் மீது எதுவிதமான கோபமுமில்லை. எல்லாரும் தொழில் செய்யத்தான் வேணும். எல்லோரும் பிழைக்கத்தான் வேணும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொடியன் வலு கெட்டிக்காரன். நான் உண்மையாக எதிர்பார்க்கவில்லை. எவ்வளவு திறமையாக இண்டைக்கு கரைவலை போட்டான். உண்மையிலே இண்டைக்கு அவனுக்கு நல்ல அதிர்ஷ்டம்...." என்றார் பொன்னுக்கிழவர்.

"உது அதிர்ஷ்டமில்லை. அவன் உண்மையிலேயே திறமையும், ஓர்மமும் உடைய மீன்பிடிகாரன். ஓர்மமுடைய மீனவனுக்குக் கடல் தாய் எப்பவும் வஞ்சகம் செய்யமாட்டாள்" என்று செமியோன் சிரித்தான்.

குளித்து விட்டு அப்போதுதான் நாகம்மா வந்தாள். செமியோனைக் கண்டதும் அவளின் முகம் மலர்ந்தது.

"எப்ப அண்ணை, வந்தியள்..." என்று கேட்டாள்.

"நான் வந்து நாலு நாளாகுது தங்கச்சி...." என்றான் செமியோன்.

"அது எனக்குத் தெரியும் ...... இங்கை எப்ப வந்தியள் என்று கேட்டன்.."

செமியோன்சிரித்தான். சிரித்துவிட்டு "இப்பத்தான் தங்கச்சி..." என்றான்.

"கண்டாலும் காணாதது போலப் போகிறியள்..." என்ற நாகம்மாவைச் செமியோன் ஏறிட்டுப் பார்த்தான்.

"ஏன் தங்கச்சி அப்படிச் சொல்லுகிறாய்?..."

"இவ்வளவு நாளா வேலைக்கு வாறன் ...... ஆரோ தெரியாதவள் போல இருந்தியள்.."

"அப்படி இல்லைத் தங்கச்சி..." என்ற செமியோன் எங்கோ வெறிக்கப்பார்த்து விட்டுக் கூறினான்: "ஒரு பெண்ணோடு பேசப் போனதன் பயனாக எனக்குக் கிடைத்த பரிசுகேடு இன்னமும் மறையவில்லை..." அவனுடைய குரலில் தொனித்த வெறுப்பையும், ஏக்கத்தையும் நாகம்மா உணர்ந்தாள். சில நிமிடங்கள் அவளால் எதுவுமே பேச முடியவில்லை.

"ஆரோ செய்த பிழைக்காக இன்னொருவரைக் கோபிக்கிறது சரியா அண்ணை ? பிலோமினா, பாவம்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் ஒரு பாவமும் அறியாதவள்..... அவளுடைய அண்ணன் சூசை செய்த பிழைக்கு அவளைப் பழி தீர்க்கிறதா?...."

"முடிஞ்சு போன கதையைப் பற்றி இப்ப பேசி என்ன பலன்...." என்றார் பொன்னுக் கிழவர்.

"என்ர அப்பரிடமிருந்து தொழிலை மட்டும் நான் தெரிஞ்சு கொள்ளவில்லை, அவருடைய நல்ல செயல்களையும் தெரிஞ்சு வைச்சிருக்கிறன். எனக்கு ஒருத்தன் தீமை செய்தாலும் அவனுக்கு என்னால் தீங்கு நினைக்க முடியவதில்லை. அதுக்காக நான் கோழை என்று அர்த்தமில்லை. அன்றிரவு பிலோமினாவின் தமையன் சூசை நல்ல வெறியில் வந்து என்னை வாய்க்கு வந்தபடி பேசியதோடு, என் சேட்டிலும் பிடிச்சு இழுத்தான். நான் அப்பவும் பொறுமையை இழக்கவில்லை. நான் தலை அசைத்திருந்தால் போதும் தங்கச்சி. இன்டைக்குச் சூசை இருக்கமாட்டான். நான் பழி தீர்க்கிறவனா?...."

உணர்ச்சி வசப்பட்டுச் செமியோன் பேசினான். அவனுடைய உயர்ந்த குணங்கள் யாவரும் அறிந்ததே.

"நீங்கள் அவளைக் கைவிட்டிருக்கக் கூடாது அண்ணை..."

"தங்கச்சி அவளை நான் கைவிடவில்லை...... கடைசி நாள் அவளை நான் கேட்டன், என்னுடன் வந்துவிடு என்று; அவளால் முடியவில்லை. சம்பிரதாயங்கள், பெருமை என்றெல்லாம் பார்க்கிறவை ஒருக்காலும் காதல் கொள்ளக் கூடாது தங்கச்சி ! ...... காதல் என்பது வீரர்களுக்குரிய இனியவாழ்க்கை. கோழைகளுக்குரியதல்ல...." என்ற செமியோன் கலகலவெனச் சிரித்தான்.

அப்போது வெளியில் யாரோ அழைக்க பொன்னுக்கிழவர் எழுந்து சென்றார். தனிமையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு நாகம்மா கூறினாள்:

"அண்ணை, பிலோமினா உங்களை மறக்க முடியாது தவிக்கின்றாள். நீங்கள் போனதிலிருந்து நடைப் பிணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலவுகிறாள். உங்களுடன் எந்தக் கணமும் வரத் தயாராக இருக்கிறாள்! ஒருக்கா அவளைச் சந்தித்துப் பேச மாட்டியளா ?...."

செமியோன் மௌனமாக இருந்தான். நாகம்மா சொன்னாள்:

"நாளைக்கு இரவு இரண்டாம் சாமம்..... ஆலடி வயிரவர் கோயிலில்...... பிலோமினாவை வரச் சொல்லுறன்..."

திடீரெனக் கடற்கரையில் கூச்சல் எழுந்தது. வாசலில் யாருடனோ பேசிக் கொண்டிருந்த பொன்னுக் கிழவர், "தம்பி, கடற்கரையிலே ஏதோ சச்சரவு போலக் கிடக்குது.." என்றார்.

## 19.

சற்று பலமாக வீசிய வாடைக்காற்று இரவு ஏழரை மணியளவில் திடீரென அடங்கியது. பூமியிலிருந்து காற்றே அற்றுப்போய் விட்டது போல அனல்வெக்கை எங்கும் பரவியது. சற்று முன் ஆரவாரத்துடன் கரையில் மோதிய அலைகள் சாந்தமடைந்து மெதுவாக நெளிந்தன. எங்கும் ஆழ்ந்த அமைதி!

தனது வாடியில் அமர்ந்திருந்த மரியதாஸ் கடலின் மேற்பரப்பில் பார்வையை மேயவிட்டான். தூரத்தில் கடலின் நீர்ப்பரப்பைக் கிழித்து கொண்டு சுறா மீன்கள் மேலேழுந்து துள்ளி விழுவதைக் கண்டான். ஒன்று..... இரண்டு..... மூன்று..... என அவற்றின் எண்ணிக்கையும் பெருகியது. அமைதியுற்ற கடலில், கரைவரை சுறாக்கள் வரும் என்பது அவனுக்குத் தெரியும்.

வள்ளத்துக்கு அருகிலே அமர்ந்து மன்றாடி இராமசாமியும், இஸ்மாயிலும் வேறிருவரும் சாராயம் குடித்துக் கொண்டிருந்தனர். ஏனையோர் சற்று விலகி அமர்ந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருப்பதையும், எதையோ காரசாரமாக விவாதிப்பதையும் மரியதாஸ் கண்டான்.

வாடியில் இருந்தவாறே, "மன்றாடி...." என்று குரல் கொடுத்தான்.

அமைதியைக் கிழித்தபடி அவனது குரல் எழுந்தது. முதல் அழைப்பிற்கே இராமசாமி பதில் கொடுப்பது போல எழுந்து நின்றான். மரியதாஸ் வருமாறு சைகையால் அழைத்தான்.

இராமசாமியுடன் இஸ்மாயிலும் வந்தான்.

"இரவு காற்று பலமாக வீசும் போல இருக்கு..."

"இப்ப இருக்கிற நிலைமையைப் பார்த்தால் புசல் காத்து அடிக்கும் போலப் படுகுது..." என்றான் இஸ்மாயில். மரியதாஸ் கடலைப் பார்த்தான். தூரத்தில் மீன் ஒன்று துள்ளிப் பாய்வது தெரிகின்றது.

"காற்று வீச இன்னும் எவ்வளவு நேரம் எடுக்குமென்று நினைக்கிறாய், மன்றாடி?"

மரியதாசின் கேள்வி மன்றாடிக்கு வியப்பைத் தந்தது. வானத்தையும் கடலையும் சற்று நேரம் பார்த்து விட்டு, "இரண்டு மணித்தியாலமாவது எடுக்கும்.." என்றான்.

"அதிலும் கூட எடுக்கும்..." என்றான் இஸ்மாயில்.

"சின்னக் கரை வலையை ஒருக்காப் போட்டு வலிக்க இரண்டு மணித்தியாலங்கள் போதுமா?....." என்று கேட்டபடி மரியதாஸ் எழுந்து நின்றான். "பால் சுறாக்கள் கரையை அண்டித் திரிகின்றன...ஏராளமான மீன் பிடிபடுமென்று நினைக்கிறன்" என்றான் அவன் ஆர்வத்தோடு.

'இப்பவா...." என்றான் மன்றாடி ஆச்சரியத்தோடு. இருந்தாற்போல கடல் பொங்கி..,. காற்று கிளம்பிவிட்டு தென்றால்... வலையும் போகும்... நாங்களும்...!'

மரியதாஸ் குறுக்கிட்டான்.

"அப்படியொன்றும் நேராது... இரண்டு மணித்தியாலத்திலே எவ்வளவோ சாதித்துடலாம்.. ஒரு பரீட்சை தானே ? ...... இன்று பிடிபடுகிறதிலை எல்லாருக்கும் சமபங்கு.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது எங்களுக்கு ஒரு சவால்... எங்கே பார்க்கலாம்..." என்றான். இதனைக் கேட்ட எல்லோரது முகங்களும் மலர்ந்தன.

கடற்கரையில் அமைதி குலைந்தது. கலகலப்பு நிறைந்தது. மரியதாசின் தொழிலாளர்கள் கரைவலை வள்ளத்தில் வலையை ஒழுங்காக ஏற்றினர். அடுத்த வாடிபடும் அமர்க்களத்தை செமியோன் வாடியிலிருந்த செபஸ்தியானும், பேதுருவும் கண்டனர். என்ன நடக்கின்ற தென்பதை உடன் அவர்களால் உணர முடியவில்லை. வலையை ஏற்றிய வள்ளம் கடலுள் கரைவலையைப் படுத்தபடி விரைவாகச் செல்வதைக் கண்டபின் என்ன நடக்கிறதென்பது அவர்களுக்குப் புரிந்தது.

"விசரன்கள்... ! படு விசரன்கள் .... ! புயலடிக்கப் போகுதுது.. கடலுக்கை போறாங்கள். கடலோடு போகப் போறாங்கள்..." என்றான் செபஸ்தியான். குடிவெறியில் அவனுக்கு வார்த்தைகள் தடுமாறின.

எவருமே கடலில் இறங்கத் தயங்கும் வேளையில் மரியதாஸ் கரைவலை வளைக்கின்ற செய்தி யூசுப்பரின் வாடிக்கும் பரவி விட்டது. மரியதாசின் வாடியின் முன் பலர் வேடிக்கை பார்ப்பவர்களாகக் கூடி விட்டனர். இடையிடையே கடலின் நீர்ப் போர்வையைக் கிழித்தபடி சுறா ஒன்று மேலெழுந்தது.

ஒரு மணி நேரத்துள் கரைவலை குதிரை லாடமாக வளைக்கப்பட்டது.

தோணி கரையை அடைந்ததும் மரியதாஸ் தோணியில் ஏறிக்கொண்டான். கரைவலையின் மிதப்புக் கட்டைக் கயிற்றைப் பற்றி வலித்தவாறு மடியை நோக்கி வேகமாக விரைந்து சென்றான். மின்னலென எழுந்த சிறு சுறாவொன்று அணியத்தில் படுத்திருந்த அவனுக்கு மேலாகத் துள்ளிப் பாய்ந்தது. மடியின் மேல்வட்டக் கயிற்றில் தோணியைப் பிணைத்து விட்டு எழுந்து நின்ற மரியதாஸ் வலிக்குமாறு சைகை காட்டினான். அம்பாச்சொல்லி வலை வலிபடத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று நேரம் சென்றது. மரியதாஸ் "கூய்..." என்று குரல் கொடுத்தான், கரையில் இருந்தும் ஆரவார ஒலி எழுந்தது, வலிக்கும் கரங்களில் வலு ஏறியது. "ஏலேலோ தையதா" என்ற ஒலி தாள லயத்தோடு எழுந்தது.

புதியதொரு பிரச்சினை எழுந்தது. கரைவலையில் பரப்புச் சுருங்கச் சுருங்க அந்தப் பரப்புள் சிறைப்பட்ட இரு பால் சுறாக்கள் நன்கு தென்பட்டன. அவை வலைப் பரப்பிலிருந்து விடுபட்டு வெளியேறும் நோக்கத்தோடு கரைவலையின் மடியை நோக்கி விரைந்து செல்கின்றன. அவை செல்லும் வேகத்தில் மடியில் மோதினால் மடி பிளந்து போகும் அபாயத்தை மரியதாஸ் உணர்ந்தான். எனவே, அவை வேகமாக மடியை நோக்கி வரும்போது தோணியை வலிக்கும் சவளைப் பற்றிவாறு அதைச் குத்தாக வீசினான். அதைக் கண்டு திகைத்த சுறாக்கள் வந்த வழியே திரும்பிச் சென்றன.

கரைவலை வலிப்பது சற்றுக் கடினமாகியது. கடல் அலைகள் மெதுவாகப் பொங்கத் தொடங்கியது. மரியதாஸ் நிலைமையை ஓரளவு புரிந்து கொண்டான். "இன்னும் ஒரு பதினைந்து நிமிடங்கள் அவகாசம் கிடைத்தால் போதும்....." என அவன் எண்ணினான்.

"சுறுக்கா வலியுங்கடா....." என்று குரல் கொடுத்து விட்டு மடியில் பிணைத்திருந்த தோணியை அவிழ்த்து, மிதப்புக் கயிற்றைப் பற்றி வேகமாக வலித்தவாறு மரியதாஸ் கரையை அடைந்தான். அவன் கரையை அடையும் நேரம் காற்றும் இரைந்தபடி விரைந்து வந்தது. மழைத்துளிகள் சலசலத்து ஊசிகளாக விழுந்தன. கரை வலை போட்டோர் நெஞ்சுறுதியோடு வலித்தனர். யூசுப் சம்மாட்டியின் ஆட்களும் கை கொடுத்தனர்.

காற்றும், மழையும் முழு மூச்சுடன் ஆரம்பிக்க கரைவலையும் ஒருவாறு கரையில் இழுத்துப் போடப்பட்டது. எல்லோரது கண்களும் வலை மடியையே பார்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணமிருந்தன. வியப்பு.... பொறாமை.... அவற்றில் பளிச்சிட்டன.

வலையில் இரண்டு சுறாக்கள் மடிக்குள் சிக்குண்டு கடைசி மூச்சை விடத் துடித்தன. ஒவ்வொன்றும் ஆறடி நீளமானவை. அவற்றோடு பல்வகை மீன்களும் நிறைந்து மடி உப்பிக் கிடந்தது. சுறாக்களின் தாக்குதலால் மடி இரண்டு, மூன்றிடங்களில் பிய்ந்து போயிருந்தது. கரையை அண்மித்து நிகழ்ந்ததால் அதிக சேதம் ஏற்படவில்லை என மரியதாஸ் எண்ணினான்.

"இப்படியும் ஒரு கொள்ளையோ.... ?" என்று செபஸ்தியான் முணுமுணுத்தான்.

"பேசாலையானுக்கு அதிர்ஷ்டம் விளையாடுது...." என்றான் இன்னொருவன்.

மரியதாசின் முகத்தில் வெற்றிப் பெருமிதம் நிலவியது. இரைச்சலோடு வீசும் காற்று அவன் தலை மயிரைப் பறக்க வைத்தது.

மரியதாசின் பக்கத்தில் நின்ற மன்றாடி இராமசாமிக்கு திடீரெனத் துணிவு ஏற்பட்டது.

"கடலுக்குப் போகப் பயந்தவர்கள் ஏன் தொழில் செய்ய வந்திட்டான்கள்...?" என்றான் செமியோனின் வாடியை நோக்கி, இந்த வார்த்தைகள் பேதுருவின் காது களில் மோதியபோது, அவன் முகத்தில் சினம் பொங்கியது.

"டேய்... என்னடா சொன்னாய் ....?" என்றபடி இராம சாமியின் மீது பாய்ந்தான் பேதுரு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20.

செமியோன் வாடியை நோக்கி ஓடி வந்தான். கடற்கரை போர்க்கோலம் பூண்டிருந்தது. ஒரு பக்கம் செமியோனின் ஆட்கள் கையில் ஆயுதங்களுடன் நின்றனர். மறு பக்கம் மரியதாசின் ஆட்கள். அவர்களிடையே மரியதாசும் நின்றிருந்தான். இருபுறத்தாருக்கும் நல்ல மது வெறி.

"டேய் ராமசாமி, நீ என்னிலே கை வைச்சிட்டாய். இனி உன்னை உசிரோடை விட மாட்டன்..... மச்சான் செபஸ்தி, விடடா என்னை...." என்று கத்தினான் பேதுரு. அவனை விடாது செபஸ்தியான் இழுத்துப் பிடித்தான்.

"என்ரை ஆக்களிலை கை வைச்சால் சுட்டுப் பொசுக்கிடுவன்..." என்றான் மரியதாஸ். பொறுப்புள்ள ஒரு முதலாளியாக அவன் பேசவில்லை எனச் செமியோன் எண்ணினான். செமியோனைக் கண்டதும் மரியதாஸ் ஒருபடி அதிகமாகத் துள்ளினான்.

"உம்முடைய ஆக்களை நீர் கட்டுப்படுத்தி வைக்க வேணும்...... இல்லாவிட்டால் நான் நல்லவனாக இருக்கமாட்டன்....." என்றான் மரியதாஸ். அவன் கூறியது செமியோனுக்குப் பிடிக்கவில்லை.

"ஏன் நீர் எங்கடை மசிரைப் பிடுங்கி விடுவீரோ ?......." என்று உறுமினான் செபஸ்தியான். செபஸ்தியானை மேற் கொண்டு பேசவிடாது செமியோன் அமர்த்தினான்.

"இங்கே இப்ப என்னதான் நடந்தது.........?" என்று கேட்டான் செமியோன்.

"பேதுரு அண்ணர் கொஞ்சம் கூடுதலாகப் போட்டிட்டார்....... வாடிக்கு முன் நிண்டு கொண்டு தன்ரை பாட்டிற்குப் பாட்டுப் பாடினார். அப்ப வெளியிலே வந்த ராமசாமி, "பாடாதையடா என்றான்.....பிறகென்ன ........?

அவங்கள் எல்லாரும் சேர்ந்து பேதுருவை அடிச்சுப் போட்டான்கள்....... நாங்கள் .......விடுகிறதோ....?" என்றான் செபஸ்தியான்.

செமியோன் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். இத்தகைய சச்சரவுகள் சகஜமானவைதான். ஆனால், சம்மாட்டிகள் பொறுப்போடு நடந்து கொள்ளா விடில் பெரும் பிரச்சினை உருவாகி விடும்.

அப்புறத்தில் இருந்து மரியதாஸ் ஏசினான்:

"இவங்களுக்குப் பாடம் படிப்பிக்கிற மாதிரிப் படிப்பிப்பன்...."

செமியோன் மெதுவாக மரியதாஸ் அருகில் சென்று கூறினான்: "தம்பி, மரியதாஸ் கடுமையாகத் துள்ளாதையும்.... நீயே இப்படிச் சண்டைக்கு நின்றால் உன்ரை ஆட்கள் எப்படி நிப்பினம் ? நான் ஒன்று கூறுவன். நீ நினைப்பதுபோல நாங்கள் கிடக்க வரவில்லை....! நீ இனி பொறுப்போடு நடக்காவிட்டால் ஒருத்தருக்கும் நல்லதல்ல...." செமியோன் பொறுமையை இழந்து விட்டான் என்பது அவனது பேச்சில் தெரிந்தது.

யூசுப்புச் சம்மாட்டியும், விதானையாரும் அங்கு வராமல் இருந்திருந்தால் ந்தக் கடற் கரையில் இரத்தத் துளிகள் சிந்தியிருக்கும்.

அடிபட்ட நாய்போலே மரியதாஸ் நெடு நேரம் உறுமிக் கொண்டிருந்தான்.

காற்றோடு மழையு  சேர்ந்து கொண்டது.

## 21.

வேகமாக வீசுகின்ற காற்றையும் பொருட்படுத்தாமல் விருத்தாசலம் அந்த இரண்டு கூழைக்கடாக்களையும் வேகமாகத் தொடர்ந்தான். ஏதோ ஒரு வெறி அவனை ஆட்கொண்டு விட்டது. அந்தக் கூழைக்கடாக்கள், அவனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கு மீறி அலைக்கழித்தன. உயர்ந்த பனை உச்சிகளில் அமர்வதும், எழுந்து பறப்பதுமாக அலைந்தன. விருத்தாசலத்தின் ஆத்திரம் எல்லை மீறியது.

"உங்களை இண்டைக்கு தப்ப விடுவதில்லை. பார்ப்போம்" என்று சபதம் செய்து கொண்டான்.

இரவு படர்ந்தது. காற்று, மழைத் துளிகளோடு வீசியது.

இறுதியில் அந்தக் கூழைக்கடாக்கள் கௌத்தி ஓடையின் வலது கரையில் தனித்து நின்ற ஒரு ஒற்றைப் பனையில் சென்று தங்கின. தங்கியபோதிலும் அவை நிம்மதியின்றித் தலையை அங்குமிங்குமாக அசைத்தன. தூறலில் நனைந்தபடி தங்களையே வைத்த கண் வாங்காது பார்த்தபடி, குதிரையொன்றில் அமர்ந்திருக்கின்ற மனிதனையும், அவனது அகோரப் பார்வையையும் கண்டன. இறகுகளை உதறி, மழைநீரைச் சிந்திவிட்டு அமைதியுற்றன.

அடிவானில் மின்னல் ஒன்று கிளை பரப்பிச் சிதைந்தது. மின்னற் சிதறலில் கூழைக்கடாக்கள் பளபளத்தன. கடும் மழை பொழியப் போகின்றது, குதிரையும் உடலை ஒரு தரம் சிலிர்த்து விட்டுக் கனைத்தது.

விருத்தாசலத்திற்கு எஞ்சியது ஏமாற்றம்தான். தரையில் தாவி மறைகின்ற எத்தனை முயல்களைக் குறி தவறாமல் அடித்திருக்கின்றான். கேவலம் ! இந்தக் கூழைக்கடாக்கள் அவனை மண் கவ்வ அல்லவா வைத்து விட்டன?

மழை மட்டும் இல்லாவிடில் பனையில் இருந்து இவற்றைக் கிளப்பி வேறு ஏதாவது மரங்களில் தங்க வைத்துப் பிடித்து விடலாம்.

மிகுந்த ஏமாற்றத்தோடு விருத்தாசலம் குதிரையை நடாத்திச் சென்றான். சுடலைமடம் தெரிந்தது. சுடலையைக் கடந்து நல்ல தண்ணீர்க் கிணற்றடிக்குச் செல்லும் பாதையில் திரும்பினான். கிணற்றடியில் யாரோ ஒரு பெண் தண்ணீர் அள்ளிக் கொண்டு நிற்பது தெரிந்தது. "நாகம்மாவோ?....." என எண்ணினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய நினைவு நெஞ்சோடு நின்றது. கிணற்றிற்கு அருகே வளர்ந்திருந்த பூவரச மரத்திற்குப் பின்னால் ஒரு உருவம் மறைவதையும், அது திடீரென அப்பெண்ணின் கையைப் பற்றிக் கட்டிப் பிடிப்பதையும், "வீல்" என அப்பெண் அபயக் குரல் எழுப்புவதையும் கண்டான்.

கிணற்றடியை நோக்கிப் பாய்ந்து சென்றான் விருத்தாசலம்.

"ஐயோ....... விடடா..... விடடா........ ஐயோ அம்மா......" என அப்பெண் அலறினாள்.

விருத்தாசலம் தன்னையே மறந்த ஆவேசத்துடன் அவனைப் பற்றி, உதறி வீசினான். திடீரென இழுத்து வீசப்பட்டதை எதிர்பாராத அம்மிருகம் கிணற்றுக் கட்டுடன் மோதி விழுந்தது.

விருத்தாசலம் கோபத்தோடு கையை ஓங்கினான். உயர்த்திய கையில் கூர்த்தடி இருப்பதை விழுந்தவன் கண்டான்,

"ஐயோ தம்பி ........ அதை வீசிவிடாதே....... வீசி விடாதே..... உன்னைக் கும்பிட்டன் வீசிடாதை........ வெறியிலே தெரியாமல் நடந்து விட்டன்...." என்று சண்முகம் அலறினான். கையெடுத்து கும்பிட்டான்.

விருத்தாசலத்தின் கை சோர்ந்தது.

"எளிய நாயே..... தண்ணி அள்ள வாறதுகளிடம் சேட்டையா விடுகிறாய்?...."

"அது நாகம்மா இல்லை. சிவசம்புப் பாரியாரின்ரை மோள்" என்று சண்முகம் கூறிக்கொண்டே அவ்விடத்தை விட்டு வேகமாக ஓடி மறைந்தான்.

மழை தூறிக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22.

ஆலடிவயிரவர் கோவில் இருளிலே மூழ்கிக் கிடந்தது. கண்ணாடி கூடுக்குள் சிட்டி விளக்கு ஒன்று மட்டும் மங்கி மங்கி எரிந்து இருளின் பயங்கரத்தைச் சற்றுக் குறைக்க முயன்றது. அச்சிறு தீபமும் சற்று நேரத்தில் அணைந்து போய்விடும் நிலையிலிருந்தது.

விழுது பரப்பிய ஆலமரம். அந்த ஆலமரத்தின் கிளை ஒன்றில் என்றோ வீசிய புயலினால் நிலப்பிடிப்பிழந்து பாறிப்போன பனை மரம் சாய்ந்து கிடந்தது. பனை மரத்தின் அடியில் ஏறி அமர்ந்திருந்தான் செமியோன். வேறு சமயத்தைச் சேர்ந்தவனாகிலும் அவனுக்கு அந்த இடம் புதிதானதன்று. ஒவ்வொரு மார்கழி மாதமும் இக்கோயிலில் நடைபெறும் பொங்கல் விழாவில் எல்லாச் சமயத்தவர்களும் வேற்றுமையின்றிக் கலந்து கொள்வார்கள்.

சென்ற ஆண்டு வாடைக் காலத்தின் போது பல இரவுகளை அவனும் பிலோமினாவும் அந்த இடத்திலே கழித்திருக்கிறார்கள். எதிர்கால வாழ்க்கையின் இன்பக் கனவுகளை அங்கே உருவாக்கி மகிழ்ந்திருக்கிறார்கள். இவையெல்லாம் இன்று பழம் கனவுகளாகி விட்டன.

செமியோன் இன்று தனிமையிலிருந்தபோது, பிலோமினாவின் அன்பும், காதலையும் தான் புரிந்து கொண்ட கடந்த கால சம்பவங்கள் எல்லாம் அவன் நினைவில் எழுந்தன.

பிலோமினா மீனுக்கு உப்பிட்டுக் கொண்டிருந்தாள். அருகில் வேறு எவரும் இல்லை. செமியோன் வந்து தயங்கி நிற்பதைக் கண்ட பிலோமினா, "என்ன.....?" என்று மெதுவாகக் கொஞ்சலோடு கேட்டாள்.

"பிலோ....." என்றான் அவன் வார்த்தைகளை முடிக்க முடியாமல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆக்கள் பார்க்கினம்..... என்னவாம்.."

"ஒன்றுமில்லை...!"

"ஒன்றுமில்லாமல் ஏன் வந்தியள்?....."

"அது பிலோமினா......."

"எது பிலோமினா ......." என்று குறும்பாக அவள் சிரித்தாள்.

நாகம்மா தூரத்தில் அவர்களை நோக்கி வருவது தெரிந்தது. கூறவேண்டியதை விரைவில் கூறிவிட வேண்டுமென்ற நிலை.

"பிலோ..... இண்டைக்கு ராத்திரி என்னைச் சந்திக்கிறாயா?...." இதைக் கூறுவதற்குள் அவனுக்கு வியர்த்து விறுவிறுத்து விட்டது. அவனை வியப்போடும், பயத்தோடும் பிலோமினா பார்த்தாள்.

"ராவிலா?..... தனியவா?..." அவள் குரலில் சந்தேகமும் பயமும் கலந்திருந்தன.

"என்னை நீ நம்பவில்லையா பிலோ?...." கண்களில் ஏக்கம் படர அவன் கேட்டான். அவனுடைய ஏக்கத்தை அவளால் தாங்க முடியவில்லை.

"உங்களை நம்பாமலா?....... ஏன்.......?"

"உன்னோடு நிறையப் பேச வேணும்...... அவ்வளவு தான்......"

"அவ்வளவு தானே?....."

".......ம்...." என்றான் அவன்.

"எங்கே?...."

"ஆலடி வயிரவர் கோயிலுக்கு வாறியா?...... இரவு எல்லாரும் படுத்த பிறகு......"

"எனக்குப் பயமாக இருக்கும்......"

"என்ன பயம் பிலோ? ....... நான் பார்த்துக் கொண்டிருப்பன்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலோமினா மெதுவாக 'ஓ' மென்று தலையை ஆட்டினாள். மீனில் உப்பை அப்பியவாறு அவள் தலை அசைத்தது, இப்பவும் அவன் கண்களில் நின்றது.

வானத்தில் நட்சத்திரங்கள் கண்சிமிட்டி ஜொலித்துக் கொண்டிருந்தன. பனையில் சாய்ந்தவாறு ஆகாயத்தைப் பார்த்தான் செமியோன். அன்றும் இப்படித்தான் ஒரு இரவு ! தனிமையில், அவர்கள்சந்தித்துக்கொண்ட வேளை அது. மங்கிய நிலவொளியில் நீண்ட நேரம் அவளையே கண்ணிமைக்காது அவன் பார்த்தபடியிருந்தான். ஆர்வம் பொங்கும் அவளின் கயல் விழிகள் மெல்லிருளில் ஒளிர்ந்தன. விளைமீனின் கன்னச்சிவப்பாக அவளின் கன்னங்கள் மின்னின. அவள் மெல்ல நகைத்தாள். அப்படியே அவளை அள்ளி அணைக்கவேண்டும் என்ற ஆவேசம் அவனுக்கு ஏற்பட்டது.

"பிலோ.... என் பிலோமினா......"

"ஏன் வரச் சொன்னியள்?....." நடுங்கும் குரலில் மெதுவாக அவள் கேட்டாள். அவன் வார்த்தைகளின்றி அவளின் கரங்களைப் பற்ற முயன்றான். அவள் சட்டெனப் பின் வாங்கினாள்.

"என்னைத் தொடாதீங்க.....!"

"ஏன் உன்னைத் தொட எனக்கு உரிமையில்லையா?....."

"அப்படியல்ல ........ எனக்குப் பயம்......... ஆம்பிளையள் தொட்டால்...... கெட்டுப் போய்விடுவோமாம்....!"

"ஏன்....?"

"அப்படித்தான்.....!"

வெகு நேரத்திற்குப் பிறகு தான் அவனுக்குப் புரிந்தது. சிரிப்பை அவனால் அடக்க முடியவில்லை.

இப்போது நினைத்துப் பார்க்கிற போது, பிலோமினாவின் அறியாமையில் இருந்த இனிமை தெரிந்தது. திரும்பிப் போய்விட அவள் அவசரப்பட்டாள்.

"நான் போகட்டா.. வீட்டில் ஆராவது முழிச்சிடுவினம்..... அகப்பட்டால் போச்சுது......"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அகப்பட்டால் என்ன, பிலோ...." என்பான் செழியோன். மெதுவாக அவளை அணைத்து தன் மார்போடு இறுக்கிக் கொள்வான். குளிருக்குத் தாயோடு ஒண்டிக் கொள்ளும் ஆட்டுக் குட்டியாக அவள் அவனோடு ஒட்டிக் கொள்வாள். இரவு, தன்பாட்டில் கழிந்து கொண்டிருக்கும்.

"பிலோ ....... என் ஆசைப் பிலோமினா....."

"என்ன?..."

"இந்தப் பிறவில் உன்னை அடைந்தது நான் செய்த பாக்கியமே...."

"......ம்........" என்பாள் அவள். அவளுடைய இள மார்புகள் விம்மித் தணியும்.

"என்னை ஏமாற்றி விடமாட்டீர்களே......?" என்று ஒரு நாள் அவள் கேட்டாள்.

தன்னோடு அணைத்திருந்த அவளைத் தன் மார்பிலிருந்து பிரித்து, அவள் தோள்களில் தன் இரு கரங்களையும் பதித்து, அவள் கண்களை உற்றுப் பார்த்தான். பின் அவளை இழுத்து, அவள் கன்னத்தில் தன் கன்னம் பதித்து, "பிலோ.... உன்னை நான் ஏமாற்றுவதா....? என் உலகம், என் உயிர் எல்லாம் நீதான் பிலோ........ நீ இல்லாவிட்டால் நான் இல்லை......." என்றான். அவனுடைய கன்னங்கள் நெருப்பெனச் சுட்டன, அவளுடைய வழவழப்பான கழுத்துப் புறத்தில் முகம் பதித்து முத்தமிட்டான். அவள் மெய்மறந்து பேசாமடந்தையாக நின்றாள்.

பெண்மையின் ஸ்பரிசம் தான் எவ்வளவு இனிமையானது? அவளுடைய சிவந்த, நீல நரம்புகள் ஓடுகின்ற கழுத்தில் முகம் பதித்து இருக்கும் போது, அவனுக்கு இந்த உலகம் தெரிவதில்லை. அந்த இனிய வேளைக்காக இந்த உலகத்தையே இழக்க அவன் தயாராக இருந்தான்.

வானத்தில் நிலவு பவனி வந்தது. சீதளக்காற்று சில்லென்று வீசியது. காட்டுக்குதிரைகள் கனைக்கும் ஒலி கேட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எவ்வளவு காலம் தான் நாங்க இப்படிப் பயந்து பயந்து சந்திக்கிறது?....."

"இன்னும் கொஞ்சக் காலத்திற்குதான்....! நான் திரும்பிப் போகும் போது உன்னையும் அழைத்துக் கொண்டு போவன்.... பிலோ... பிறகென்ன?......"

இவையெல்லாம் இன்று பழைய கனவுகளாகி விட்டனவே!

செமியோன் இருக்கும் இடத்திலிருந்து பிலோமினாவின் வீடு கூப்பிடு தூரத்தில் இருந்தது. இரவின் போர்வையில் எல்லாக் குடிசைகளும் நிம்மதியாக உறங்கும்போது, இரு பெண்களுக்கு மட்டும் ஏனோ தூக்கம் வரவில்லை. குடிசையை விட்டு வெளியேறி ஆலமரத்தடியை நாடி எப்போது செல்வேனென்று ஒவ்வொரு கணமும் பிலோமினா துடித்துக் கொண்டிருந்தாள். இன்றைக்கென்று திரேசம்மா தூக்கம் பிடிக்காமல் திண்ணைக் குந்தில் அமர்ந்துகொண்டு சுருட்டுப் புகைத்துக் கொண்டிருந்தது பிலோமினாவின் நம்பிக்கையை தூள்தூளாக்கியது.

நாகம்மாவிற்கும் தூக்கம் வரமறுத்தது. அவள் சிந்தனையில் மூழ்கியிருந்தாள். பிலோமினாவும் செமியோனும் இப்போது ஒருவரோடொருவர் பேசிக் கொண்டிருப்பார்கள். பேசிக்கொண்டு மட்டுந்தான் இருப்பார்களா ? பிலோமினாவின் கரத்தை அவர் பிடித்திருப்பார். அல்லது...? நாகம்மாவின் உள்ளத்திலிருந்து ஆயிரமாயிரம் ஆசைகள் கிளர்ந்தெழுந்தன. எல்லாவற்றுக்குமிடையே மரியதாஸ் என்ற ஆடவனின் நினைவும் எழுந்தது. "வெட்கம் கெட்ட ஆம்பிளை" என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

இரவு இரக்கமின்றிக் கழிந்து கொண்டிருந்தது. செமியோன். பிலோமினாவின் வீட்டைப் பார்த்தபடியே இருந்தான். அவள் வரக் காணோம். இரவு கடலுக்குச் செல்லும் தொழிலைக் கூட மறந்து, பிலோமினாவைச் சந்திக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற ஆசையினால் அங்கு இருந்தான். அவனுக்கு ஏமாற்றமாகவிருந்தது.

அவனுடைய எண்ணப்படி மட்டும் பிலோமினா நடந்திருந்திருந்தால், இன்று அவனின் மனைவியாக இருந்திருப்பாள். தகப்பன், தாய், தமையன் என்ற பாசத்தளைகளிடையே சிக்கிவிடுபட வழி தெரியாத வைதிகம் அவள்.

"எல்லாரும் ஒத்துக் கொண்டால் இப்போதே நான் உங்களோடு வருகின்றன்" என்றுகூறி அவனைத் தனியனாக அனுப்பி வைத்த அதே பிலோமினா இன்று தான் விட்ட பிழைக்காக வருந்துகின்றாளாமே ! செமியோனின் சிந்தனையில், பிலோமினாவின் அண்ணன் சூசை வந்தான்.

செமியோனின் கூலியாட்களில் ஒருவனாகத் தான் பிலோமினாவின் அண்ணன் சூசைமுத்து இருந்தான். செமியோனுக்கும், பிலோமினாவிற்குமிடையில் உறவு ஏற்பட்டதை அறிந்த சூசை, அந்த உறவைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்ளப் பார்த்தான். தொழிலாளர்கள் விடயத்தில் தலையிடுவது, அவர்களிடையே தன்னை முக்கிய நாட்டாண்மையாகக் காட்டிக் கொள்வது, வேலை செய்யாமலே கூலி கேட்பது போன்ற செயல்களில் ஈடுபட்டான். பிலோமினாவின் அண்ணன் என்ற ஒரே காரணத்திற்காக எல்லாவற்றையும் செமியோன் பொறுத்துக் கொண்டான். அவனது தொழிலாளர்கள் குறைப்பட்டதையும் அவன் பொருட்படுத்தவில்லை. ஆனால் அவன் மைத்துனன் உறவு கொண்டாடியதோடு மட்டும் நிற்காது, குடிப்பதற்கும் பணம் தரும்படி செமியோனைக் கேட்கத் தலைப்பட்டான். இந்த விடயத்தில் மட்டும் செமியோன் அசையவில்லை.

"நீ குடிப்பதற்கு நான் காசு தரமாட்டன்." என்று செமியோன் திடமாகக் கூறிவிட்டான்.

அன்றிரவு நன்கு குடித்துவிட்டு வந்த சூசைமுத்து, நீதியீனமாகச் செமியோனைப் பேசித் திட்டினான். தூஷணைகளால் ஏசினான். செமியோன் சம்மாட்டியின் கழுத்திலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஙகை வைத்து தள்ளிவிட்டான். செமியோன் பொறுமை இழக்க நேர்ந்தது அன்று தான்.

சூசை அன்று செப்பமாக வாங்கிக் கட்டிக் கொண்டான். அதிலிருந்து ஆரம்பமான சோதனை தான்.

"பிலோமினா வரமாட்டாளா ?" செமியோனை ஏக்கம் தின்றது. அவளை எப்படி அவனால் மறக்கமுடியும்?

தூரத்தில் சாமக்கோழி ஒன்று கூவுவது கேட்டது.

## 23.

சூசைமுத்து வந்து விட்டான். கிராமம் முழுவதுமே அவனை ஒருவகை வியப்போடும், பயத்தோடும் பார்த்தது. உடுத்திருந்த சாரத்தோடு இரவோடு இரவாக தீவை விட்டு ஓடிப்போன சூசைமுத்து, இந்த வடிவில் வருவானென்று அந்தக் கிராமம் எதிர்ப்பார்க்கவே இல்லை. நெடுந் தீவின் மாவலித் துறையில் அவன் வந்திறங்கிய போது முதன் முதலில் கண்டவன் விருத்தாசலம் தான்.

துறைமடத்தில் அமர்ந்து கச்சான் தின்றுகொண்டிருந்த விருத்தாசலத்தின் காதுகளில், பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு புங்குடுதீவின் கழுதைப்பிட்டித்துறையிலிருந்து வருகின்ற லோஞ்சின் சத்தம் விழுந்தது. நிமிர்ந்து பார்த்தான். ராஜேஸ்வரி என்ற பெயரைத் தாங்கிய அந்தப் பழைய வள்ளம், பெருமூச்சு விட்டபடி துறையினுள் நுழைந்தது. கடல் வற்று நேரம் என்றாலும், அனுபவப்பட்ட தொழிலாளர்கள் லோஞ்சை இறங்கு துறையோடு இணைத்தனர்.

அப்போதுதான் எதேச்சையாகச் சூசைமுத்தை விருத்தாசலம் கண்டான். முதலில் அவனை மட்டுக் கட்ட முடியவில்லை. அடையாளம் கண்டபோது வியப்பினால் வாயடைத்துப் போய் விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய சூசையாகவா அவன் இருந்தான் ?

வெள்ளை வேட்டி, மடிப்புக்கலையாத ரெரிலின் சட்டை, சட்டைப் பக்கெட்டுக்குள் அப்பட்டமாக விளம்பரப்படுத்தும் நூறு ரூபாய்த் தாள், இடது கை மணிக்கட்டில் துலங்கும் ரிஸ்ற் வாட்ச், நீளமான வாருடன் தோளில் தொங்கும் தோற்பை, காலில் றப்பர்ச் செருப்பு, அரைவாசி எரிந்து போன சிகரட்டை அலட்சியமாக வீசிக் கடலில் எறிந்தபடி பிறந்த மண்ணை அருவருப்புடன் பார்ப்பது போலப் பார்த்தான். சூசைமுத்து.

ஏதோ ஒரு அதிசயமான பிராணியைப் பார்ப்பது போலப் பலர் தன்னைப் பார்ப்பதைக் கண்டான். பெருமிதமான புன்னகை அவன் உதட்டில் தவழ்ந்தது.

மாவலித்துறையிலிருந்து தீவின் தென்கரைக்கு நேராக வண்டில் பாதை ஒன்று செல்கின்றது. அப்பாதையில் செல்லும் போது சூசையிடம் விருத்தாசலம் கேட்டான்:

"அண்ணை, எங்கையாவது வேலை கீலை பார்க்கிறியளே ?...."

சூசை சிரித்தான். அவன் சிரிப்பில் எவ்வளவோ மறைந்திருப்பது போல விருத்தாசலத்திற்குப் பட்டது.

"இந்த வாட்டி கனபேர் வாடி போட்டிருக்கினமே?...."

விருத்தாசலம் எல்லா விபரங்களையும் மளமளவென்று ஒப்புவித்தான். செமியோனின் பெயரை உச்சரித்த போது சூசைமுத்துவின் முகத்தில் கோபக் குறி படர்ந்தது.

"வடுவா, அவனுக்கு இந்த முறை நல்ல பாடம் படிப்பிக்கிறன்....." என்று சூசைமுத்து பற்களைக் கடித்துக் கொண்டான்.

மரியதாஸின் பெயரை உச்சரித்த போது, விருத்தாசலத்தின் உள்ளத்தில் ஏதோ ஒன்று சுரீரெனக் குத்தியது. மௌனமாக இருவரும் நடந்தனர். இராமன் வளப்புக் கழியை நெருங்கிய போது சூசைமுத்து, "நீ போ, விருத்தாசலம், நானொருக்கா இங்கால போட்டு வாறன்...." என்று கூறிவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன் வளப்புக் கழியோரமாக வயலில் இறங்கி மேற்கே நடக்கத் தொடங்கினான்.

"உடுப்புத் தான் மாறி இருக்கிறது. ஆள் மாறவில்லை...." என்று எண்ணியபடி குதிரையில் தாவி ஏறி கடற்கரையை நோக்கித் தட்டிவிட்டான் விருத்தாசலம்.

விருத்தாசலத்தின் வருகையோடு, சூசைமுத்து ஊருக்கு வந்துவிட்ட செய்தி காட்டுத் தீ போலப் பரவி விட்டது.

செய்தி கேட்ட பிலோமினா பேரிடி விழுந்தவள் போலானாள். அவளுடைய ஆசைக் கனவுகள் அத்தனையும் கண்களின் முன்னால் தகர்ந்து சரிந்தன. அண்ணன் வருவதற்கு முன் செமியோனை ஒரு தடவையாவது சந்தித்து மன்னிப்புக் கேட்டகலாம் என்று எண்ணியிருந்த அவளின் நம்பிக்கை சிதைந்தது. சென்ற இரவு தனக்காகக்காத்திருந்து அவர் ஏமாந்து போயிருப்பார். அவளைக் குடிசைக்குள் படுக்கவைத்துப் பூட்டிவிட்டு, வாசலில் காவலாகப் படுத்திருந்த தாயை அவளால் ஏமாற்றவே முடியவில்லை.

குரலெடுத்து அழாமல் இதயத்துள்ளேயே அழத்தான் அவளால் முடிந்தது.

அப்போது நாகம்மா கூப்பிடுவது கேட்டது. பானையை எடுத்துக் கொண்டு வெளியேவிரைந்து சென்றாள் பிலோமினா.

"சுணங்காமல் கெதியா வா... அண்ணன் வந்ததும் கேட்பான்....." என்று அடுக்களைக்குள் இருந்து குரல் கொடுத்தாள் திரேசம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24.

பிலோமினா விம்மி விம்மி அழுதாள். நாகம்மாவால் தோழியைச் சமாதானப்படுத்தவே முடியவில்லை.

அவள் கூறியது நாகம்மாவிற்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது.

"நீ வேணும் என்று செய்யவில்லையே ?....... உலகம் தெரியாதவரா செமியோன் அண்ணை. உன்னாலே வரமுடியவில்லை என்றுதான் நினைச்சிருப்பார்....... ! நீ வீணாக அழாதை பிலோ ?....... நான் எல்லாத்தையும் அண்ணரிட்டே கூறி, இன்டைக்கு எப்படியாவது சந்திக்கச் சொல்றன்...."

"இனி முடியாது, சூசை அண்ணன் வந்திட்டான்...." என்றாள் பிலோமினா விரக்தியோடு.

நாகம்மா தண்ணீர் அள்ளிப் பானைகளை நிறைத்தாள்.

"இரவு முழுவதும் வீட்டைவிட்டு வெளியேறி அவரைச் சந்திக்க முயன்றன். பல தடவைகள் முயன்றன். ஆனா, முடியவில்லை... அம்மாவுக்கு ஏதோ சந்தேகம்..... என்னடி நித்திரை கொள்ளவில்லையா? என்று அடிக்கடி கேட்டுக் கொண்டே இருந்தா...... நான் என்னடி செய்வன்.... ? அவர் இரவெல்லாம் பனியிலே எனக்காகக் காத்திருந்திருப்பார்.... பிலோமினா மீண்டும் ஏமாற்றிவிட்டாள் என்று எண்ணியிருப்பார். எவ்வளவு ஆவலோடு வந்திருப்பார்..... என் கவலை எல்லாத்தையும் அவரிடம் வாய்விட்டுச் சொல்லி ஆறுதல் பெறலாமென்று காத்திருந்தன்... அவர் கால்களில் விழுந்து நான் பாவி...... என்னை மன்னியுங்கோ என்று கெஞ்ச எண்ணியிருந்தன். அவர் என்னைப் பற்றி என்ன எண்ணியிருப்பார்...." பிலோமினா விம்மிவிம்மி அழுதாள்.

நாகம்மாவால் எதுவும் பேச முடியவில்லை. அவளுடைய விழிகளும் கலங்கிவிடுவன போலத் தவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாகம்.....! எனக்காக அவரிடம் சொல்வாயாடி? நான் அவரைக் கனவிலும் ஏமாற்றவில்லை என்று சொல்வாயா? அவர் எங்கை கூப்பிட்டாலும் நான் ஓடிவரத் தயாராக இருப்பதாகக் கூறுவாயா ....?" என்று கண்ணீர் சிந்தியபடி இரந்து கேட்டாள் பிலோமினா.

தோழியின் தோள்மீது ஆதரவாக தனது கரத்தை வைத்து அழுத்தினாள் நாகம்மா.

மாலைச் சூரியன் அடிவானத்தை நாடிக்கொண்டிருந்தான். தூரத்தில் கூழைக்கடா ஒன்றின் கூவல் ஒலி எழுந்தது.

இரு பெண்களும் குடங்களை எடுத்துக் கொண்டனர். கிணற்றுக் கட்டில் வைத்திருந்த பட்டையையும், நாரையையும் எடுப்பதற்காகத் திரும்பிய பிலோமினா, திடீரென "ஆ..." என அலறினாள். அவள் இடுப்பிலிருந்த மண்குடம் படீரெனக் கீழே விழுந்து நொறுங்கியது.

திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள் நாகம்மா. விக்கித்துப் போய் பிலோமினா நிற்பதையும் அவளது விழிகள் பயத்தோடு திக்பிரமை கொண்டிருப்பதையும் கண்டாள், பிலோமினாவின் உடல் படபடவென நடுங்கியது.

"என்னடி.....? என்னடி.....?"

"அங்கை ........ அங்கை" என்று சுடலை மடம் இருந்த திசையில் சுட்டிக் காட்டத்தான் அவளால் முடிந்தது. நாகம்மா அந்த திசையில் பார்த்தாள். மாடுகள் சில மேய்ந்து கொண்டிருந்தன.

"ஏய் .... பிலோ..... என்னத்தைக் கண்டாய் ?" என்று அவளை உலுக்கினாள் நாகம்மா.

தோழியின் கரத்தைப் பற்றியபடி விரைந்து இழுத்தாள் பிலோமினா. அவளின் உதடுகள் தோத்திரத்தை அவசரமாக முணுமுணுத்தன.

"என்னடி பிலோ? ஏன்ரி என்னைப் பயமுறுதினாய்...?"

"தயவு செய்து என்னை இப்ப கேட்காதே..... நாகம்மா நிச்சயமாகப் பிறகு சொல்லுவன்....."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூழைக்கடா ஒன்று தலைக்கு மேல் கேவியபடி பறந்தது. அந்தச் சத்தத்தைக் கேட்டு பிலோமினாவின் உடல் நடுங்கியது. இவளுக்கு என்ன பிடித்தது.

பிலோமினாவின் வீட்டை நெருங்கியபோது வீடு தடல் புடல் பட்டது. முற்றத்தில் பலர் குழுமி நின்றனர். சூசை வந்து விட்டான்.

"அண்ணை, இப்பத்தான் வந்தீங்களா.....?" என்று சாட்டுக்கு நாகம்மா கேட்டாள்.

தமையனை நிமிர்ந்தும் பார்க்காமல் விர்ரென பிலோமினா குடிசைக்குள் புகுந்தாள்.

## 25.

இரவு படரும் வேளை. குடிசைத் திண்ணையில் அமர்ந்திருந்த விருத்தாசலம், பொன்னுக்கிழவரைப் பார்த்தபடி சொன்னான்: "நான் யாழ்ப்பாணத்துக்கு ஓடப்போறன்..... அப்பு .....!"

பொன்னுக்கிழவர் அவனை வியப்போடு பார்த்துவிட்டுச் சிரித்தார்.

"உண்மையாகத்தான், அப்பு இங்கையிருந்து பிழைக்கேலாது......"

"ஏன் ? காணி எடுத்துக்கொண்டு கிளிநொச்சிப் பக்கம் போகப் போறியோ?"

"இல்லை, அப்பு...... சூசைமுத்தைப் போல ஓடிப் போட்டுவரப்போறன்..... கைநிறையக் காசோடு வந்தால் தான் ஊரில் கௌரவம்...... பிறகும் மதிப்பினம்....." என்று கூறியபோது, விருத்தாசலம் குடிசைக்குள் ஏக்கத்தோடு பார்த்தான். நாகம்மா அடுப்புக்கு அருகே அமர்ந்திருந்தாள். மீன் குழம்பின் வாசனை மூக்கைத் துளைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருத்தாசலம் கூறியவை யாவும் நாகம்மாவுக்குக் கேட்கவே செய்தன. அடுப்பின் முன் குந்தியிருந்த அவளின் உள்ளத்தில் மரியதாஸ் கிணற்றடியில் பேசியவை மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்தன. "துணிச்சலானவர்தான்." அவனைப் பற்றிய எண்ணங்கள் இனிமையாகவே இருந்தன.

மரியதாஸ்... இப்படி ஒருவன் தன் வாழ்வில் குறுக்கிடுவான் என நாகம்மா ஒருபோதும் எண்ணியது கிடையாது. அவனோடு இன்னமும் சிறிது நேரம் நின்று வார்த்தையாடியிருக்கலாமென நாகம்மா நினைத்தாள். இனம் தெரியாத ஒரு பூரிப்பும் மகிழ்ச்சியும் அவளுக்கு ஏற்பட்டது. மீண்டும் கிணற்றடிக்குச் சென்றாலென்ன எனவும் எண்ணினாள்.

வெளியே விருத்தாசலம் எதற்கோ சிரிப்பது கேட்டது. மச்சானின் போக்கில் சில நாட்களாக ஏற்பட்டுவரும் மாற்றங்களை அவள் அவதானிக்காமலில்லை. அவனது பார்வையில் கள்ளம் புகுந்ததையும் அவள் அறியாமலில்லை. அவனின் கள்ளப் பார்வையை ஏனோ அவளால் ரசிக்க முடியவில்லை.

இரண்டு நாட்களுக்கு முன் விருத்தாசலம் கேட்டான் : "நாகம்மா, என்னைக் கண்டால் ஏன் ஒதுங்கி ஒதுங்கிப் போறே...?"

"ஏன் மச்சான், அப்படி கேட்கிறாய்...?" என்று அவள் கேட்டுவிட்டுச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் வசமிழந்த அந்த ஆடவனால் எதுவுமே பேச முடியவில்லை.

விருத்தாசலம் பொன்னுக் கிழவருக்குக் கூறிக்கொண்டிருந்தான்.

"ஒரு விஷயத்தை நீங்கள் அவதானிச்சியலோ அப்பு... சூசையும், மரியதாஸும் இரண்டு நாளைக்குள்ளை வலுவாக சிநேகிதமாகி விட்டினம்... எப்ப பார்த்தாலும் இரண்டு பேரும் சேர்ந்து வாடியிலே கதைத்தபடி இருக்கினம். ஒரு கதையும் அடிபடுகுது. சூசையின்ர தங்கச்சி பிலோமினாவை மரியதாசுக்குக் கட்டிக் கொடுக்கிற எண்ணமிருக்காம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவிரிமுத்தர் அப்படிக் கதைச்சித் திரியிறாராம்..... பார்க்கப் போனால் சரிபோலத்தான் படுகுது...."

நாகம்மாவின் இதயத்தில் விருத்தாசலம் கூறியவை பேரிடியாக இறங்கின. 'அப்படி இருக்காது, அப்படி இருக்காது. சூசை அண்ணன் விரும்பினாலும் அவர் ஒப்புக் கொள்ள மாட்டார். பிலோமினா ஒப்புக் கொள்ள மாட்டாள். ஆனால், சூசைமுத்துவும், மரியதாசும் சிநேகிதமாக இருப்பது நல்லதுக்கல்ல' என அவள் எண்ணினாள்.

வெளியே பொன்னுக்கிழவர் விருத்தாசலத்திடம் கூறிக் கொண்டிருந்தார்: "ஊர்க்கதை என்னத்துக்கு.... நம்மட விஷயத்துக்கு வருவம்.... நீ இனியும் காட்டுகைத்திரியாமல் உன்ரை கொப்பன்ரை தோட்டத்தை அடுத்த வரியத்தில் இருந்து குத்தகைக்குக் கொடுக்காமல் எடுத்துச் செய்.... கலியாணத்தை வாற தையிலே முடிக்க வேணும்...... நானும், தம்பி...... இனிக் கன காலத்திற்கு இருக்க மாட்டன்.. அதுக்கிடையிலே நாகம்மாவை உன்னட்டைப் பிடித்துக் கொடுத்திட்டால் எனக்கும் பிரச்சினை விட்டது.... நானும் சந்தோஷமாகக் கண்ணை மூடுவன்..."

பொன்னுக்கிழவரின் பேச்சு நாராசமாக நாகம்மாவின் காதுகளில் விழுந்தன.

"உந்த விசர்க் கதையளை விட்டிட்டு சாப்பிட வாருங்கோ....." என்று உள்ளேயிருந்து அவள் குரல் கொடுத்தாள். விருத்தாசலத்தின் முகம் கறுத்துச் சிறுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26.

இரண்டு நாட்கள் வழமை போலக் கழிந்தன. வாடிகளில் கருவாடுகளைச் சிப்பம் கட்டுகிறவேலை நடந்துகொண்டிருந்தது. அன்று வேலை முடிய வழமையிலும் பார்க்கச் சற்று நேரம் சென்றுவிட்டது. அதனால் நாகம்மா நல்ல தண்ணீர் அள்ளப் புறப்படச் சற்றுநேரமாகி விட்டது. குடத்தையும், பட்டையையும் எடுத்துக் கொண்டு அவள் புறப்பட்ட போது, வழமைபோல் பொன்னுக்கிழவர், "பொழுதுபட்டுப் போச்சுது, பின்ளை, கெதியா அள்ளிக் கொண்டுவா..." என்ற குரல் கொடுத்தாள்.

பிலோமினா அன்று தண்ணீர் அள்ளி வர மறுத்துவிட்டாள்.

தூரத்தில் மரியதாஸ் துவக்குடன் வருவது தெரிந்தது. துவக்கை வலது கையில் அலட்சியமாகப் பற்றியவாறு, கம்பீரமாக அவன் நடந்து வந்தான். அவளை அறியாமல் அவளது விழிகள் அவன் வந்த பாதையில் பதிந்தன. அவள் பார்ப்பதை மரியதாசும் கண்டிருக்க வேண்டும். அவன் கிணற்றடியை நோக்கி நடந்தான்.

நாகம்மாவிற்கு திக்கென்று இதயத்தில் ஏதோ தைத்தது. கலக்கமும் ஏற்பட்டது. 'இவருக்கு ஏன் நான் பயப்படவேண்டும். இவரால் என்ன செய்துவிட முடியும்?'

மரியதாஸ்கிணற்றடியில் தயங்கி நின்றான். அவனைக் கவனியாதவளைப் போல் நாகம்மா பட்டையைக் கிணற்றுள் விட்டு, நீரை அள்ளினாள். பட்டை மேலே வந்ததும், தண்ணீர் தேவை என்னும் பாவனையில் வாயில் கையைப் பதித்து மரியதாஸ் குனிந்து நின்றான்.

நாகம்மா இதனை எதிர்பார்க்கவில்லை. நெஞ்சு பட படக்க நீரை வார்த்து விட்டாள். அவளின் கரங்கள் மெதுவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுங்கியதால் பட்டையைவிட்டு நீர் வெளியே சிந்தியது. மரியதாஸ் அதனை உணர்ந்தான்.

"ஏன் நடுங்கிறியள்.... நான் என்ன பிடிச்சுத் தின்கிற மிருகமா..?" என்று கேட்டான்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள். தன்னுடைய பலவீனத்தை அவன் அறிந்து கொண்டதைக் காண அவளுக்கு வெட்கமாக இருந்தது. தண்ணீரை மீண்டும் அள்ளிக் கொண்டே, "நான், ஒன்றும் பயப்படவில்லை.." என்றாள். அவள் குனிந்து தண்ணீர் அள்ளும் அழகை மரியதாஸ் கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்.

"எவ்வளவு வாளிப்பான உடலழகு" என எண்ணிக் கொண்டான்.

"தண்ணி போதாதா? இன்னும் வேணுமா?" என்று கேட்டாள் நாகம்மா.

"போதும்....!"

"அப்ப ஏன் நிக்கிறியள்...?"

"நிக்கக் கூடாதா...? பொதுக் கிணறுதானே...?" என்று மெதுவாகச் சிரித்தான் மரியதாஸ்.

அவனுடைய ஆண்மையான பதிலை அவள் இரசித்தாகத் தெரிந்தது. அவள் வெட்கத்தோடு சிரித்துக் கொண்டாள். நீர் நிரம்பிய குடத்தை தூக்கி இடுப்பில் இருத்திக் கொண்டு, "அப்ப நல்லா நில்லுங்கள்..." என்று கூறி நடக்கத் தொடங்கினாள்.

அவள் இருதயம் ஏன் அப்படிப் படபடக்க வேண்டும்? என்றைக்குமில்லாதவாறு ஏன் அப்படிப் பொங்கி பிரவாகிக்க வேண்டும் ?

"நாகம்மா..." என்று மரியதாஸ் தன்னை அழைப்பதைக் கேட்டு, நாகம்மா விக்கித்தவளாய்த் திரும்பிப் பார்த்தாள். 'அவனுக்கு எவ்வளவு துணிச்சல்?'

"பட்டையை மறந்து போய்விட்டுப் போறியள்...." என்றவாறு கிணற்றுக் கட்டில் கிடந்த பட்டையைத் தூக்கி அவளிடம் நீட்டினான். வாங்கும்போது மரியதாஸின் கரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளின் கரத்தை மென்மையாகத் தீண்டியது. நாகம்மா ஒரு கணம் துடிதுடித்துப் போனாள். பிலோமினாவைச் செமியோன் தீண்டிய சம்பவம் அவளின் நினைவில் வந்தது. 'பிலோமினாவின் கையிலிருந்த மீனை வாங்கும் சாட்டில் அவளின்ரை விரலைத் தடவியவாறு செமியோன்....'

நாகம்மாவின் சிந்தனையை மரியதாஸ் கலைத்தான்.

"என்னிடம் வேலைக்கு வாரியளா.....?"

"அப்புவைக் கேளுங்கோ...." என்று கூறிவிட்டு, நாகம்மா நடக்கத் தொடங்கினாள்.

"எல்லாத்துக்கும் அப்புவையா கேட்க வேணும்....?" மரியதாஸ் குரல் கொடுத்தான்.

நாகம்மா விசுக்கெனத் திரும்பி, அவனைக் கருத்தோடு பார்த்தாள். குப்பென அவளின் முகம் சிவந்தது.

வெகுநேரமாக அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டு மரியதாஸ் நின்றிருந்தான்.

## 27.

அதிகாலைவேளை, செமியோனின் வள்ளங்களும், யூசுப் சம்மாட்டியாரின் கட்டுமரங்களும் கரைக்குத் திரும்பி விட்டன. மீன் எதுவும் பிடிபடவில்லை. பேதுரு திட்டிக் கொண்டிருந்தான்.

"என்ன மீன் பிடிப்பு....? மெனக்கெட்டு நடுக்கடலுக்குப் போய் இரவு முழுவதும் நித்திரை முழிச்சுப் பிடிச்சும், கால் வள்ளம் தானும் நிறையவில்லை... பேந்தேன் தொழில் செய்வான்...? கரைக்கு வாற குஞ்சு குறுமன் எல்லாத்தையும் கரை வலையில் மடக்கிப் பிடித்தால் கடலில் எங்கே மீன் இருக்கப் போகுது? உவன் மன்னார்ச் சம்மாட்டி வந்தான், கரைவலையோடு. அண்டைக்குத் தொட்ட சனி. உவன் இழுத்தெழுத்தித்துப் போடுறான்... குவியுது.." என்று பேதுரு பொருமினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இந்த முறை மரியதாசுக்கு வெகு சாதகமாகவே அமைந்து விட்டது. கடந்த பதினைந்து நாட்களுள் அவனது கரைவலை ஒரு போதும் நான்கு அந்தருக்குக் குறைய மீன் இழுத்தது கிடையாது. மரியதாஸ் அந்தக் கடற்கரையில் ஏனையோரின் பொறாமைக் குரியவனாக மாறிவிட்டான். மூன்று தடவைகள் அவனது தோணி சிப்பம் சிப்பமாக ஏற்றிய கருவாட்டோடு பட்டணம் போய்த் திரும்பி வந்தது.

செமியோனின் வள்ளங்களும், சிப்பங்களுடன் யாழ்ப்பாணம் போய் வந்த போதிலும் பிரயாசைக் குரிய ஆதாயம் கரைவலையோடு ஒப்பிடும்போது, மிகக் குறைவாகவே இருந்தது. அதற்காகச் செமியோன் கவலைப்பட்டவனாகத் தெரியவில்லை. மீன் பிடிப் பருவம் இன்னமும் தொடங்க வில்லை என்பது அவனது அபிப்பிராயம்.

அவன் கடந்த சில நாட்களாகச் சோர்ந்து காணப்பட்டான். அவனது இதயத்தின் ஒரு மூலை ஓயாமல் வலித்தது. ஆலடிவயிரவர் கோயிலில் இரவு முழுவதும் பிலோமினாவிற்காகக் காத்திருந்தது ஏமாற்றத்தோடு திரும்பியதிலிருந்து அவனைக் கவலை ஆட்கொண்டு விட்டது. அவள் வராமைக்குரிய காரணத்தை நாகம்மா மூலம் அவன் அறிந்திருந்த போதிலும், பிலோமினாவை ஒரு தடவையாவது சந்தித்து விட வேண்டுமென்ற ஆசை நாளாந்தம் பெருகி விசுவரூபம் எடுத்தது.

சூசைமுத்து வந்து விட்டான் என்ற செய்தி அவனுக்கு அவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக சூசைமுத்து மரியதாஸோடு நெருங்கிப் பழகுவதையும் அவதானிக்க நேர்ந்ததால் இனந் தெரியாத கலக்கம் ஏற்பட்டது.

பிலோமினாவை எப்படியாவது சந்தித்துவிட வேண்டும். எப்படி?

தூரத்தில் கடல்வெளியில் மீன் பிடிக்கும் பறவைகள் காற்றில் மிதப்பது தெரிந்தது. அடிவயிற்றில் வெண்மையும், இறகுகளில் பழுப்பும், கருமையும் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலாக்கள் (ஒருவகைப் பருந்து) அலையின் மேல் மீனைக் கொத்த வேகமாக இறங்குவதும், ஏமாற்றத்தோடு திரும்புவதுமாக அலைந்தன.

கடற்கரையில் கருவாடுகளைப் பிரட்டிக் காயப்போடுவதில் பலர் ஈடுபட்டிருந்தனர். காயப் போடும் மீனைக் கொத்துவதற்குப் பல காகங்கள் முயன்றன. அவற்றை நாகம்மா துரத்தினாள். நாம்மாவைக் கண்டதும் செமியோன் ஒரு முடிவுக்கு வந்தான். மெதுவாக எழுந்து அவளருகே சென்றான். வேறொருவரும் இல்லாதது பேசுவதற்கு வாய்ப்பாக அமைந்தது. நாகம்மா அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன அண்ணை.....?" என்று கேட்டுவிட்டு நாகம்மா புன்னகைத்தாள்.

விடயத்தை எப்படிக் கூறுவதென்று செமியோனுக்குப் புரியவில்லை. கடலைப் பார்த்தபடி கூறினான். "அவளோடு நான் ஒருக்காப் பேசவேணும் தக்கச்சி..."

நாகம்மா ஒரு கணம் மௌனமாக நின்றாள். மாபெரும் ஆடவனொருவன் அவளிடம் உதவிகேட்டு இரக்கின்றான். காதல் அவ்வளவு சக்தி வாய்ந்ததா? எதேச்சையாக அவள் மரியதாஸின் வாடியை நோக்கினாள். வாடி வாசலில் மரியதாஸ் நின்றிருப்பதும், அவன் கண்கள் தங்களையே பார்ப்பதையும் கண்டாள். இதயம் ஏனோ ஒரு தடவை அவளை அறியாமல் விரிந்து மலர்ந்தது.

"இண்டைக்குப் பின்னேரம் நல்ல தண்ணிக் கிணற்றடிக்கு வாருங்கோ..... அண்ணை. பிலோமினாவை நான் கூட்டிவாறன்..."

செமியோனின் முகம் மலர்ந்தது. திரும்பித் தனது வாடியை நோக்கி நடந்தான்.

நாகம்மா மரியதாஸின் வாடியைப் பார்த்தாள்.

அவள் பார்ப்பதை மரியதாஸ் கண்டிருக்க வேண்டும்.

எச்சிலைக் காறிக் கடலை நோக்கித் துப்பினான் மரியதாஸ். தனது முகத்திலே அவன் காறித் துப்பியது போல நாகம்மா துடிதுடித்துப் போனாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28.

அன்று மத்தியானம் ஒரு புதுமையான கதை அந்தக் கிராமத்தில் வேகமாகப் பரவியது. சிவசம்புப் பரியாரியின் மகள் அன்னத்துக்குப் பேய் பிடித்துவிட்டதாம். இதனை நம்ப முடியாமல் பொன்னுக்கிழவர் சிவசம்பு வீட்டிற்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்தார்.

"என்ன அப்பு, உண்மைதானா?.... அன்னம் எப்படி இருக்கிறாள்?" என்று ஆவலோடு விசாரித்தாள் நாகம்மா. அவளது தேகம் ஏனோ மெதுவாக நடுங்கியது.

"ஓமோம் பிள்ளை, பேய்தான் பிடிச்சிருக்கு. அது வடிவாத் தெரியுது. தலைவிரி கோலமாக இருக்கிறாள்; ஒருத்தரையும் அடையாளம் தெரியுதுமில்லை."

"என்ன நடந்ததாம்?"

"முந்தநாள் மாலை நல்லதண்ணி அள்ளிவரப் போனவளாம். தண்ணிப் பானையைக் கிணற்றடியில் போட்டு உடைச்சுப் போட்டு திகைப்புடன் தலைவிரி கோலமாக ஓடி வந்தாளாம். சிவசம்பு பதறிப்போய், என்ன நடந்தது என்று அவளிடம் கேட்ட போது, பயந்து பயந்து சொன்னாளாம்: சுடலைமடத்தில் ஒரு கறுத்த உருவம் நின்று ஆடியதாம்.... அது நிச்சயமாகச் சுடலை வயிரவராகத்தான் இருக்க வேண்டும். மாலைச் சாமத்தில் குமர்ப்பிள்ளை தண்ணி அள்ளப் போகக் கூடாதென்று சொல்லுவது என்ன பொய்யா......?" என்றார் பொன்னுக் கிழவர்.

நாகம்மா யோசித்தாள்.... "பிலோமினா கூட எதனையோ கண்டு பயந்தாளே. ஒரு வேளை அவளும் சுடலை வைரவரைத்தான் கண்டாளோ?"

வெகுநேரம் நாகம்மா திக் பிரமை பிடித்துப்போய் நின்றாள். உண்மையிலேயே பேயை அன்னம் கண்டிருப்பாளோ? இதெல்லாம் நம்பக்கூடியவைதானா? பிலோமினாவிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டால் உண்மை தெரியும். நேற்று அவள் எதனைக் கண்டு பயந்தாள் ?

பிலோமினாவிடம் பேசுவதற்கு வேறு விடயங்களும் இருக்கின்றன. இன்று பின்னேரம் செமியோன் அண்ணன், பிலோமினாவைச் சந்திப்பதற்காகக் கிணற்றடிக்கு ஆவலோடு வரப்போகின்றான். அன்னத்தை நினைத்ததும் கிணற்றடிக்குப் போவதற்குத் தயக்கமாக இருந்தது.

பிலோமினா வீட்டிற்கு அவள் போன போது, நல்ல வேளையாக அவள் மட்டுந்தானிருந்தாள்.

நாகம்மாவைக் கண்டதும் பிலோமினா சொன்னாள்:

"நானும் சுடலை வயிரவரைக் கண்டேனடி....." இதைக் கூறும்போது பிலோமினாவின் விழிகளில் பயத்தின் சாயல் விரிந்தது.

"நானும் அப்படித்தான் நினைச்சன். எப்படிக் கண்டாய்? எப்படி இருந்தது?"

சற்று நேரம் பிலோமினா பேசாதிருந்தாள். அவளுடைய கண்கள் கடற்கரைப் பக்கமாகப் பார்த்தன. தூரத்தில் தெரிந்த ஒற்றைப் பனையில் கூழைக்கடா ஒன்று சிறகுகளைக் கூப்பியவாறு அமர்ந்தது.

"ஒரு கரிய உருவம்...... மனிசரைப் போலத்தான்... ஆனா, உடுப்பொன்றும் இல்லாமல்... சுடலை மடத்தின் நடுவில் நின்றது...... நான் கத்தியதும் திடீரென மறைந்து விட்டுது.... அவ்வளவுதன்.... நாகம், உண்மையாகப் பேய் இருக்கா?" என்று பிலோமினா கேட்டாள்.

நாகம்மாவால் பதிலெதுவும் கூறமுடியவில்லை.

"எனக்குத் தெரியாதுடி... ஆனா சுடலை வயிரவர் பொல்லாதவரல்ல என்று அப்பு சொல்லுறவர்.... நீ ஒன்றுக்கும் பயப்படாதே..... நீ இனிமேல் கிணற்றடிப் பக்கம் போகமாட்டாய் போலிருக்கு....?"

"அந்தப் பக்கம் போகமாட்டன்..."

"அப்ப இண்டைக்கு வரமாட்டாய்?......" வராட்டி உனக்குத்தான் நஷ்டம்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனடி?...."

"அண்டைக்கு ஆலடியில் அவரைக் காக்க வைத்து விட்டு, நீ நல்லாப் போத்து மூடிக் கொண்டு நித்திரை கொண்டாய்.... அதைப்போல இண்டைக்கும் வராமல் இரு. அந்த விசர் மனிசன் கிணற்றடியில் உனக்காகக் காத்திருந்திட்டுப் போகட்டும்...."

பிலோமினா மகிழ்ச்சியோடு நாகத்தைக் கட்டிக் கொண்டாள்.

"என்னை ஏன் கட்டிப் பிடிக்கிறாய்?... போய் அந்த ஆளைக்......"

"போடி. நீ நல்லாக் கெட்டுப்போனாய்.... எல்லாம் அந்த மன்னார் சம்மாட்டி வந்ததன் பிறகுதான்...." என்று சிரித்தாள் பிலோமினா: "உண்மையா இண்டைக்கு வருவாராடி?"

"வாறது, வாராதது இருக்கட்டும். நீ இப்ப என்ன சொன்னனி?......" நாகம்மாவின் முகத்தில் மலர்ச்சி தெரிந்தது. உள்ளத்தில் விபரிக்க முடியாத களிப்பு. நாகம்மாவின் உள்ளத்தில் மரியதாசுக்கு ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தெரிந்தோ, தெரியாமலோ பிலோமினா சுட்டிக் காட்டிவிட்டாள். மனதில் இடங்கொண்டவனைப் பற்றிப் பிறர் கூறக் கேட்பதில் ஒருவகை இன்பம் இருக்கத்தான் செய்கின்றது.

வெளியே திரேசம்மாவும், சூசைமுத்துவும் வருவது தெரிந்ததும், இரு பெண்களும் தங்களுடைய பேச்சை நிறுத்திக் கொண்டார்கள்.

"என்ன தங்கச்சி திட்டம் போடுறியள்?" என்று நாகம்மாவைப் பார்த்துக் கேட்டான் சூசை.

"திட்டம் தான் அண்ணை. வெடியரசன் கோட்டையைப் பிடிக்கத் திட்டம் போடுறம்" என்று நாகம்மா சிரித்தாள்.

நாகம்மா புறப்படும்போது சூசைமுத்து சொன்னான்: "தங்கச்சி உன்ரை சிநேகிதிக்குக் கெதியில் சம்பந்தம் நடக்க இருக்குது...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடி இடித்தது. மின்னற் கொடியொன்று கிளை பரப்பி அழிந்தது.

## 29.

பிலோமினா ஏங்கிக் கிடந்த சந்திப்பு நிகழ்ந்தே விட்டது. செமியோனின் மார்பில் அவள் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதாள். செமியோனாலும் எதுவுமே பேசமுடியவில்லை. பிரிந்தவர்கள் ஒன்றுகூடிவிட்டால் வார்த்தைகளக்கு இடமேயில்லைத்தான்.

மேற்கே சூரியன் மறையும் நேரம். காற்றுப் பலமாக வீசிக்கொண்டிருந்தது. கிணற்றடியில் அவர்கள் மூவரைத் தவிர வேறு எவருமில்லை. சுடலை வைரவரின் பயத்தால் கிணற்றடிக்கு எவரும் வரவில்லை. பிலோமினாவையும்,செமியோனையும் பேசவிட்டு, சற்றுத் தள்ளி ஒரு மர மறைவில் நாகம்மா ஒதுங்கி நின்றாள். பிலோமினா அழுவது அவளுக்குக் கேட்டது. அழுவதற்கு இதுவா நேரம் என்ற நாகம்மா எண்ணிக் கொண்டாள்.

"என்னை இந்த முறை விட்டிட்டுப் போயிடாதையுங்க..... விட்டிட்டுப் போயிடாதையுங்க. உங்களோடை எங்கேயும் வரத் தயாராயிருக்கிறன். இவ்வளவு காலமும் பட்ட வேதனை போதும்.... என்னால் இனியும் உங்களைப் பிரிஞ்சிருக்க முடியாது" என்றபடி பிலோமினா அழுதாள்.

"அழாதை பிலோ....... அழாதே.... நானும் முடிவு செய்திட்டன். உன்னை ஆர் தடுத்தாலும் இந்த முறை இஞ்சை விட்டிட்டுப் போகமாட்டன்."

"அண்ணன் வந்திட்டான்..."

''தெரியும், பிலோ... எவன் தடுத்தாலும் உன்னை விட்டிட்டுப் போகமாட்டன். பிலோ, என் பிலோ... உன்னைப் பிரிந்து நான் போனபின்பு நடைப்பிணமாகத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே வாழ்ந்தன். இரவு வேளைகளில் சில நாட்கள் என்னை அறியாமல் வள்ளத்தை இத் தீவுப் பக்கம் செலுத்தி வருவன். ஏக்கத்தோடு இக்கரையைப் பார்த்து விட்டுத் திரும்பிப் போவன்.... என் இதயத்தில் உன்னைத் தவிர வேறொருத்திக்கு இடந்தர முடியவில்லை. எனக்கு, என் அம்மா கலியாணமும் பேசினா, நான் மறுத்திட்டன். அலுத்துப் போன அவ, நீ ஆரையாவது பார்த்து வைத்திருந்தால் கூட்டி வா. நான் மறுக்கவில்லை. மருமகளா ஏத்துக்கிறன் என்றா...." செமியோன் பேசிக்கொண்டே போனான். பிலோமினா உலகத்தை மறந்து கேட்டுக் கொண்டிருந்தாள்.

நேரம் செல்லச் செல்ல நாகம்மா பதறிக் கொண்டு நின்றாள். "யாராவது வந்து பார்த்துவிட்டால்.....?"

பயத்தோடு அடிக்கொரு தடவை சுடலை மடத்தையும் பார்த்துக்கொண்டாள். மாடுகள் சிலவும், குதிரைகள் இரண்டும் மேய்ந்து கொண்டு நின்றன. வெகு தூரத்தில் யாரோ வருவதும் தெரிந்தது.

"பிலோமினா, ஆரோ வருகினம்... வா... கெதியாய் வா...." என்றபடி நாகம்மா ஒதுங்கியிருந்த மரத்தடியை விட்டு வெளியே வந்தாள். செமியோனின் அணைப்பில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள் பிலோமினா.

காதலர்கள் ஒருவரை ஒருவர் பிரிய மனமின்றிப் பிரிந்தனர்.

தண்ணீர்க் குடங்களைத் தூக்கிக் கொண்டு இரு பெண்களும் குடிசைகளை நோக்கி விரைந்தனர். அவர்கள் போவதையே கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டு செமியோன் நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30.

நாகம்மாவின் குடிசை வாசலில், விருத்தாசலம் அவளை எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தான். வெளியே சென்ற பொன்னுக்கிழவர் இன்னமும் வீட்டிற்குத் திரும்பவில்லை. நாகம்மா தேநீரை ஊற்றி விருத்தாசலத்துக்குக் கொடுத்தாள். கோப்பையை வாங்கும்போது அவளைப் புதுமையாக ஏறிட்டு அவன் பார்த்தான். அந்தப் பார்வையைத் தாங்க முடியாமல் நாகம்மா உள்ளே செல்ல முயன்றாள்.

"நாகம்மா...." அவனது குரல் தடுத்தது.

"என்ன மச்சான்?...." வழமையான குரலில் அவள் கேட்க முயன்றாள். ஆனால், குரலில் ஏதோ கள்ளம் புகுந்ததைப் போல் அவளுக்கே பட்டது.

விருத்தாசலம் சற்று நேரம் போசாதிருந்தான். பிறகு சொன்னான்:

"ஊர் மிகவும் கெட்டுப் போச்சுது.... நீ கண்டபடி தனிய வெளியே திரிவது நல்லதல்ல. நாகம்மா கிணற்றடிக்குத் தனிய போகாதை......"

"சுடலை வயிரவர் பிடிச்சிடுவார் என்று பயப்படுகிறாயா மச்சான் ?" என்று கேட்டு விட்டுக் கலகலவெனச் சிரித்தாள். அவளுடைய சிரிப்பில் ஒருகணம் தன் வயமிழந்த விருத்தாசலம், மறுகணம் தன்னைச் சமாளித்துக் கொண்டான்.

"அதில் எனக்கு நம்பிக்கையில்லை..."

"அன்னத்தைப் பேய் பிடித்ததென்பது பொய்யா?"

"எனக்கது தெரியாது....... ஆனா,......"

"சுடலை மடத்தில அவள் கரிய உருவமொன்றைக் கண்டாளாமே? பிலோமினாவும் கண்டிருக்கிறாள்...."

"அது சண்முகமாக இருக்கும். அவனுக்கு அது ஒரு வியாதி...." என்று மிகவும் அமைதியாக விருத்தாசலம் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியும் இருக்குமோ?"

நாகம்மா திகைப்புடன் விருத்தாசலத்தைப் பார்த்தாள். அவன் படலைக்கு அப்பால் கண்களை மேயவிட்டபடி ஏதோ சிந்தனை வயப்பட்டவனாக இருந்தான். கடற்கரை வாடியில் விளக்குகள் மங்கலாக எரிந்தன.

"என்னுடைய குதிரையை யாழ்ப்பாணத்து ஆள் ஒருவன் வந்து விலைக்குக் கேட்டான்....."

"நல்ல விலை வந்தால் வித்திருக்கலாமே? காடெல்லாம் குதிரைதானே இருக்கு" என்றாள் அவள். விருட்டென விருத்தாசலம் திரும்பி அவளைப் பார்த்தான்.

"அதுக்கு நான் விஷம் வைப்பேனே தவிர, பிறரிடம் விற்கமாட்டன். எனக்குரிய ஒன்றை வேறொருவன் எடுத்துக் செல்வதை ஒருபோதும் நான் பார்த்துக் கொண்டிருக்கமாட்டன்..."

அவன் முகம் ஏன் திடீரெனக் கறுத்தது? அந்த முகத்தில் ஏன் இவ்வளவு கடுமை படர்ந்தது?

நாகம்மாவின் இதயத்தில் கலக்கம் கிளைவிட்டது. விருத்தாசலம் கேட்டாள்: "நாகம்மா என்னை உனக்கு பிடிக்கவில்லையா?"

அவள் திகைத்து போனாள். அவள் இதற்கு என்ன பதிலைக் கூறுவாள். இப்படி ஒரு சிக்கலான வினாவை அவள் ஒருபோதும் தன் மனதில் எழுப்பியதில்லை, அவளுக்கு அவனைப் பிடிக்கும்.

'பிலோமினாவுக்குச் செமியோனைப் பிடிப்பதைப் போலவா?'

'இல்லை ! இல்லை ! அப்படியில்லை' என்று உள்ளம் கூறியது.

"இந்த வீட்டில் என் மனைவி வளர்கிறாள் என்ற நம்பிக்கையில் தான் நான் இவ்வளவு காலமும் இருந்தன்... இப்பவும் இருக்கிறன்.... சிறு வயதிலிருந்தே எனக்காகத்தான் நீ என்று முடிவான ஒன்றை இனி எவராலும் மாற்ற முடியாது... நாகம்மா, உன்னைத் தவிர வேறொருத்தியை என் மனைவியாக நினைக்கக்கூட என்னால் முடியவில்லை. ஆனா, சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களாக ஏதோ ஒன்று என்னை எச்சரிக்கிறது... உன்னை நான் இழந்திடுவேனோ என்ற பயம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது..... ஏமாந்து போயிடுவேனோ என்று....." விருத்தாசலம் பேசிக் கொண்டே போனான்.

காட்டுக் குதிரையில் ஏறி, கூர்த்தடியால் முயல்வேட்டை ஆடித் திரிகின்ற அவனால் இப்படியும் பேச முடியுமா? ஒரு ஆணுக்குரிய மெல்லுணர்வுகள் இந்த வேட்டைக்காரனுக்கும் இருக்கின்றதே?

நாகம்மா வாயடைத்துப்போய் நின்றாள். அவள் இவற்றுக்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

அவள் உள்ளத்தில் கலக்கம். தெளிந்த நீர்தேக்கத்தில் கல் வீசப்பட்டு விட்டது.

கள்ளம் புகுந்த உள்ளம் அவளுடையது.

"உன்னைக் குழப்பிவிட்டேனா, நாகம்மா? என் மனதில் பட்டதைச் சொன்னேன். நீ யோசித்து முடிவு சொல்... விருத்தாசலம் எழுந்தான். வேப்பமரத்தின் கீழ் நின்று குதிரையைப் பற்றி ஏறினான்.

முன்னிலவு காலிக்கும் வேளையிலே காட்டுப் பக்கமாக விருத்தாசலம் குதிரையை வேகமாக விரட்டிச் செல்வது தெரிந்தது.

## 31.

ஆலடி வைரவர் கோவிலின் முன்றலிலிருந்து உடுக்கின் ஒலி இரவின் அமைதியைக் குலைத்தபடி எழுந்து பரவியது. குடிசைக்குள் படுத்திருந்த பிலோமினாவின் காதுகளில் அவ்வொலி நாராசமாக நுழைந்தது. நித்திரையின்றி அவள் தவித்தாள். நித்திரையின்மைக்கு இரு காரணங்கள்: ஒன்று உடுக்கின் ஒலி, மற்றது செமியோனின் நினைவு. ஏனோ இன்று அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கின்றது. அவன், அவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்கவில்லை. அவனுடைய அன்பில் கடுகளவேனும் குறையவில்லை. "பிலோ... என் பிலோ...." என்று அவன் ஆசை பொங்க அழைத்து, கன்னத்தில் கன்னத்தைப் பதித்த இனிய நினைவு.

வானத்தில் நிலவு பூரணமாக ஒளி வீசிக்கொண்டிருந்தது. பிலோமினா திரும்பிப்படுத்தாள். பனை மட்டைகளால் வரியப்பட்ட சுவர்த் தடுப்பிற்கு அப்பால் குடிசையின் பின் புறமாக வெண்மணல் நிலவு ஒளியில் ஜொலிப்பது நன்கு தெரிந்தது. அதற்கும் அப்பால் கரிய வடிவங்களாக உயர்ந்து நிற்கும் பனை மரங்களும் தெரிந்தன.

உடுக்கின் ஒலி காற்றில் பரவி ஊரெங்கும் நிறைந்தது. அன்னத்திற்குப் பேய் ஓட்டுகிறார்கள் என்ற நினைவே பிலோமினாவுக்குப் பயத்தை ஊட்டியது. அன்னம் கண்ட அதே உருவத்தை அவளும் கண்டிருக்கின்றாள். அவளையும் பேய் பிடிக்குமோ? இதயப் பலமில்லாதவர்களைத்தான் பேய் பிடிக்குமென பலர் கூறக் கேட்டிருக்கின்றாள். நாகம்மா அன்று இல்லாதிருந்தால் ஒருவேளை அவளையும் பேய் பிடித்திருக்கலாம்.

நாய் ஒன்று ஊளையிட்டது. நிசப்தமான அந்த இரவின் மோனத்தில் அந்த நாயின் ஊளை ஏற்றதாக இல்லை. மெல்லிய காற்று குளிர் நிறைந்ததாக வீசியது. ஆனால் பிலோமினாவுக்கு வியர்த்துக் கொட்டியது. பனை மட்டை நீக்கலூடாக வெளியே பார்க்கப் பயந்தவளாக மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டாள்.

உடுக்கின் ஒலி இடைவிடாது கேட்டு கொண்டேயிருந்தது. காய்ந்த பனை ஓலைகள் சரசரக்கின்ற ஒலி இருந்தாற் போல எழுந்தது. யாரோ பனையோலையை மிதிப்பது போன்ற சலசலப்பு. திடுக்கிட்டுப் போன பிலோமினா திரும்பிப் பார்த்தாள். குடிசையின் பின் முற்றத்தில் ஒருவன் நிற்பது தெளிவாகத் தெரிந்தது. யார் அது?

பிலோமினாவால் சில கணங்கள் பேசவேமுடியவில்லை. கத்துவதற்கு வாய் திறந்தாள். தொண்டைக் குழியிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல் வர மறுத்தது. மிகச் சிரமத்தோடு, "... ஐயோ ஐயோ அம்மா... அம்மோய்.... ஐயோ..." என்று வீரிட்டுக் கத்தினாள். அவளுடைய சத்தத்தைக் கேட்டு அந்த உருவம் திடீரென ஓடி மறைந்தது.

திரேசம்மா துடித்துப் பதைத்து எழுந்து ஓடி வந்தாள். சவரிமுத்துவும் எழுந்து விட்டான்.

"என்னடி?... என்ன பிள்ளை?.... என்ன...?"

பிலோமினாவால் எதுவுமே பேசமுடியவில்லை. அவள் உடல் வியர்வையால் குளிப்பாட்டப்பட்டிருந்தது. தாயைக் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்.

## 32.

குட்டைக் காடுகள் நிலவில் குளித்துக்கொண்டிருந்தன. குதிரையில் விருத்தாசலம் தன் வசம் இழந்து அமர்ந்திருந்தான். அவன் கண் முன்னால் திட்டுத் திட்டாக குட்டைக் காடுகளே பரந்து கிடந்தன. தூரத்தில் காட்டுக் குதிரையொன்று கனைத்தபடி பொட்டல் வெளியூடாகப் பாய்ந்தோடியது. இரைதேடிப் புறப்பட்ட நரி ஒன்று, காட்டு முயல் ஒன்றை வாயில் கவ்வியபடி விருத்தாசலத்தின் குதிரையைக் கண்டு வெருண்டு ஓடியது.

இவற்றையெல்லாம் கவனிக்கும் நிலையில் அவனில்லை. காற்று வேகமாக வீசும்போது, கடல் குமுறிப் பொங்குவதை அவன் பல தடவைகள் கண்டிருக்கின்றான். இன்று அதனை உணர்ந்தான். பிழையாக நடந்து கொண்டேனா? நாகம்மாவிடம் பேசக் கூடாதவற்றை பேசிவிட்டேனா? அவள் என்னைப் பற்றி என்ன நினைப்பாள்? இது வரைக் காலமும் என்னைப் பற்றி வைத்திருந்த அபிப்பிராயத்தை மாற்றியிருப்பாளோ?

அவளை இழந்து விடுவேனோ என்ற பயம் அவனுக்கு ஏற்பட்டு விட்டது. நாகம்மா அவனுக்காக வளர்பவள். இன்னொருவன் அந்தப் பாக்கியத்தை பறித்துச் செல்ல அவன் ஒருபோதும் அனுமதிக்கமாட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை அறியாமல் அவனது கரம் கூர்த்தடியை வலிமையாகப் பற்றியது.

குளிர்காற்று வீசியது. குட்டைக்காடு சலசலத்தது. "......க்.....க்வாக்....க்.. வாக்..." என்ற ஒலியும், படபடவெனச் சிறகடிக்கும் ஒலியும் எழுந்தது. விருத்தாசலம் திடுக்கிட்டுப் பார்த்தான்.

தன் வசமிழந்து, தான் வெகுதூரம் சென்று விட்டதை உணர்ந்தான். நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. நள்ளிரவில், நடுக்காட்டில் அவன் தனியாக இருக்கின்றான். அதற்காக அவன் பயப்படவில்லை. அவனது நெஞ்சிலே உரமும், கரத்திலே கூர்த்தடியும் இருக்கும் வரை அவன் எவருக்குமே பயப்பட மாட்டான்.

அதோ கௌத்தி ஓடையும், அதனருகே ஏகாங்கியாக வளர்ந்திருக்கும் ஒற்றைப் பனையும் தெரிகின்றன. அந்த ஒற்றைப் பனை மட்டை ஒன்றில் வெண் பஞ்சுப் பொதிகளாக இரு கூழைக்கடாக்கள் அமர்ந்திருந்தன. அவை தாம் சற்று முன் சிறகடித்து ஒலியிட்டன.

முன்பு அவனை ஏமாற்றிய அதே கூழைக்கடாக்கள் காடுமேடெல்லாம் அவனை அலைக்கழித்து, நாகம்மாவின் முன் வெறுங்கையோடு செல்ல வைத்த அதே கூழைக்கடாக்கள். அவற்றை இன்று அவன் விடப்போவதில்லை. 'அட, விருத்தாசலம், உன்னை ஏமாற்றிய அவற்றை இன்று நீ வேட்டையாடாமல் விடக்கூடாது' என்று உள் மனம் தூண்டியது.

வேட்டையின் வெறியும் பிடிவாதமும் விருத்தாசலத்தை ஆட்கொண்டன. குதிரையில் அமர்ந்த படி நிமிர்ந்து கொண்டான். பனையில் இருந்து அவற்றை கிளப்பி, குட்டைக் காட்டு மரமொன்றில் தங்கவைக்கவேண்டுமெனத் தீர்மானித்தான். கௌத்தி ஓடையைக் கடந்து கரையேறினான். ஒற்றைப்பனையின் அருகே குதிரையை மெதுவாக நடத்திச் சென்றான்.

வாயில் இரு கரங்களையும் குவித்து "கூய்... சூய்...." என்று திடீரெனக் கூக்குரலிட்டான். கூழைக்கடாக்கள் விர்ரென வானில் கிளம்பின. பனையை ஒருதடவை வலம் வந்துவிட்டு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லைக்கழிப்புறமாக பறக்கத் தொடங்கின. பயமடைந்த அப்பறவைகளின் 'க்வாக்' என்ற ஒலியும் படபடவெனச் சிறகடிப் பொலிவும் அந்த இரவின் அமைதியைக் குலைத்தன.

விருத்தாசலம் தன் குதிரையைத் தட்டிவிட்டான். கூழைக்கடாக்கள் அவன் எதிர்பார்த்ததைப்போல வெகுதூரம் பறக்கவில்லை. வெல்லைக்கழியும், பெரிய குளமும் இணைகின்ற ஒடுங்கிய நீர்க்காட்டின் குட்டை மரமொன்றின் உச்சியில் இறங்கி அமர்ந்தன. பயத்தினால் சுற்றுமுற்றும் தலையை நீட்டிப் பார்த்த அவை, அபாயம் எதுவுமில்லை என்ற முடிவுடன் அமைதியடைந்து, தம் தலையை இறகினுள் செருகிக்கொண்டு உறங்கத் தொடங்கின.

விருத்தாசலத்தின் குறி தவறவில்லை. விர்ரென அவன் கரத்திலிருந்து புறப்பட்ட கூர்த்தடி சதக்கென கூழைக்கடாவின் மார்ப்பில் பாய்ந்தது. அப்படியொரு மரண ஒலியை அவன் எப்போதும் கேட்கவில்லை. கூர்த்தடி பாய்ந்த பறவை விழுந்தது. குட்டைக் காட்டிடையே புகுந்து கூழைக்கடாவை ஆசையோடு அவன் தூக்கிக் கொண்டான். இப்படி ஒரு பாரமா?

இணையைப் பிரிந்த மற்றப் பறவையின் அலறல் வானில் எழுந்தது. அதில் எல்லையில்லாத சோகம் தொனித்தது. நீண்ட நேரம் ஓலமிட்டபடி கூழைக்கடா குட்டைக்காட்டையும், மரத்தையும் சுழன்று பறந்தது. பின் தென் புறமாக பறந்து சென்றது. நிலவொளியில் வெண்பஞ்சு மேகமொன்று அழுதபடி விரைவதை வேதனையோடு விருத்தாசலம் பார்த்துக் கொண்டு நின்றான்.

அவன் கையில் பிடித்திருந்த கூழைக்கடாவின் உடல் பெரும் சுமையாகக் கனத்தது.

வானில் நிலவு சற்று மேற்குப் புறமாகச் சரிந்திருந்தது. நிலவைச் சுற்றி பரிவட்டம் படர்ந்திருந்தது. விருத்தாசலம் ஏதோ நினைவு வந்தவனாக குதிரையில் தாவி ஏறினான். குதிரையை விரட்டவில்லை. அதன் போக்கிலே நடக்க விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரை கனைத்தபடி ஓரிடத்தில் வந்து நின்றது. சுய நினைவு வந்தவனாக விருத்தாசலம் கண்களைத் திறந்து பார்த்தான். நல்ல தண்ணீர் கிணற்றடியில் குதிரை நின்றது. நின்றதோடு, கிணற்றடியில் தேங்கி நின்ற நீரைக் குடிக்கவும் முயன்றது. அவன் குதிரையை விட்டு கீழே குதித்து கிணற்றுக் கட்டில் அமர்ந்து கொண்டான்.

நாகம்மாவின் நினைவே விருத்தாசலத்தின் மனதில் மேலோங்கி நின்றது.

தூரத்தில் சுடலை மங்கலாகத் தெரிந்தது. ஆந்தை ஒன்று இரவின் அமைதியைக் குலைத்தபடி அலறியது. நாய்கள் சில குரைத்தன. விருத்தாசலம் அந்தத் திசையில் கண்களைத் திருப்பினான். ஒரு கரிய உருவம் குடிமனைப் பகுதியிலிருந்து ஓடி வருவது தெரிந்தது. வியப்புடன் அவன் விருட்டென எழுந்து நின்றான். இந்த வேளையில் யார் ஓடி வருகின்றார்கள்?

விருத்தாசலம் மரமொன்றுடன் ஒட்டி நின்றான். ஓடி வந்த உருவம் கிணற்றடியை அண்மித்தபோது யாரென்பதை விருத்தாசலம் அனுமானித்துக் கொண்டான்.

'சண்முகம்.... சுடலைச் சண்முகம் தான்....!'

குறுக்கே பாய்ந்து சண்முகத்தை எட்டிப் பற்றினான் விருத்தாசலம். இதனை எதிர்பாராத சண்முகம் "ஐயோ..." என்று அலறினான்.

"டேய்.... டேய்...... சண்முகம் ! எங்கேயிருந்து இந்த நேரத்தில் ஓடி வாராய்?"

சண்முகத்தால் எதுவுமே பேசமுடியவில்லை. பேயறைந்தவன் போல மலங்க மலங்க விழித்தான். அவனது உடலும் நடுங்கியது. விருத்தாசலம் அவனைப் பலமாக உலுக்கினான்.

"டேய்.... டேய்..... சொல்லடா சண்முகம்! ......" நீண்ட நேர உலுப்புதலின் பின்பே சண்முகம் வாய் திறந்தான்.

"உதார் ...... தம்பியோ?.... நீர் எங்கை இங்கை வந்தீர் ? வேட்டைக்கு வந்தீரா?" சண்முகத்தின் உடல் வியர்த்துக் கொட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ எங்கையிருந்து ஓடி வாறாய்?... அதைச் சொல்லு" என்று கடுமையாக விருத்தாசலம் கேட்டான்.

மௌனம்! எதுவித கதையுமில்லை.

அவன் எதையோ மறைக்க முயல்கின்றான் என்பது விருத்தாசலத்திற்குத் தெளிவாகத் தெரிந்தது. அவனோடு இனிப் பேசுவதில் பயனில்லை என்பதை உணர்ந்த விருத்தாசலம் குதிரையில் தாவி ஏறினான்.

அவன் கூழைக்கடாவுடன் பொன்னுக்கிழவர் வீட்டிற்குள் நுழைந்தபோது பொழுது விடிந்திருந்தது.

## 33.

கடல்நீரைக் கிழித்தபடி செமியோனின் யந்திரப்படகு கரையை நோக்கி விரைந்து வந்தது. அதனைச் செலுத்தி வந்த பேதுரு, வழக்கத்திலும் பார்க்க வேகமாக விரைந்து வருவதைச் செமியோன் கண்டான். ஒருவகைப் பதற்றம் அந்த வள்ளத்தில் காணப்படுவதையும் அனுமானித்தான்.

"மீன் வாய்க்கவில்லை போலிருக்குது" என்றான் செபஸ்தியான்.

"அதுக்கு இப்படியா வாறது.... அங்கே பார் செபஸ்தி, அவங்கள் இப்பதான் கரைவலையை வலிக்கத் தொடங்கி இருக்காங்கள்.... இவன் வாற வேகத்தில் மடியில் மோதிடுவான் போலிருக்கு."

செமியோன் எதிர்ப்பார்த்ததைப் போலவே கரைவலை மடியை நோக்கியே வள்ளம் விரைந்து வந்தது. பேதுரு கரைவலையைக் காணவில்லை என்பது நன்கு புரிந்தது.

மரியதாஸின் வாடியிலும் பரபரப்பு எழுந்தது. செமியோனின் வள்ளம் தெறிகெட்ட குதிரையாகக் கரைவலைப் பரப்பினுள் புகப்போவதை முதலில் மன்றாடி இராமசாமிதான் கண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய்.... டேய்... கூய்..... வலை..... வலை....."

கடற்கரையில் ஏற்பட்ட பரபரப்பைப் பேதுரு கண்டான். நிலைமையையும் உடன் புரிந்து கொண்டான். படகிலிருந்து தொழிலாளர்களும் கூச்சலிட்டனர். பேதுரு மலைப்புடன் படகின் வேகத்தை குறைத்து இலாவகமாக வள்ளத்தைத் திருப்ப முயன்றான்; முடியவில்லை. கரைவலை மடியில் வேகமாக மோதிய படகு, வலையின் மடியை கிழித்துத் தள்ளியபடி முன்னால் பாய்ந்தது.

கரைவலை மடி பிளந்ததால் விடுதலை பெற்ற பாரைமீன் திரள், அலையின் மீது கூட்டமாகத் தாவிச் செல்வதையும் கண்டனர். அத்துடன் வள்ளத்தின் மோதுதலால் திசைமாறிய கரைவலை ஒரு புறமாகக் கெளித்து, அலையின் மீது தலைகளை நீட்டியபடி கிடந்த முருகைக் கற்பார்களுள் சிக்கிக் கொள்வதையும் கண்டனர். விபத்தின் நஷ்டம் அதிகம் தான்.

மரியதாஸ் வெறிப்பிடித்தவனைப் போல் கூச்சலிட்டான்.

"டேய்... செமியோன், நீ திட்டமிட்டபடி என்ரை தொழிலை நாசமாக்கிட்டே.... இதுக்கு நான் சும்மா விடமாட்டன்...."

"தற்செயலாக நடந்ததுக்கு வீணாக என் மேல் பழியைப் போடாதை, மரியதாஸ். கரைவலை மிதப்பை அவன் கண்டிருக்க மாட்டான். இதனால் உனக்கு எவ்வளவு நஷ்டமோ அதை நான் பொறுக்கிறன்..." என்றான் செமியோன்.

"உன்ரை பிச்சைப் பணம் ஆருக்கடா வேண்டும்?"

மரியதாசைச் சமாதானப் படுத்த பலர் முயன்றனர். செமியோன் பொறுமையை இழக்காமல் நின்றான். பேதுரு படகைக் கரைசேர்த்தான்.

பேதுருவும் ஏனையோரும் படகை விட்டிறங்கித் தலையைக் குனிந்த படி கரைக்கு வந்தனர்.

"டேய், பேதுரு, உனக்னென்ன வெறியா?..." என்று கேட்டான் மரியதாஸ்.

பேதுரு பேசாமல் நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கரைவலையை நாங்க காணல்லை" என்றான் செபமாலை.

"ஏன்ரா இப்படி விசரர் மாதிரி போர்ட்டைக் கொண்டு வந்தியள்?"

"ராத்திரி படுத்த எங்கட வழிச்சல் துலைகளைக் காணவில்லை. யாரோ அறுத்தெடுத்துக் கொண்டு போயிட்டாங்கள். அதனால..... " என்று கலங்கினான், பேதுரு. கடலில் வலைகளைப் படுத்து விட்டு, ஒரு முனையை யந்திரப்படகின் அணியத்தில் இணைத்து விட்டு அயர்ந்து விட்டனர். விடிகாலை வலையை வலிக்கப் பார்த்தபோது அணியத்திலிணைத்த நுனியிலிருந்து ஐம்பது யார் வலை மட்டுமே இருந்தது; மிகுதி நானூறு யார் வலையை எவனோ துண்டித்துக் களவாடிச் சென்று விட்டான்.

வலைக்களவு அசாதாரண நிகழ்ச்சியல்ல. செமியோனுக்கு இது பெரும் இழப்பு.

காலைக்கறிக்கு இலவசமாக மீன் பெற்றுச் செல்ல விதானையார் கணபதிப் பிள்ளை கலவரத்தைப் புரிந்து கொண்டார்.

"நீங்க இப்படி ஒவ்வொருநாளும் சண்டை பிடித்தால், சொல்லிப் போட்டன்.... இங்கை ஒருத்தரையும் மீன்பிடிக்க விடமாட்டன்.... டி. ஆர். ஓ. விட்டைச் சொல்லி, உங்கடை வாடிகளைக் கழட்டிக் கொண்டு போகச் செய்துபோடுவன்" என்று சத்தம் போட்டுத் தனது அதிகாரத்தை நிலை நாட்டினார்.

மரியதாஸுக்கு ஏற்பட்ட நஷ்டத்தையும் விதானையார் தீர்த்து வைத்தார்.

"மரியதாஸுக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்கு நீ செமியோன், ஐந்நூறு கொடுத்திடு..."

செமியோன் மறுப்புக் கூறாமல் ஒப்புக் கொண்டான்.

## 34.

மரியதாஸ் கைகளை தலைக்குகீழ் ஆதாரமாக வைத்துக் கொண்டு நிமிர்ந்து படுத்திருந்தான். மேற்கு வானில் சூரியன் சாய்ந்து கொண்டிருந்தான். கடற்கரையில் கரைவலையில் ஏற்பட்ட பழுதுகளைத் தொழிலாளர் திருத்திக் கொண்டிருந்தனர். வாடிக்குள் சிப்பம் சிப்பமாகக் கட்டி கருவாடு அடுக்கி வைக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன கடும் யோசனை போல இருக்கு?..." என்று கேட்டபடி சூசைமுத்து வாடிக்குள் புகுந்து பக்கீசுப் பெட்டியொன்றில் அமர்ந்து கொண்டான்: "என்ன நான் கேள்விப்பட்டது மெய்தானா? காலமை செமியோன்ரை வள்ளம் கரை வலையைப் பிய்ச்சு எறிஞ்சிட்டுதாமே ?..... செமியோன் இப்படிப்பட்டவன் தான். மற்றவை நல்லா இருக்கிறதைப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டான். திட்டமிட்டுச் செய்து போட்டு பாவிபோல நடிப்பான்."

"நானும் அப்படித்தான் நினைச்சன்... இல்லாவிட்டால் பட்டப் பகலில் வலை கண்ணுக்குத் தெரியாமல் போனதோ?"

"இப்படிப்பட்டவன் இனிமேல் வாடிக்கு நெருப்பு வைக்கவும் தயங்கமாட்டான். எதுக்கும் நீங்கள் இனி மேல் கவனமாக இருக்க வேணும்"..... என்றான் சூசை. மரியதாஸ் வாடிக்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கருவாட்டுச் சிப்பங்களை ஒரு தடவை பார்த்தான். பின் சூசையையும் ஏறிட்டுப் பார்த்தான்.

"அப்படிச் செய்ய அவராலை முடியுமோ ?...."

சூசை முத்து தொடர்ந்தான்: "பொறாமை ஆரை விட்டது?... உமக்கு நல்லா மீன்படுகிறதைக் காணக் காண உவங்களுக்கு ஆத்திரம்...."

கூழைக்கடா ஒன்று குரல் எழுப்பியவாறு விரைந்தது.

"வேட்டைக்குப் போவோமா?..." என்று கேட்டான் மரியதாஸ்.

மரியதாஸ் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டான். சூசையும் தொடர்ந்தான். இரவு இன்னமும் படரத் தொடங்கவில்லை.

பொன்னுக்கிழவரின் குடிசையைத் தாண்டும் போது மரியதாஸின் கண்கள் குடிசைப் பக்கம் திரும்பின. முற்றத்து வேப்ப மரத்தின் கீழ் நாகம்மா நின்றிருந்தாள். அவளும் ஆவலோடு அவனைப் பார்த்தாள். மரியதாஸ் மிகக் கஷ்டப்பட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு நடந்தான்.

"இதுதான் என்ரை வீடு.... நீங்க ஒருக்கா வந்திட்டுத்தான் போக வேணும்..." சூசைமுத்துவின் அழைப்பைத் தட்ட முடியாத மரியதாஸ் அவனோடு உள்ளே நுழைந்தான். வாசலில் நின்றிருந்த பிலோமினா இவர்கள் வருவதைக் கண்டு உள்ளே போனாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதுதான் என்ரை தங்கச்சி, பிலோமினா..." என்று சூசை அறிமுகப்படுத்துவது பிலோமினா காதுகளில் விழுந்தது. அவள் வெறுப்புடன் உள்ளே சென்று மறைந்து கொண்டாள்.

மரியதாஸுக்கு அங்கு நல் வரவேற்புக் கிடைத்தது. வெகு நேரம் அவன் அங்கு பேசிக் கொண்டிருந்தான்.

சூசைமுத்தோடு மரியதாஸைப் பார்த்த உடனேயே நாகம்மாவிற்கு பகீர் என்றது. அவன் தன்னைக் கண்டதும், முகத்தைத் திருப்பிக் கொண்டு சவரிமுத்துவின் வீட்டினுள் நுழைந்ததும், அந்தப் பேதை இடிந்து போனாள். ஆயிரமாயிரம் கற்பனைகளை அவள் தன்னுள் உருவாக்கிக் கொண்டாள்.

## 35.

அன்றிரவு இரண்டு பெண்கள் உறங்கவில்லை. கடலலைகள் கடற்கரையில் மட்டும் மோதவில்லை. பிலோமினா எவ்வளவோ முயன்று கண்களை மூடத் தெண்டித்தாள். உள்ளம் உறங்கினால் தானே? மரியதாஸ் சென்றதன் பின் அவள் தாயோடு சண்டை பிடித்தாள்.

"கண்டவங்களை எல்லாம் இங்கை ஏன் கூட்டி வருவான்....?"

"கூட்டி வந்தால் என்னடி?....கொண்ணனுக்குத் தெரியாதது உனக்குத் தெரியுமாக்கும்?..." என்று திரேசம்மா கத்தினாள். தாயோடு வாக்குவாதப்படுவதால் பயனில்லை என்பது பிலோமினாவுக்குத் தெரிந்த விஷயம் தானே !

நடுச்சாமம் அளவில் சூசைமுத்து முழு வெறியோடு வீட்டிற்குத் திரும்பி வந்தான். சாப்பிடாமல் யாரையோ ஏசியவாறு படுத்து விட்டான். அவன் படுத்த சிறிது நேரத்தில் படலையடியில் நின்று யாரோ கூப்பிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சவரிமுத்து.... சவரிமுத்து...."

இதை முதலில் கேட்டவள் பிலோமினா தான். தாயையும், தகப்பனையும் எழுப்பி விட்டாள். திரேசம்மா கை விளக்கைத் தூக்கிக் கொண்டு முன்னே வர, "உதார், இந்த நேரத்தில?" என்றவாறு சவரிமுத்து பின்தொடர்ந்து வந்தான்.

"அது நான்.... விதானையார்...." என்று படலையடியிலிருந்து பதில் வந்தது.

"விதானையாரோ....?" என்றபடி சவரிமுத்து படலையை அவிழ்த்தான்.

"சூசைமுத்து நிக்கிறானோ..?" என்று விதானையார் கேட்டார்.

"ஓமோம்..... படுத்திருக்கிறான்... என்ன சங்கதி விதானையார்..... நடுச் சாமத்தில வந்து நிக்கிறியள்?....." என்று கலக்கத்தோடு திரேசம்மா கேட்டாள்.

விதானையாரோடு கூட வந்தவர்கள் வீட்டிற்குள் நுழைந்தார்கள். பிலோமினா பயத்தோடு ஒதுங்கிக் கொண்டாள். சூசைமுத்தைத் தட்டி எழுப்ப முயன்றனர். அவன் வெறியில் "யாரடா அது....?" என்ற கேட்டபடி மறுபக்கம் பிரண்டு படுத்தான்.

"ஐயோ... என்ர மகனைப் பிடிக்கிறாங்களே...." என்று இருந்தாற்போல திரேசம்மா ஒப்பாரி வைத்தாள். பிலோமினா விக்கித்துப் போய் வெளியே ஓடி வந்தாள்.

"ஏனணை இப்ப ஒப்பாரி வைக்கிறாய்?... நாங்கள் என்ன செய்யிறது... யாழ்ப்பாணத்தில இருந்து பொலிஸ் தந்தியில செய்தி அனுப்பியிருக்கு.... டி. ஆர். ஓ. க்கு. உன்ரைமோன் ஒரு களவு கேசில சம்பந்தப்பட்டிருகிறானாம். அவனைப் பிடிச்சு அனுப்பச் சொல்லி எங்களுக்கு உத்தரவு..." என்றார் விதானையார்.

"ஐயோ...... என்ரை பிள்ளை, சோலி சுரட்டுக்குப் போகாதது விதானையார்.." என்று அழுதாள் திரேசம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூசைமுத்தைப் படுக்கையில் இருந்து கைவாராகத் தூக்கி வந்தனர். அவனுக்கு இன்னமும் வெறி தீரவில்லை. பிலோமினாவின் விழிகள் கலங்கின.

திரேசம்மா பெருங் குரலில் ஒப்பாரி வைத்தாள். மண் அள்ளிப் போட்டு விதானையாரைத் திட்டினாள். அவள் போட்ட கூச்சலில் பொன்னுக்கிழவர் உட்பட அயலே கூடிவிட்டது.

"இப்பிடித்தான் இருக்க வேணும் என்று எனக்கு எப்பவோ தெரியும்...."

"இல்லாட்டில் இவனுக்கு இவ்வளவு காசேது....?"

"கொள்ளை அடிச்சவனாம்....."

"ஐஞ்சாறு லட்சம் தேறுமாம்....."

"பிலோமினா வெளியே வர வெட்கப்பட்டு உள்ளே இருந்து அழுதாள்.

## 36.

மரியதாஸின் மனம் குழம்பித் தவித்தது. வெகுநேரம் கடலைப் பார்த்தபடி நின்றான். பின் ஏதோ நினைவு வந்தவனாகத் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு கௌத்தி ஒடைப்பக்கமாக நடக்கத் தொடங்கினான்.

"ராவைக்கு கூழைக்கடா....!" என்றான் இஸ்மாயில்.

கடற்கரையை விட்டு, வடலித்தோப்புக்குள் இறங்கியபோது, தண்ணீர் அள்ளுவதற்காகச் சற்று தூரத்தில் நாகம்மா செல்வது தெரிந்தது. இடுப்பில் ஏறிய வெற்றுக் குடத்திற்கு இணங்க அவளின் மெல்லிய இடை அசைவது மிகக் கவர்ச்சியாக இருந்தது.

செமியோனின் வாடியில் அவள் வேலை செய்தபடி அங்குமிங்கும் அசைவதை நித்தம் அவன் ஆசையோடு பார்த்திருக்கின்றான். அன்று கூட அவள் செமியோனோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசியதைக் கண்டு, தான் அசூசையால் காறித் துப்பியதையும் எண்ணிக் கொண்டான். ஆனால், முறைப்பெண் உரிமை கொண்டாடும் விருத்தாசலம்?

அவன் இதயத்தின் ஒரு பக்கம் மெதுவாக வலி கண்டது.

"கிணற்றடியில் அவளுடன் ஏதாவது பேசவேண்டும், அவள் மனநிலையை அறியவேண்டும்" என மரியதாஸ் தீர்மானித்தான்.

நாகம்மா பட்டையைக் கிணற்றுள்விட்டு தண்ணீரை அள்ளியபடி திரும்பியபோது "கொஞ்சம் குடிக்கத் தண்ணீர் தாரீங்களா?" என்று கேட்டபடி மரியதாஸ் நிற்பதைக் கண்டாள்.

அவன் நிற்கின்றான். அவளுடைய மனதில் சிறு சலனத்தைத் தோற்றுவித்த அவன் நிற்கின்றான். அவனுடைய விழிகள் தன்னை விழுங்கி விடுவனப் போலப் பார்ப்பதை அவள் கண்டாள்.

அவள் மனம் ஏன் குதூகலிக்கின்றது? அவள் உடல் ஏன் வியர்க்கின்றது? பட்டையை அவனிடம் நீட்டினாள். தண்ணீர்ப் பட்டையை அவன் வாங்கியபோது அவன் கரம் அவளுடைய விரல்களைப் பரிவுடன் தடவியது.

"ஏன் நடுங்கிறியள் ? .... நான் பேயல்ல...." என்றான் மரியதாஸ்.

நாகம்மாவிடமிருந்து பதிலில்லை..... மௌனம்.

"என்னுடன் பேசக்கூடாதா?..." மரியதாஸ் கேட்டான்.

நாகம்மா தலையைக் குனிந்து கொண்டாள். மீண்டும் மௌனம்.

"நாகம்மா..." அவன் குரல் கரகரத்தது: "என்னை உனக்குப் பிடிக்கவில்லையா?......"

ஒரு கணம் அவனை நிமிர்ந்து பார்த்தாள். "ஆராவது பார்த்து விடுவினம்..... நான் வாறன்...." என்றபடி குடத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தண்ணி அள்ள வந்துட்டு வெறுங்குடத்துடன் செல்வதா....?" என்று மரியதாஸ் கேலியாகக் கேட்டான். நாகம்மாவிற்குச் சிரிப்பு பொத்தென வந்தது. தன் மடத்தனத்தை எண்ணிக் கலீரெனச் சிரித்தாள். அவனும் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டான்.

"என்னோடு மன்னாருக்கு வாறியா?..."

"ஏன்....?" அவள் குறும்பாகக் கேட்டாள்: "அப்புவைக் கேளுங்கோ..."

"கேட்கத்தான் போறன்...!"

அவள் விரைந்து செல்வதை மரியதாஸ் பார்த்தபடியே நின்றான். சற்றுத் தூரம் சென்ற நாகம்மா திரும்பிப் பார்த்துவிட்டுச் செல்வதையும் கண்டான்.

அவன் இதயத்தில் இனிமை மலர்ந்தது. இணையிழந்த கூழைக்கடா ஒன்று வானில் கதறியபடி விரைந்தது. மரியதாஸ் தலையை நிமிர்த்தி வானத்தைப் பார்த்தான்.

## 37.

மாலை வானம் சிவந்து கிடந்தது. சண்முகத்தின் கண்களும் சிவந்து இருந்தன. விருத்தாசலத்தை ஏறிட்டுப் பார்த்துப் பெரிதாகச் சிரித்தான். ஏளனமும், ஏமாற்றமும் கலந்த அவனுடைய சிரிப்பு விருத்தாசலத்திற்குக் கவலையையும், கோபத்தையும் மூட்டியது. ஆத்திரத்தோடு கத்தினான்:

"ஏன் இப்ப பேய்போலச் சிரிக்கிறாய்? இப்ப என்ன நடந்து போச்சுது....?"

"என்ன நடந்து போச்சுது என்று கேட்கிறீர்?..... என்னதான் நடக்கேல்லை?...."

"சண்முகம்.... நான் எப்படிப்பட்டவன் என்றது உனக்குத் தெரியும்... நீ சொல்றவை பொய்யாக இருந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு உன்னைச் சும்மா விட மாட்டன். அண்டைக்குப் பரியாரியாற்றை மோளை நீ கெடுக்க முயன்றாய்.... உன்னைச் சும்மா விட்டதைப்போல இனியும் நடக்கும் என்று எண்ணாதை..... என்னை முதலில் ஏமாற்றிய கூழைக்கடாவைக் கூட காத்திருந்து வேட்டையாடியவன் நான்....." என்று விருத்தாசலம் கோபத்தோடு இரைந்தபடி தன் கூர்த்தடியை ஆலமரத்தில் வீசி எறிந்தான்.

"குடிகாரன் பேச்சு என்று நினைக்காதை.... உன்ரை குறி தவறாதது போல எவ்வளவு குடிச்சாலும் என்ரை நிதானமும் தவறாது..... நான் கண்ணாலைக் கண்டன். உன்ரை மச்சாளும் அந்த மன்னாரானும் சிரிச்சுச் சிரிச்சுப் பேசியதை..... கதைச்சது மட்டுமல்ல அவன் உன்ரை மச்சாளைக் கொஞ்சினான் தம்பி....." என்று கூறிவிட்டு பலமாகச் சிரித்தான் சண்முகம்.

விருத்தாசலம் விக்கித்துப் போய் நீண்ட நேரம் மரமாக நின்றான். கடந்துபோன பல்வேறு சம்பவங்களும் மனத்திரையில் விரிந்தன. சண்முகம் கூறுபவை உண்மைதாமோ? சண்முகம் ஏன் பொய் சொல்லவேண்டும்?

சண்முகம் தொடர்ந்தான்: "நான் ஆரம்பத்திலிருந்தே சொன்னன். நீர் தான் கேட்கவில்லை.... செட்டை முளைச்சால் கிளி பொந்தில் இருக்காது. பழம் பழுத்தால் வெளவால் விழாமலும் இருக்காது.... கிணற்றுத் தண்ணீர் என்றீர். அது இப்ப ஆற்றுத் தண்ணீராப் போச்சுது...." சண்முகத்தின் சிரிப்பும், பேச்சும் விருத்தாசலத்தின் உள்ளத்தை குமுறும் எரிமலையாக்கியது.

"சண்முகம் நீ எப்பக் கண்டாய்....?"

"ஒவ்வொரு நாளும் தான் காணுறன்..... ஒரு மரத்து மறைவிலே உன்ரை மச்சாளும் அந்த மன்னாரானும் ...... இன்னொரு மரமறைவிலே அந்தச் சூசையன்ரை தங்கச்சிப் பெட்டையும், செமியோனும் ..... உந்தக் கூழைக்கடாக்களைப் போலத்தான் ... வந்த இடத்தில இணைசேர்ந்திட்டு......."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிறுத்துடா...." என்று வீரிட்டான் விருத்தாசலம். அதைச் சட்டை செய்யாது சண்முகம் குடிவெறியில் பேசிக் கொண்டே போனான்: "உம்மடை மச்சாளின்ரை கையைப் பிடிச்சவன்ரை நெஞ்சிலே உம்மடை கூர்த்தடி தான் பாயும் என்றீர்.... நானாக இருந்தால் முதலில் அதைத்தான் செய்வன்..... அது மட்டுமே ?.... இந்த மன்னாரான்ரை வாடிக்கு நெருப்பு வைப்பன்...பெற்றோல் ஊற்றி நெருப்பு வைப்பன்!"

உடலும், உள்ளமும் பற்றி எரிவதை விருத்தாசலம் உணர்ந்தான். ஏமாற்றம், பெரும் ஏமாற்றம்; நாகம்மா தனக்குரியவள் என்ற நம்பிக்கையில் அவன் வாழ்ந்து விட்டான்.

"எல்லாம் பணம் தம்பி.... உம்மட்டை இல்லாத எதை அவனிட்டை அவன் கண்டிட்டாள்?..... பணம் என்றால் பிணமும் வாயைப் பிளக்கும்.... தெரியாதோ....?"

சுவாலை விட்டெரியும் நெருப்பிற்கு சண்முகம் எண்ணெய் வார்த்தான். விருத்தாசலம் நகர முயன்றபோது சண்முகத்தின் வார்த்தைகள் தடுத்தன.

"தம்பி உலகத்திலே ரெண்டு இன்பம்தான் உண்டு. ஒன்று குடி.... மற்றது பொம்பிளை. உனக்கு ரெண்டும் தெரியாது ..... ரெண்டும் இல்லை.... அநியாயமாய் அண்டைக்கு கிணத்தடியில் எனக்குக் கிடைக்க வேண்டியதை தடுத்திட்டாய்...."

"சீ....தூ......" என்று காறி உமிழ்ந்தான் விருத்தாசலம்: "நீ மிருகம்..... உனக்கு அண்டைக்கே முடிவு கட்டியிருக்க வேணும்... இப்பவும் காலம் செல்லல்லை.... நீ சொன்னவை பொய்யாக இருந்தால்...."

சண்முகம் படபடவெனச் சிரித்தான்.

"எனக்குப் பொய் சொல்லத் தெரியாது..... தம்பி, உம்மடை குதிரையை ஆரோ யாழ்ப்பாணத்தான் விலைக்குக் கேட்டானாமே......? கொடுத்திருக்கலாமே?...."

"விற்க நேர்ந்தால் அதுக்கு விசம் வைப்பன்........"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றபடி குதிரையில் தாவி ஏறினான் விருத்தாசலம். கௌத்தியோடைப் பக்கமாக அவனுடைய குதிரை பாய்ந்து சென்றது.

## 38.

யூசுப் சம்மாட்டியார் கோபத்தோடு மரியதாஸின் வாடியை நோக்கி வந்தார். தொந்தி விழுந்த அவருடைய வயிறு நீர்க் குடமாகத் தளும்பியது. கருமை நிறமும், வழுக்கை விழுந்த தலையும் மாலை வெயிலில் பளபளத்தன. இரட்டை வடத் தங்கச் சங்கிலி வயிற்றிலும், மார்பிலும் புரள, வேகமாக வந்த யூசுப்புச் சம்மாட்டியார் வலையில் அகப்பட்ட மீனைப்போலத் துடித்தார்.

"மரியதாஸ், நீ செய்த வேலை நல்லா இருக்கா?..."

மரியதாஸ் அவரை ஏறிட்டு பார்த்தான். யூசுப் சம்மாட்டியாரின் கோபத்துகுரிய காரணம் அவனுக்குப் புரியாமலில்லை. யூசுப் சம்மாட்டியாரின் கட்டுமரங்களில் பதினெட்டுத் தொழிலாளர்கள் வேலை செய்தனர். இவர்களில் எட்டுப்பேரை அவர் வேலை நீக்கம் செய்ததால் அவர்கள் மரியதாஸின் வாடியில் வேலைக்குச் சேர்ந்து விட்டார்கள். இதனால் யூசுப்புச் சம்மாட்டியாருக்குப் பலத்த கோபம்.

"கொஞ்சம் அமைதியாக இருங்க..." என்றான் மரியதாஸ்.

யூசுப் சம்மாட்டியார் அவனை முறைத்து விட்டுத் தொடர்ந்தார்: "நான் இருக்க வரவில்லை...... என்ரை கூலி யாட்களை எனக்குத் தெரியாமல் நீ ஆசை காட்டிப் பிடிச்சிட்டாய். ஒரு நல்ல சம்மாட்டி செய்யிற வேலையா இது?..... கடலுக்கே இது பொறுக்காது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யூசுப் அண்ணை, ஆசைகாட்டிப் பிடிக்க உங்கடை ஆக்கள் என்ன சின்னப் பிள்ளைகளா ? அவங்களாத்தான் வந்தாங்க...."

"அவங்களா வந்தால் நீர் சேர்த்துககொள்ளுறதோ.....? கள்ளன்கள் அவங்கள்.... கடலில் பிடிக்கிறதைக் கடலில் வைச்சே விக்கிற சாதி..... தொழில் நேர்மை தெரியாதவங்கள்...... மரியதாஸ், இந்த முறை இங்கை எங்கிருந்தோ வந்திட்டு நீ ஏதோ பெரிசாத் துள்ளுறாய்...." என்று யூசுப் சம்மாட்டி கத்தினார்.

"இப்ப உமக்கு என்ன தேவை....? என்று கோபமாக மரியதாஸ் கேட்டான்.

"அவங்களை உடனை தொழிலை விட்டு விலத்த வேண்டும்...."

"விலத்தாட்டில்...?"

"மரியதாஸ், உனக்கு இந்த யூசுப்பைப் பற்றித் தெரியாது..... செமியோனைப் போல நான் கையாலாகாதவன் இல்லை. நான் நினைச்சால் ஒரு இரவிலேயே உன்னை இந்த இடத்திலிருந்து கலைத்து விடுவன்.... !"

"போடா...." என்று ஆத்திரத்தோடு எழுந்தான் மரியதாஸ். "போடா போய் நீ செய்யிறதைச் செய்.... ஒரு இரவில் எழுப்புவீரோ.....? எழுப்பிப் பாரும்..... அப்படி எழுப்பினால் இந்த இடத்தில் கொலை விழும்..... போடா...... போய்ச் செய்யிறதைச் செய்யடா... இனியும் நின்டியென்டால் காலை முறிச்சுக் கடலிலே போடுவன்..."

யூசுப் சம்மாட்டியாரின் முகம் ஆத்திரத்தால் சிவந்தது. உடல் பதற ஒரு கணம் மரியதாஸை எரித்து விடுவதைப் போலப் பார்த்தார். பின் தனது வாடியை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினார்.

"எங்களுக்கு நல்லா மீன் பிடிபடுகிறது, இவங்களுக்கெல்லாம் எரிச்சலாயிருக்குது" என்று இராமசாமி, மரியதாஸிடம் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியதாசுக்கும் மன அமைதி குலைந்து விட்டது. பொன்னுக்கிழவரின் குடிசைப் பக்கமாக நடந்து சென்றான்.

## 39.

நாகம்மாவின் இதயக் கடலில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுவிட்டது. மச்சான் விருத்தாசலத்தின் நினைவு ஒரு புறம், மரியதாஸின் நினைவு மறுபுறம். விருத்தாசலத்தைத் தன் துணைவனாக அவள் எப்போதும் கருதியது கிடையாது. அத்தகைய ஒரு சலனம் அவள் உள்ளத்தில் என்றும் தோன்றியதுமில்லை. ஆனால், அவன் எவ்வளவு பெரிய வார்த்தைகளைப் பேசி விட்டான்.

"இந்த வீட்டில் என் மனைவி வளர்கிறாள் என்ற நம்பிக்கையில் தான் நான் இவ்வளவு காலமும் இருந்தன். இப்பவும் இருக்கிறன்..... நாகம்மா, உன்னைத் தவிர வேறொருத்தியை என் மனைவியாக நினைக்கக் கூட என்னால் முடியவில்லை..."

இவ்வார்த்தைகளை எண்ணும்போது அவனுக்காக அவள் இரக்கப்பட்டாள். விருத்தாசலம் இவ்வளவா சொன்னான் ?

"எனக்குரிய ஒன்றைப் பிறன் ஒருவன் எடுத்துச் செல்வதை ஒரு போதும் நான் பார்த்துக்கொண்டிருக்கமாட்டன்...." இவ் வார்த்தைகளை எண்ணும்போது அவளது உடல் ஏனோ நடுங்கியது. ஏதாவது நடந்துவிடுமோ என்று பயந்தாள்.

"என்னோடு மன்னாருக்கு வாறியா?...." என்ற ஒரு கேள்வியிலேயே மரியதாஸ் எவ்வளவு அழகாகத் தன் உள்ளக் கிடக்கையைக் கூறிவிட்டான். இனிய கற்பனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் உள்ளத்தில் மலர்ந்தன. ஏழை ஒருத்திக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டம் கிட்ட முடியுமா?

கூழைக்கடாக்கள் இரண்டு குரல் எழுப்பியவாறு வானில் விரைந்தன. நாகம்மா வானத்தைப் பார்த்தாள். பின் கடற்கரையைப் பார்த்தாள்.

தன் குடிசையை நோக்கி மரியதாஸ் வருவது தெரிந்தது. அவர் ஏன் வாறார்? அப்புவைக் கேட்க வருகின்றாரோ? இனந்தெரியாத பரபரப்பு அவளை ஆட்கொண்டது. 'அப்பு இங்கை இல்லை? மாவலித்துறையடிக்கு அலுவலாகப் போய்இருக்கின்றார். வர இரவாகும்'. ஏனோ அவளுக்கு கிணற்றடியில் பிலோமினாவைச் செமியோன் அணைத்து முத்தமிட்ட காட்சி நினைவில் வந்தது. உடலை இன்பக் கிளுகிளுப்பு ஆட்கொண்டது.

படலையைத் திறந்து கொண்டு மரியதாஸ் வந்தான். குடிசை வாசலில் நாகம்மா நின்று கொண்டிருந்தாள்.

"அப்பு, இல்லையா?...." அவன் மெதுவாகக் கேட்டான்.

"இல்லை....... துறையடிக்கு போட்டார்....." இதைக் கூறுவதற்குள் அவள் பட்டபாடு. அப்பு இல்லாத வேளையில் எத்தனையோ ஆடவர்கள் இங்கு வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் பதில் கூறி அனுப்பியவள் தானே? ஆனால், கள்ளம் புகுந்த அவள் இதயத்தால் இந்த ஆடவனுக்குப் பதில் கூற அவளால் முடியவில்லை.

"உள்ளே வரலாமா?...." என்று அவன் கேட்டான். அவள் களுக்கெனச் சிரித்தாள்.

"உள்ளே தானே வந்து விட்டீங்கள்......!"

"வளவிற்குள் தானே வந்திருக்கின்றன்...." என்றான் மரியதாஸ்.

"வேறு எங்கு வரவேண்டும்?"

"குடிசைக்குள் ...." என்றான் அவன்.

"ஐயோ......"

"ஏன் நாகம்மா, நான் வரக்கூடாதா?...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வரலாம். ஆனால், முறையாக எல்லோர வரவேணும்....!"

மரியதாஸ் மெதுவாகக் குடிசைத் திண்ணையில் அமர்ந்து கொண்டான்.

"நாகம்மா ....." என்று தாபத்தோடு அழைத்தான். அவள் ஒரு கணம் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள். அவள் கரத்தை மென்மையாக மரியதாஸ் பற்றினான். உதறிவிடத் தான் அவள் விரும்பினாள். ஆனால், முடியவில்லை!

"உன்னை நிச்சயமாக நான் கட்டிக் கொள்ளுவன்.... என் மனைவியாக உன்னை நான் மன்னாருக்கு அழைத்துச் செல்வன்..."

"எனக்குப் பயமாக இருக்குது...." அவள் உடல் மெதுவாக நடுங்கியது. அவன் கரம் பட்ட இடமெல்லாம் இனம் தெரியாத இன்ப வேதனை மின்சாரமெனத் தாவிப் பரவியது.

"நாகம்மா, வந்த இடத்திலே இப்படி ஒரு அழகியைச் சந்திப்பன் என்று நான் நினைக்கவேயில்லை.... இப்படியொரு பாக்கியத்தை அடைவன் என்றும் நினைக்கவேயில்லை. நான் எப்ப உன்னைப் பார்த்தேனோ அன்றே என்னை இழந்திட்டன்...." அவன் பேசிக் கொண்டே போனான். அவள் இறக்கைகள் முளைத்து வானத்தில் பறந்து கொண்டிருந்தாள். அவளைப் பற்றி எவ்வளவு பெரிய வார்த்தைகளை அவன் கூறுகின்றான்.

"நான் சைவக்காரி.... நீங்கள் வேதம்....." என்றாள் நாகம்மா, இப்படிக் கூறிவிட்டு, அவனை ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்தாள். பின் தலையைக் குனிந்து கொண்டாள்.

"அதனாலென்ன, நாகம்மா.... ஒருவரையொருவர் விரும்புறதுக்கு சமயம் ஒரு போதும் தடையில்லை......"

அவளுடைய கரத்தை தடவும் அவனது கை ஊர்ந்து தோள்வரை சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு பயமாக இருக்கு... ஆராவது பார்த்திட்டால்.... விபரீதம்.... !போயிட்டு அப்பு இருக்கும் போது வாங்க..." என்று அவள் பதறினாள்.

"என்னில் உனக்கு நம்பிக்கை இல்லையா?..." அவன் எழுந்து நின்றான்.

"நம்பிக்கை இருக்கு... ஆனா....."

"பயமா இருக்கா?...." என்றபடி அவள் தோளில் கரம் பதித்தான் அவன்.

"விடுங்க.... ஆராவது பார்த்தால்?...." அவள் உடல் வெடவெடவென நடுங்கியது. அவன் ஸ்பரிசம் பட்ட இடமெல்லாம் இதுவரை காணாத இன்பக் கிளுகிளுப்பு.

"ஆரும் பார்க்க மாட்டான்கள்... ஒரு குருவியைக் கூடக் காணோம்..." அவள் இடையில் அவனது வலது கரம் படர்ந்தது. அவளைக் குடிசைக்குள் அழைத்துச் சென்றான். சித்தப்பிரமை பிடித்தவள் போல அவளும் கூடவே சென்றாள்.

மரியதாஸ் குடிசையின் ஒலைப்படலையைச் சாத்தினான்.

கூழைக்கடாக்கள் இரண்டு குடிசைக்கு மேல் இணைந்தபடி பறந்தன.

இருள் படரத் தொடங்கியது.

## 40.

வெல்லைக் கழியின் கரையோரமாக பனை மரம் ஒன்று, என்றோ வீசிய புயலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் சரிந்து கிடந்தது. அடி மரத்தில் விருத்தாசலம் அமர்ந்திருந்தான். பக்கத்தில் கிடந்த கற்களை எடுத்து வெல்லைக்கழி நீரின் மேல் ஆவேசமாக வீசிக் கொண்டிருந்தான். கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்களை வீசியபோதிலும் மனம் சண்முகத்தின் சொற்களையே அசை போட்டுக் கொண்டிருந்தது.

சண்முகம் கூறியவை மட்டும் உண்மையாக இருந்தால் இதற்கு மேல் அவனுக்கு ஏற்படக்கூடிய ஏமாற்றமும், தோல்வியும் வேறென்னவாக இருக்கமுடியும். அந்த நினைவை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

கழியின் நடுவில் மீன்கொத்திப் பறவைகள் மீனைத் தேடித் திரிந்தன. ஆள்காட்டிக் குருவியொன்று அவலக் குரல் எழுப்பியது.

விருத்தாசலம் ஏதோ ஒருமுடிவிற்கு வந்தவனாகக் குதிரையில் ஏறினான். கௌத்தி ஓடையின் வலது கரையில் நின்ற ஒற்றைப் பனையில் ஒரு கூழைக்கடா அமர்ந்திருப்பது தெரிந்தது. உற்றுப் பார்த்தான்.

கூழைக்கடா தனியாக இருக்கவில்லை. அதன் அருகில் இன்னோர் கூழைக்கடா ஒன்றும் அமர்ந்திருப்பது தெரிந்தது. "வெட்கம் கெட்ட கூழைக்கடா. உடனேயே தனக்கொரு இணையைத் தேடிக் கொண்டுவிட்டது" ஆத்திரத்தோடு அந்தப் பனை மரத்தைப் பார்த்தான். பின் பொன்னுக்கிழவரின் குடிசைப் பக்கமாகக் குதிரையைத் தட்டி விட்டான்.

"இன்று ஒரு முடிவை நாகம்மாவிடமே கேட்டு விட வேண்டும்."

அவன் பொன்னுக்கிழவரின் வீட்டிற்கு வந்த போது, இருள் படரத் தொடங்கியிருந்தது. வழியில் குதிரையை மேய்ச்சலுக்காக விட்டுவிட்டுதான் நடந்து வந்தான்.

குடிசை வாயில் சாத்திக் கிடந்தது. 'அப்புவை வெளியில் காணோம். நாகம்மா தண்ணி அள்ளப் போயிருப்பாளோ?' என்று நினைத்து அலுப்புடன் குடிசை முற்றத்திலிருந்த வேப்ப மரத்தோடு சாய்ந்து அமர்ந்தான் விருத்தாசலம்.

"நாகம்மா......... நாகம்மா...." என்று அவனின் உள்ளம் கொந்தளிப்பதை அவனால் தணிக்கவே முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிசையின் ஓலைக்கதவு திறக்கும் ஓசை. வேப்பமரத்தடியில் இருந்தபடியே திரும்பிப் பார்த்த விருத்தாசலம் பேயறைந்தவன் போலானான். அவன் இத்தகையதொரு பேரிடியை இதுவரை காலமும் சந்திக்கவில்லை.

மரியதாஸ் முன்னே வர, நாகம்மா பின்னால் வந்தாள். வெளியே வந்த மரியதாஸ் சுற்றும் முற்றும் பார்த்தான். வேப்பமரத்தடியில் அவன் பார்வை நிலைத்தபோது நெருப்புத் தணலில் கால் வைத்தவன் போலானான்.

நாகம்மாவும் விருத்தாசலத்தைக் கண்டு திகைத்துப் போனாள்.

சில கணங்கள் எவராலும் எதுவுமே பேசமுடியவில்லை. விருத்தாசலத்தின் விழிகள் சிவந்தன. "தூ...." என்று காறி உமிழ்ந்தான்.

"மச்சான்...." என்று நாகம்மா குளறினாள்.

"நாகம்மா, நீ இப்படிப் பட்டனியா? ...... நீயா இப்படி நடந்தாய்?....."

அவளால் எதுவுமே பேசமுடியவில்லை. கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. மரியதாஸ் தலைகுனிந்து நின்றான்.

"சீ ... நீ ஒரு மனிசனா....?" என்று விருத்தாசலம் மரியதாஸை நோக்கிக் கத்தினான்: "நீ மட்டும் இந்தக் காரியத்தைச் செய்திருந்தால் உன்னை இந்த இடத்திலேயே கொன்றிருப்பன்..... ஆனா, அவளும் ஒத்து......... நாகம்மா, உன்னை வளர்த்த அப்புவிற்கு நீ செய்த நன்றி இதுதானா...?"

மரியதாஸ் விருத்தாசலத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

"நாகம்மாவை நான் கலியாணம் செய்து கொள்ளப் போகிறன்..." என்று அவன் கூறினான்.

அதைக் கேட்கும் நிலையில்லை விருத்தாசலம்.

"போடா... வெளியிலே..." பலமாகக் கத்தினான்.

"மச்சான்....!" நாகம்மா மரியதாஸைப் பின்னின்று அழைத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீயும் போகப் போகிறியா?..... போ நல்லாப் போ..... அவனுக்கு மன்னாரில் பெண்சாதி இருக்கு... நீயும் போ....."

"பொய்....." என்று கத்தினான் மரியதாஸ்: "ஆண்டவன் மீது சத்தியமாகச் சொல்கிறன், எனக்குக் கலியாணம் ஆகவில்லை...."

"போடா..." என்று வீரிட்டான் விருத்தாசலம்.

மரியதாஸ் நாகம்மாவை ஒரு தரம் நோக்கி விட்டு படலையைக் கடந்து சென்றான்.

"மச்சான்...." என நாகம்மா விம்மினாள்.

"நில்..." என்று கத்தினான் விருத்தாசலம். படலையை நெருங்கிய மரியதாஸ் திரும்பிப் பார்த்தான்.

"இவ்வளவும் நடந்த பிறகு, நீ மட்டும் போவதா?.... இவளையும் கூட்டிக் கொண்டு போடா......!"

"வாடை முடிய இன்னமும் பத்து நாள் தான் இருக்கு..... தொழில் முடிஞ்சு மன்னாருக்குப் போகேக்கை நாகம்மாவையும் கூட்டிப் போறன்... சத்தியமாகக் கூட்டிப் போறன்..." என்றான் மரியதாஸ். அவன் முகம் அவமானத்தால் கறுத்துக் கிடந்தது.

"இல்லை. இப்பவே கூட்டிப் போ..."

ஒரு கணம் தயங்கி நின்றான் மரியதாஸ்.

"இவளை இப்பவே கூட்டிக் கொண்டு போ.... இல்லை.... உன்ரை பிணம் தான் இந்த இடத்தை விட்டு வெளியே போகும்..." விருத்தாசலத்தின் வலது கரம் உயர்ந்தது. அது பற்றியிருக்கும் கூர்த்தடியில் செருகிய கத்தி இருட்டிலும் பளபளப்பதை மரியதாஸ் கண்டான்.

"நாகம்மாவின் அப்புவிடம் கேட்டுவிட்டு கூட்டிக்கொண்டு போகிறன்...."

"அப்புவிட்டை கேட்டா இவ்வளவும் நடந்தது...?" என்று விருத்தாசலம் உறுமினான். "ஏமாற்றி விடலாம் என்று பார்க்கின்றாயா?...."

அயவலர்கள் பலர் அங்குவந்து கூடிவிட்டார்கள். நாகம்மா குன்றிப் போனாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாவி போல இருந்தாளே?...." என்றாள் திரேசம்மா.

சவரிமுத்து விடயம் கேள்விப் பட்டு ஓடி வந்தான். விருத்தாசலத்தின் கூர்த்தடி நுனியில் மரியதாஸ் தயங்கி நிற்பதையும், நாகம்மா தலை குனிந்து நிற்பதையும் கண்டான்.

"டேய்.... விருத்தாசலம்... என்னடா இது...? நீ வா சம்மாட்டி ..." என்று மரியதாஸின் தோளில் கை வைத்து அழைத்தான்.

"டேய்... சவிரி... நீ இதில் தலையிடாதை .... தலையிட்டே.... உன்ரை உடலை எடுத்து மாலையாப் போடுவன்..."

சவிரிமுத்து விக்கித்துப் போனான். 'அண்ணை என்று கூறும் விருத்தாசலமா இவன்?'

மரியதாஸ் மெதுவாக முன்னே நடந்து வந்து நாகம்மாவின் இடது கரத்தைப் பற்றினான்: "நான் இப்பவே இவளைக் கூட்டிப்போறன்....."

உயர்ந்து நின்ற விருத்தாசலத்தின் கரம் கீழே தாழ்ந்தது. அவன் கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு "ஓ" வென்று அழுதான். இரவின் தனிமையில் அவனின் அழுகை காற்றுடன் கலந்து சோக கீதமாக ஒலித்தது.

## 41.

காற்றுப் பலமாக வீசத் தொடங்கியது. வாடைப்பருவம் விடைபெறும் வேளை நெருங்குகிறது. சோளகம் பெயர்ந்து போவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

"இம்முறை சோளகம் கெதியா வீசப் போகுது போல...." என்றார் பொன்னுக்கிழவர். "ராவைக்குப் புசல் வீசப் போவுது.... இண்டைக்கு ஒருத்தரும் தொழிலுக்குப் போகாயினம்....."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுக்கிழவரின் பேச்சுக்களைக் கவனிக்கும் நிலையில் விருத்தாசலம் இல்லை.

"அப்பு, நான் செய்தது பிழையா?...." என்று கேட்டான்.

கிழவர் விருத்தாசலத்தை இரக்கத்தோடு பார்த்தார்.

"நீ செய்தது தான் சரி....." என்ற பெரு மூச்செறிந்தார்: "அவள் எங்கை இருந்தாலும் நல்லா இருக்கட்டும்... அவசரப்பட்டிட்டாள்...."

விருத்தாசலம் இருளை வெறிக்கப் பார்த்தான். இருட்டின் சூனியத்தில் எதையோ அவனின் விழிகள் தேடின. அவனது விழிகள் சிவந்து முகம் வீங்கிக் கிடந்தது.

"அப்பு ! நாகம்மா இப்படிச் செய்வாளென்று நான் நினைக்கவில்லை... அவள் எனக்குக் கிடைக்கவில்லை எண்டதுக்காக நான் கவலைப்படவில்லை. நான் பேயன்.... நிரந்தரத் தொழிலில்லாதவன்...... ஒரு அநாதை ....... எப்படி நாகம்மா மேல் நான் ஆசைப்பட்டிருக்கலாம்.....? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் படக்கூடாது..... நான் ஆசைப்பட்டிட்டன்...." என்ற குமுறினான் விருத்தாசலம்.

பொன்னுக்கிழவர் பதில் எதுவும் கூறாது அவனையே பார்த்தபடி இருந்தார். பேர்த்தி மரியதாஸைக் கூட்டிக் கொண்டு போனதில் அவருக்கும் கவலைதான். மரியதாஸைக் கட்டியதற்காக அவர் கவலைப்படவில்லை. முறையாக ஊரறியத் தன் ஆசிர்வாதத்தோடு கலியாணம் நடக்கவில்லை என்பதே அவரது குறை.

"வாழ்க்கை எவ்வளவு விசித்திரமானதாக இருக்கு பார்த்தீகளா அப்பு..... நாங்க நினைச்ச படி ஆசைப்பட்டபடி எதுதான் நடக்குது.....? நான் இந்த ஊரை விட்டே ஓடப் போறன்..... ஒருநாள் நல்ல நிலையில் நான் திரும்பி வருவன் அப்பு....பணம்.... பதவி.... செல்வாக்கு இவ்வளவையும் சம்பாதித்துக் கொண்டுதான் நான் இனி இங்கு வருவன்.....!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழவர் அவனுடைய முதுகை ஆதரவாகத் தடவி விட்டார்.

இருந்தாற்போல கடற்கரையில் பெரு வெளிச்சம் எழுந்தது. திடீரென தீக் கரங்கள் வானைத் தழுவி எழுந்தன. "நெருப்பு.... நெருப்பு...." என்ற கூச்சல் எழுந்தது. கடற்கரை வாடி ஒன்று தீப்பிடித்து எரிவதை இருவரும் கண்டனர்.

"மரியதாஸின் வாடி எரியுது......" என்றார் கிழவர்.

"ஐயோ நாகம்மா....!" என்றலறியபடி கடற்கரை வாடியை நோக்கி பாய்ந்து ஓடினான் விருத்தாசலம்.

## 42.

ஆலடி வயிரவர் கோயில் அமைதியில் ஆழ்ந்து கிடந்தது. வயிரவர் முன் ஏற்றி வைக்கப்பட்டிருந்த சிட்டிவிளக்கும் காற்றின் தாக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் அணைந்து விட்டது. கீழை வானில் தேய்பிறையும், அங்கொன்றும் இங்கொன்றுமாக நட்சத்திரங்களும் காலித்து விட்டன. பாறி விழுந்து கிடந்த பனை மரத்தின் அருகில் செமியோனும், பிலோமினாவும் அமர்ந்திருந்தனர். அவனுடைய தோளில் அவள் தலை சாய்த்திருந்தாள்.

"பிலோ....." என்று மெதுவாக அழைத்தான் செமியோன்: "எவ்வளவு நாட்களுக்குப் பிறகு நாங்கள் சந்தித்திருக்கிறம்....!"

பிலோமினாவின் குரல் தழுதழுத்தது.

"இரண்டு நாட்களாக எனக்கு விசித்திரமான கற்பனைகள் மனதில் தோன்றுகின்றன.... நான் உங்கள் மடியில் படுத்திருப்பது போலவும், அப்படியே என் உயிர் பிரிந்து விடுவது போலவும் பிரமை ஏற்படுகின்றது....! ஏனோ தெரியவில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிலோ..." என்ற படி செமியோன் தன் மார்போடு அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்: "என்ன வார்த்தை கதைக்கிறாய்.... ? பிலோ...... என் பிலோமினா, நீ இல்லாமல் இனிமேல் என்னால் ஒரு கணம் கூட வாழமுடியாது. நீ என் உயிர்... பிலோ....."

அவனுடைய அணைப்பில் அவள் மயங்கிக் கிடந்தாள்.

"இப்படியே என்னை..... நான் செத்துப் போக மாட்டேனா என்றிருக்குது....."

"பிலோ, இன்று உனக்கு என்ன பிடித்தது. விசர் விசராக கதைக்கிறாய்....?"

"எனக்கு விசர் தான்.... எனக்கு செமியோன் விசர் ..." என அவள் சிரித்தாள்: "ஆனால், ஏதோ என் உள் மனம் சில நாட்களாக என்னை எச்சரிக்கிறது.... இந்த இன்பம் நிலைக்குமோ என்ற பயம் எனக்கிருக்குது.... நான் துரதிஷ்டம் செய்தவள்....." அவளின் உடல் மெதுவாக நடுங்கியது.

"பிலோமினா... இந்த நேரத்தில் இதுதானா கதைக்கிற கதை. இனி நம்மை எந்தவொரு சக்தியும் பிரிக்கவே முடியாது..... இன்னும் பத்துநாள் தான்....... நான் போகும்போது உன்னையும் என்னுடன் கூட்டிப் போவன்....."

அவளுடைய நெற்றியில் அவன் முத்தமிட்டான். அவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டு ஏனோ அவள் அழுதாள்.

"பிலோ.... பிலோ..."

வெகுநேரம் அவர்கள் இருவரும் அதே நிலையிலேயே அமர்ந்திருந்தனர். காற்று குளிர்மையை நிறைத்துக் கொண்டு வீசியது. நள்ளிரவு தாண்டி வெகு நேரமாகி விட்டது. ஆங்காங்கே மின்மினிப் பூச்சிகள் இரைந்தபடி திரிந்தன.

இருந்தாற்போல் இருளைப் பகலாக்கக் கூடிய விதமாக ஜெகஜோதியாக பெரு வெளிச்சம் தோன்றியது. படபடவென ஓலை எரிகின்ற சப்தமும் எழுந்தது. செமியோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடுக்கிட்டவனாக எழுந்து நின்றான். பிலோமினாவும் எழுந்தாள்.

"நெருப்பு...... நெருப்பு....." என்ற கூச்சல் கடற்கரைப் பக்கம் இருந்து எழுந்தது.

வாடிகள் அமைந்திருந்த பகுதியில் வானையளாவி சொக்கப்பானையாகத் தீயின் நாக்குகள் ஆர்ப்பரித்தன.

"ஆற்றையோ வாடிக்கு நெருப்புப் பிடிச்சிட்டுது... நீ வீட்டுக்குப் போ பிலோ.... நான் கடற்கரைக்குப் போகிறன்... போறியா...." என்று என்று படபடக்கச் செமியோன் கேட்டான்.

"உங்கடை வாடியா.....?" கலக்கத்தோடு பிலோமினா கேட்டாள்.

"சரியாத் தெரியவில்லை.... நீ வீட்டைப் போ...... "

"சரி......... கவனம்........" என்றாள் பிலோமினா. செமியோன் கடற்கரையை நோக்கி விரைந்து சென்றான். அவன் ஓடிப் போய் மறைவதைப் பார்த்துக் கொண்டிருந்த பிலோமினா தனது கால்களைப் பெயர்த்தாள்,

அப்போது –

இரு வலிய கரங்கள் அவளைப் பிடித்துக் தூக்கின. "ஐயோ..... அம்மா......" எனப் பிலோமினா அலறினாள். ஒரு கரம் அவள் வாயை பொத்தியது. பிலோமினா துடியாய்த் துடித்தாள்.

குள்ளநரியொன்றினால் கவ்வப்பட்ட முயலொன்று மரண ஓலம் எழுப்புவது கேட்டது.

## 43.

கடல் காற்றின் அரவணைப்பில் தீக் கரங்கள் மரிய தாஸின் வாடியைப் பூரணமாகப் பற்றிக் கொண்டன. வாடிக்குள் படுத்திருந்த மரியதாஸும் நாகம்மாவும் நெருப்பு நன்கு மூண்ட பின்பே நிலைமையை உணர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெருப்பு.... நெருப்பு....." என நாகம்மாவும், மாரியதாஸும் கூச்சலிட்ட பின்பே, இராசசாமியும் ஏனையோரும் எழுந்து ஓடி வந்தனர். வாடி சுற்றி வரத் தென்னை ஓலைகளால் அடைக்கப்பட்டிருந்ததால், நெருப்பு விறுவிறெனப் பற்றிக் கொழுந்து விட்டு எழுந்தது.

எவ்வளவு முயன்றும் வாடியையோ, அதனுள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த கருவாட்டுச் சிப்பங்களையோ காப்பாற்ற முடியவில்லை. கடற்கரையில் பலரும் கூடிவிட்டார்கள். யூசுப் சம்மாட்டி, செமியோன், பொன்னுக்கிழவர், விருத்தாசலம், சவிரிமுத்து யாவரும் மரியதாஸைச் சூழ்ந்து நின்றனர். மரியதாஸ் எதுவும் பேசாது தனது வாடியை வெறித்துப் பார்த்தபடி நின்றான். பின் தன்னைச் சுற்றி நின்றவர்களை உற்றுப்பார்த்தான்.

"யூசுப் சம்மாட்டி சொன்னபடி செய்திட்டான்...." என்றான் இராமசாமி.

"உது கரையூர்ச் சம்மாட்டியின்ரை வேலை..." என்றான் இஸ்மாயில்.

இராமசாமியையும், இஸ்மாயிலையும் சுடடெரிப்பதுபோல மரியதாஸ் பார்த்தான். பின் எல்லாரையும் பார்த்து பொதுப் படச் சொன்னான்: "இப்ப எல்லாருக்கும் சந்தோஷந்தானே?"

அந்த வார்த்தைகள் செமியோனையும், யூசுப்பையும் கடுமையாகச் சுட்டன.

"உண்மையான கரையான் என்னதான் கோபமிருந்தாலும் மீன் வாடிக்கு நெருப்பு வைக்க மாட்டான், மரியதாஸ்..... அதை நம்பு...." என்ற செமியோனை மரியதாஸ் ஏறிட்டுப் பார்த்தான். அவன் கண்கள் முதல் முதலாகக் கலங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மரியதாஸ்! நான் கோபத்தினால் என்ன பேசினாலும் இப்படி ஒரு எளிய வேலையை செய்யமாட்டன்" என்றார் யூசுப் சம்மாட்டி. மரியதாஸின் தோள்களில் ஆறுதல் கூறுவது போல தன் வலது கரத்தைப் பதித்தார்.

மரியதாஸ் எதுவும் பேசாது நின்றான். நாகம்மாவின் துயரம்சொல்லுந்தரமன்று. கண்ணீர் சிந்தியபடியே விருத்தாசலத்தை ஏறிட்டுப் பார்த்தான். 'மச்சான் நீயா செய்தாய்?' என்று கேட்பது போல அவள் பார்வையிருந்தது. 'நானில்லை நாகம்மா, நானில்லை' என்பது போலப் பரிதாபமாக தலையை ஆட்டினான் விருத்தாசலம்.

அப்படியாயின் நெருப்பு மூண்டது எப்படி?

குடிமனைப் பக்கமிருந்து ஒரு பெண் அலறிக் கொண்டு ஓடி வந்தாள்.

"பிலோமினா.... பிலோமினா..." அது திரேசம்மா தான்: "ஐயோ! பிலோமினாவைக் காணவில்லை... ஓடிவாருங்கோ."

செமியோனும், விருத்தாசலமும் குரல் வந்த திக்கில் ஓடி வந்தார்கள்.

திரேசம்மா தலைவிரி கோலமாக நின்று அலறினாள்.

"பிலோவைக் காணவில்லை. அவள் படுக்கிற திண்ணையின்ரை மட்டை வரிச்சை ஆரோ அறுத்திருக்கினம்..... அறுத்துப்போட்டு" ஓவென அழுதாள் திரேசம்மா. தன் தலையில் அறைந்து கொண்டு கத்தினாள்.

செமியோன் திகைத்துப் போனான். ஒரு மணித்தியாலத்துக்கு முன் பிலோமினா அவனுடன் இருந்தாள். மட்டை வரிச்சை யார் அறுத்தது? ஏதே நினைவு வந்தவனாக செமியோன், ஆலடி வயிரவர் கோயிலை நோக்கி பாய்ந்தோடினான்.

விருத்தாசலத்தின் எண்ணத்தில் பளீரென மின்னல் ஒன்று வெட்டியது.

"இது நிச்சயமாக சண்முகத்தின் வேலை.... சுடலை வயிரவரின் வேலை... டேய், சண்முகம் இந்த முறை உன்னைத் தப்ப விட மாட்டன்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னுக்கிழவரின் குடிசையை நோக்கி விருத்தாசலம் அம்பென விரைந்தான். முற்றத்து வேப்பமரத்தில் சாத்தி வைக்கப்பட்டிருந்த கத்தி செருகிய கூர்த்தடியை எடுத்தான். படலையைத் தள்ளித் திறந்து கொண்டு குட்டைக் காட்டுக்குள் புகுந்து ஓடினான்.

## 44.

மழை தூறிக் கொண்டிருந்தது. மண் போர்வை நீங்கிய முருகைக் கற்பார் நுனிகள் விருத்தாசலத்தின் பாதங்களை குத்தின. அவற்றை உணராதவனாக அவன் விரைந்து ஓடினான். நேரம் செல்லச் செல்ல அவனுள் கலக்கம் புகத் தொடங்கியது.

'தூக்கிச் சென்ற மிருகம், இவ்வளவு நேரமும் பசியாறாமல் விட்டிருக்குமா? ஆலடி வயிரவா, அப்படி ஏதும் நிகழாமல் நீதான் காக்கவேண்டும்.'

அடிவானத்தில் எரி நட்சத்திரம் ஒன்று உதிர்ந்து விழுந்தது. தூரத்தில் நரியொன்றின் ஊளைச் சத்தம்.

நல்ல தண்ணீர்க் கிணற்றடியை விருத்தாசலம் பார்த்தான். அது வெறிச்சோடிக்கிடந்தது.

தூரத்தில் மயானம் தெரிந்தது. மங்கிய ஒளியில் சுடலை மடமும், ஆலமரமும் நிழலுருவாகத் தெரிந்தன. ஓடிய களைப்பினால் விருத்தாசலத்தின் நெஞ்சு படபடத்தது. சுடலை மடத்தை நோக்கி அவன் வேகமாக ஓடினான். நிலம் அதிரும்படி அவன் ஓடியதால் ஏற்பட்ட ஒலியைக் கேட்டு, புதர்களில் பதுங்கியிருந்த முயல்கள், அவனது கால்களில் இடறியபடி குறுக்குநெடுக்காக ஓடியன.

மடத்தை நெருங்கிய போது விர்ரென வீசிய காற்றில் அள்ளுப் பட்ட ஏதோ ஒன்று அவன் முகத்தில் வந்து மோதியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயத்தினால் ஒருகணம் விக்கித்துப் போன விருத்தாசலம், முகத்தில் மோதியதை குனிந்து எடுத்தான். ஒரு பெண்ணின் மேற்சட்டை, ரவுக்கை. கிழிக்கப்பட்ட சட்டை.

"ஐயோ....." என வீரிட்டான் விருத்தாசலம்: "அட கேடு கெட்ட பாவி...."

"டேய், சண்முகம்...." என்று வீரிட்ட படி பாய்ந்து மடத்துக்குள் புகுந்தான் விருத்தாசலம். மடம் அமைதியில் ஆழ்ந்து கிடந்தது. எவரையும் அங்கு காணோம். சுற்றும் முற்றும் பார்த்தான்.

தூரத்தில் யாரோ ஓடுவது தெரிந்தது. விருத்தாசலத்தை வேட்டை வெறி திடீரெனப் பிடித்துக் கொண்டது. ஓடுகின்ற அந்த உருவத்தை துரத்தியபடி பாய்ந்த அவனுடைய கால்கள் எதிலோ இடறு பட்டது. அவன் முகம் குப்புற விழுந்தான். தன்னை நிதானப்படுத்திக் கொண்டு, எழுந்து பார்த்தான். அங்கே அவன் கண்ட காட்சி....! ஐயோ !!

விருத்தாசலத்தின் இரத்தமே உறைந்து போய்விட்டது.

வாயடைத்துப்போய்..... விக்கித்து விறைத்துப் போய் நின்றான் விருத்தாசலம்.

சுய நினைவு வர நீண்ட நேரம் எடுத்தது.

"தங்கச்சி... ஐயோ பிலோமினா...!" அவனுடைய கூச்சல் சுடலையை கிடுகிடுக்க வைத்து ஓய்ந்தது.

அங்கு மண்தரையிலே பிறந்த மேனியோடு மிருகம் ஒன்றின் பெரும் காமப் பசிக்கு தன்னைப் பறிகொடுத்து விட்டு, பிலோமினா பிணமாகக் கிடந்தாள். தனது வெறியை தணித்துக் கொண்ட அந்த மிருகம் அவளுடைய உயிரையும் உண்டுவிட்டு ஓடிக்கொண்டிருந்தது.

விருத்தாசலத்தின் கால்களுக்கு எப்படித்தான் அத்தகையதொரு வேகம் வந்ததோ?

குட்டைக் காட்டுப் புதர்களைப் துவம்சம் செய்து கொண்டு, "டேய் சண்முகம்..." என்று ஓலமிட்டபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ந்து விருத்தாசலம் ஓடினான். அவன் கரத்தில் இறுகப் பற்றியிருந்த கூர்த் தடி ஓங்கிய நிலையில் தயாராக இருந்தது.

கௌத்தி ஓடையைத் தாண்டி, அந்த மிருகம் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடுவதை விருத்தாசலம் கண்டு கொண்டான். அப்போது அந்த மிருகம் கௌத்தி ஓடைக்குள் கால் இடறி, தலை குப்புற விழுவதையும் விருத்தாசலம் கண்டான்.

ஒரு கண நேரம்தான். அது போதுமானது, விருத்தாசலத்தின் வலது கரத்தில் ஏந்திய கூர்த்தடி தலை மட்டத்துக்கு மேல் உயர்ந்தது.

"ஐயோ..... தம்பி ... உன்னைக் கும்பிட்டன் .... வீசிடாதை.... வீசிடாதை..." என்று சண்முகம் அலறினான்.

அந்த அலறல் முற்றுப் பெறுவதற்கு முன்னே விருத்தாசலத்தின் கரத்திலிருந்து வெறியோடு விடுபட்ட கத்தி பிணைத்த கூர்த்தடி சண்முகத்தின் மார்பில் பாய்ந்து விட்டது.

முகத்தில் கரங்களால் அறைந்து கொண்டு விம்மி விம்மி அழுதான் விருத்தாசலம்.

"ஐயோ... என்ர பிலோமினாா..." செமியோனின் அலறல் இருளைக் கிழித்துக் கொண்டு நீண்ட நேரம் அந்த கடற்கரையில் ஒலித்தபடி இருந்தது.

கிழக்கு வானம் வெளுக்கத் தொடங்கியது. விருத்தாசலம் சிலையாக அமர்ந்திருந்தான். கௌத்தி ஓடை நீருடன் செந்நிறம் கலப்பதை அவன் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

வானத்தில் கூழைக்கடாக்கள் குரலெழுப்பின. அவன் தலையை நிமிர்த்திப் பார்த்தான். கூழைக்கடாக்கள் வடபுறமாக விரைந்து சென்றன. வாடைக்காலம் முடிந்து விட்டது. இனி அவை இத்தீவை விட்டு பறந்து சென்றுவிடும் !

நீண்ட நேரம் அவன் வானத்தைப் பார்த்தபடியே நின்றான்.

அவன் விழிகள் அருவியென நீரைப் பொழிந்தன!

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"செமியோன் சம்மாட்டியார் இந்தமுறை வாடி போடவில்லையாம்..."
பிலோமினா - கடலைச் சண்முகம்.



"இந்தமுறை கடற்கரையில் அமைதி இருக்காது போலப்படுகுது"
பொன்னுக்கிழவரும் சவிரிமுத்தரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"பொன்னுக்கிழவரின், பேர்த்தியை நேற்று வந்தவன் எவனோ...."
சுடலைச் சண்முகமும் விருத்தாசலமும்



"மச்சானுக்கு எப்பவும் தண்ணி விடாய் தான்...."
விருத்தாசலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"செமியோன் அண்ணை இந்தமுறை வருவாரோ?"
பொன்னுக்கிழவரும் பேத்தி நாகம்மாவும்



"ஒற்றுமையாக மீன் பிடியுங்க...."
செமியோன் - பொன்னுக்கிழவர் - பேதுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"விசயம் தெரியாத மீன்பிடிகாரன் இந்த மரியதாஸ்"
மரியதாஸ்.



"ஒரு பெண்ணோடு பேசப் போய்ப்பட்ட பரிசு கேடு போதும்..."
செமியோனும் நாகம்மாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"பிலோ என் ஆசைப் பிலோமினா...."
பிலோமினாவும் செமியோனும்



"எல்லாத்துக்கும் அப்புவையா கேட்கவேணும்"
நாகம்மாவும் மரியதாசும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நாகம்மா என் முறைப்பெண்...."
விருத்தாசலமும் செமியோனும்



"இந்தக் கடலில் இவ்வளவு திரவியமா?"
மரியதாசும் குழுவினரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"வாடியில் மீன் சுமந்து...."
பிலோமினா



"உண்மையான கரையான் கடலுக்குத்தான் பயப்படுவான்"
செமியோன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"என்னை ஏமாத்தி விடமாட்டீர்களே ?"
செமியோனும் பிலோமினாவும்




"வாடைக்காற்று" முதலில் வீரகேசரிப் பிரசுரமாக நூலுருப் பெற்றது. பின்னர் திரைப் படமாகியது. ஏ. ஈ. மனோகரன் (செமியோன்), டாக்டர் இந்திரகுமார் (மரியதாஸ்), சந்திரகலா (பிலோமினா), ஆனந்தராணி (நாகம்மா), எஸ். ஜேசுரெட்ணம் (பொன்னிக்கிழவி), ஜவாகர் (கடலைச் சண்முகம்), பிரான்சிஸ் (சவரிமுத்து), பாலச்சந்திரன் (விருத்தாசலம்), கந்தசாமி (சூசை) முதலானோர் நடித்தனர். சிவதாசன், சுப்பிரமணியம் ஆகியோர் கமலாலயம் சார்பில் தயாரிக்க, பிறேம்நாத் மொறாயஸ் இயக்கினார். ஒளிப்பதிவினை ஏ. வி. எம். வாசகர் ஆற்றினார். திரைக்கதை வசனத்தைச் செம்பியன் செல்வன் செங்கை ஆழியானுடன் கூட்டாக எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செங்கை ஆழியான்

பூபாலசிங்கம் வெளியீடு
யாழ்ப்பாணம் : கொழும்பு.

Printed By: Unie Arts (Pvt) Ltd.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org